## அத்தியாயம் 15

# உயிர்த்தெழுதல் என்பதின் பொருள்

நவீன காலத்தில் நாம் காண்கிற மார்க்கங்களின் கொள்கைகளைப் பற்றிய அவநம்பிக்கை கொண்டவர்கள் இவ்வாறான கேள்விகளை எழுப்புகிறார்கள். “தனிப்பட்ட மனிதர்கள் தங்களது மனச்சாட்சி சேதப்படுத்தப்படாமலே மரணத்திற்குத் தப்புவார்களா?” ஆயினும், பவுலோ, கொரிந்தியரோ அந்தக் கேள்வியைக் கேட்கவில்லை என்பதை நாம் கண்டு கொள்ள வேண்டும். யூதர்கள் மற்றும் கிரேக்கர்கள் மத்தியில் வழக்கிலிருந்த பொதுவான சமய நம்பிக்கைகளின்படி, தனிப்பட்ட ஒருவரின் மனச்சாட்சி பௌதீக மரணத்தை மேற்கொள்ளும் தன்மையானது. பவுலின் அக்கறையோ மேலும் குறிப்பாக முக்கியத்துவம் பெற்றிருந்தது. கிறிஸ்துவில் மீட்கப்பட்டவர்கள் மரிக்கும் போது, அவர்கள் சரீர உருவிலேயே கர்த்தரோடு கடவுளின் பரலோக ராஜ்ஜியத்தில் வாழ்வார்கள் என்று பவுல் கூறி வந்தார். அதன் உட்பொருளானது சரீர உருவேயாகும். “உயிர்த்தெழுதல்” என்ற பதத்தின் பொருள், கல்லறையில் வைக்கப்பட்ட சரீரமானது, இயேசு கல்லறையிலிருந்து வெளிப்பட்டது போலவே, வெளியே வந்து காணப்படும், என்பதாக உள்ளது.

கர்த்தரின் இரண்டாம் வருகையும், கிறிஸ்தவ சகாப்தத்தின் முடிவும் சரீர உயிர்த்தெழுதலோடு கூடியே காணப்படும் என்று பவுல் வலியுறுத்திக் கூறினது பொதுவாகப் பிரபலமாயிருந்த கிரேக்க மார்க்கத்தாரின் நம்பிக்கையோடு வேறுபட்டிருந்தது. அதே சமயம், அவ்வாறான சரீரத்தின் இயல்பு மாமிசப்பிரகாரமான சரீரத்திற்கு மாறுபட்டிருக்கும் என்பதையும் அவர் ஒத்துக் கொண்டார் (15:42, 43). எனினும் உயிர்த்தெழுதல் பற்றிய எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கூற முடியும் என்றும் பவுல் தன்னைப் பற்றிப் பெருமை பாராட்டிக்கொள்ளவில்லை. அவரின் கருத்துப்படி, பொருளாவன ஆவியான “சரீரம்” பற்றிய கருத்துரைகள் நிலைமைகளுக்கு மாறுபட்டே காணப்படும் என்றே உள்ளது.

மனிதர்களாகப் பிறந்தவர்கள் மரணத்தை மேற்கொள்ள முடியும் என்ற கருத்துக்கு கிரேக்க மார்க்கத்தின் நம்பிக்கையில் எதிர்ப்பு இல்லாதபோதும், பாரம்பரியமான கிரேக்க சிந்தனைகள் பவுலின்

சமகாலத்தவரின் சிந்தனைகளிலிருந்து பெரிய அளவில் வேறு பட்டிருந்தது. *The Odyssey* என்ற காவியத்தின் தலைவன் “ஒரு நீண்ட மனச்சோர்பு கொண்ட தனிமையான இரவில் வாழும்” மரித்தவர்களை பற்றி கூறினார்.[1] ஒடிசியஸ், ஆவிகள் மற்றும் நிழல்கள் மானிடர் பலியிடப்படுவதற்காகக் காத்துக் கொண்டிருக்கும் துக்ககரமான காட்சியை முன் காண்கிறார். சூரிய ஒளியும் மழையும் காணப்படும் உலகின் எந்த ஜீவராசிகளும், hadēsவின் ஹேட்ஸின் நிழல் மண்டலம் (ᾅδης, *hadēs*) மேலாக விரும்பப்பட்டது. *Hadēs* என்பது மரித்தவர்கள் வாழும் பகுதியாகும். எபிரெயத்தில் சொல்லப்படும் שְׁאוֹל (*sh*$^{e}$*’ol*) என்ற பதத்திற்கு பழைய ஏற்பாட்டில் பல்வேறு அர்த்தங்கள் காணப்படுகின்றன. எசேக்கியேல் மரித்தவர்களின் வாசஸ்தலத்தைப் பற்றிப் பேசும்போது, கிரேக்க சிந்தனைகளில் காணப்படும் hadēs என்பதற்கு இணையாகவே பேசினார். அது ஒரு இருட்டான பகுதியாக, புறநம்பிக்கைக் கொண்ட ராஜாக்களும், அவர்களின் பரிவாரங்களும் அவர்கள் பரிசுத்தவான்களால் கொலைசெய்யப்பட்ட பிற்பாடு சென்ற ஒரு இடமாக நினைவில் கொண்டதாக அறியப்படுகிறது (எசே. 32:18-21). உயிர்த்தெழுந்த வாழ்வு என்பது, திடமானதாகவும் அதே சமயம் இக்காலத்தின் நிச்சயமில்லாத நிலைமைகளும், துயரங்களும் இல்லாததுமாகக் காணப்படும் என பவுல் சொல்லுகிறார்.

பல நூற்றாண்டுகளாகவே, கிரேக்கர்கள் தங்களது கடவுள் களின் உலகில், வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட புதிய தெய்வங்களை இணைத்துப் பின்னிவிடுவதில் நன்கு பழகியிருந் தார்கள். ஆனால் யூதர்களின் கடவுளோடு அதே மாதிரியான விவகாரங்களில் ஈடுபடுவது அவர்களுக்கு சாத்தியமாகக் காணப்படவில்லை. இயேசு கிறிஸ்துவின் பிதாவானவர் கிரேக்க தெய்வங்களின் விவகாரங்களில் அறிந்து கொள்ளப்பட்டபடியாக இல்லாமல், அவர் ஒரு வித்தியாசமான தனிவிதமான கடவுளாகக் காணப்பட்டார். கிரேக்கர் பலருக்கு அது இடறலாகக் காணப் பட்டது. யூதர்கள் தங்களது கடவுளைப்பற்றிக் கொண்டிருந்த அறிவு, அவர்களுக்கு நம்பமுடியாத அளவுக்கு அகங்காரம் நிறைந்ததாய்க் காணப்பட்டது.

கிரேக்க கலாச்சாரத்தில் வேர் கொண்டிருந்த சில கொரிந்தியக் கிறிஸ்தவர்கள், தங்களது பழைய கடவுள்களை விட்டொதுங் குவதில் மிக சாவதானமாகவே செயல்பட்டார்கள். கோவில் பூசைகளும் பலிகளும், பலியின் போஜனங்களும் முக்கியமானதாக விரும்பப்பட்ட தங்களது பழைய சமுதாய வாழ்விலிருந்து முற்றிலும் விடுபட அவர்கள் தயங்கினார்கள் (8:9, 10; 10:14). கிரேக்க கடவுள்களில் முன்கால பக்தர்கள் கிறிஸ்துவைக் கர்த்தராக அணைத்துக் கொண்டபோது, ஒருதெய்வ வழிபாடு புதிய அர்ப் பணிப்போடு விளங்கினதை அவர்கள் புரிந்து கொண்டார்கள். எனினும் கிரேக்க தத்துவ ஞான சிந்தனைகளை

ஒதுக்கி விடுவது அவர்களுக்குக் கடினமாகக் காணப்பட்டது. அது உலகப் பார்வையில் மிக நுணுக்கமாக உள்ளடங்கி விட்டிருந்ததால், அதிலிருந்து தப்பித்துக் கொள்வது முடியாத காரியம் என்பதாக அவர்கள் உணர்ந்தார்கள். அந்த மாதிரியான உலகப் பார்வையில் மரணத்திற்குப் பின்னான வாழ்வு முக்கியமானதாகக் கருதப்பட்டது. மரணத்திற்குப் பின்பான வாழ்வைப் பற்றிய நம்பிக்கைகளில் கிரேக்கர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையிலான மோதல்கள் தவிர்க்க முடியாதபடி அமைந்திருந்தன.

கொரிந்தியக் கிறிஸ்தவ சபையினர் அவர்களது மூன்று அங்கத்தினர் மூலமாக வழங்கியிருந்த ஒரு கடிதத்தில் (16:17) காணப்பட்ட கேள்விகளுக்கு பவுல் பதிலுரை கூறியிருந்தார். இது 7:1யிலிருந்தே தொடர்கிறது. அவர்களின் வெவ்வேறு கேள்வி களுக்கு அவர் “இப்போது அதைக்குறித்து” என்ற வார்த்தைகளில் (7:1; 8:1; 12:1) அறிமுகம் செய்கிறார். கொரிந்தியர் கேட்ட கடைசி கேள்விக்கு அப்போஸ்தலன் வந்து விட்டதாகவே தோன்றுகிறது; அது மரித்தவர்களின் உயிர்த்தெழுதலைப் பற்றியதாகும். இந்தக் கேள்விக்கு பவுல் இணைத்திருந்த முக்கியத்துவம், அவர்கள் முன்னதாக பிரயோகித்திருந்த அறிமுக மாதிரியின்றியே, அதில் வேகமாக ஈடுபடும்படியாக அவளாகத் தூண்டியிருக்கலாம்.

இன்னொரு சாத்தியமான கூறு என்னவெனில் அவர் அந்த குறிப்பிட்ட சொற்கோவையைத் தவிர்த்ததாகும். ஏனெனில் கொரிந்துவிலிருந்து அவர் பெற்றிருந்த கடிதத்தில், உயிர்த் தெழுதலைப் பற்றிய எந்தக் கேள்வியும் காணப்படவில்லை. காரியம் அவ்வாறாக உள்ள நிலையில் கொரிந்துவில் காணப்பட்ட வேறுபட்ட எண்ணங்களைப்பற்றி குலோவேயாளின் வீட்டாரின் மூலம் அவர் அறிந்திருந்தார் என்றே காணப்படுகிறது (1:11). இது கடிதத்தைக் கொண்டு வந்த மூன்று மனிதர்களிடமிருந்தோ, அல்லது வேறு ஒருவரிடமிருந்தோ அவர் அறிந்திருக்கலாம். அத்தியாயம் 7 லிருந்தே எழுதப்பட்டுள்ள அவரிடம் தொடுக்கப்பட்ட கேள்விக் கணைகளை அவர் எவ்வாறு அமைப்பான முறையில் கையாண்டார் என்பதிலிருந்து, உயிர்த்தெழுதல் பற்றிய கரிசனை விளக்கங்களும் அவர்களின் கேள்விகளில் அடங்கியிருந்தது என்பதைக் காண முடிகிறது.

## கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் (15:1-11)

**1அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள்.**
**2நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்;**

**மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. 3நான் அடைந்ததும்
உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்ன வென்றால்,
கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக
மரித்து, 4அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங் களின்படி மூன்றாம்
நாளிலே உயிர்த்தெழுந்து, 5கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும்
தரிசனமானார். 6அதன்பின்பு அவர் ஐந்நூறுபேருக்கு அதிகமான
சகோதரருக்கும் ஒரேவேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர்
இந்நாள் வரைக்கும் இருக்கிறார்கள், சிலர் மாத்திரம்
நித்திரையடைந்தார்கள். 7பின்பு யாக்கோபுக்கும், அதன்பின்பு
அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசன மானார். 8எல்லாருக்கும் பின்பு,
அகாலப்பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார். 9நான்
அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனா யிருக்கிறேன்; தேவனுடைய
சபையைத் துன்பப்படுத்தினதினாலே, நான் அப்போஸ்தலனென்று
பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல. 10ஆகிலும் நான் இருக்கிறது
தேவகிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை
விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப்
பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான்அல்ல, என்னுடனே இருக்கிற தேவ
கிருபையே அப்படிச் செய்தது. 11ஆகையால் நானாகிலும்
அவர்களாகிலும் இப்படியே பிரசங்கித்து வருகிறோம், நீங்களும்
இப்படியே விசுவாசித்திருக்கிறீர்கள்.**

கிறிஸ்துவிலுள்ள விசுவாசம், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் எனவும், அவர் திரும்பவும் வரப்போகிறார் என்பதுமான நம்பிக்கையைத் தொடர்ந்து எடுத்து செல்கிறது என்ற காரியத்திற்கு பவுல் அழுத்தம் காண்பிக்கிறார். அவரால் இரட்சிப்படைந்தவர்களும், தங்களது கல்லறைகளிலிருந்து வெளிப் படுவார்கள் என்பதற்கு கிறிஸ்துவின் சொந்த உயிர்த்தெழுதலே உத்திரவாதம் ஆக உள்ளது (15:20). அவர் இரண்டாவதாகக் காணப்படும்போது, கிறிஸ்துவில் மரித்தவர்கள் எழும்பி வருவதால் சரீர வடிவிலான நித்திய வாழ்வு உணரப்படும் (வெளிப்படும்). இதன் மூலம் அறியப்படும் வெளிப்பாடு என்னவெனில், இயேசுவின் சரீர உயிர்த்தெழுதல் இல்லாத பட்சத்தில், இரட்சிப்பு கிடைப்பதில்லை. கிறிஸ்தவத்திற்கு ஒரு விரிவான அஸ்திபாரத்தை ஏற்படுத்தும் ஒரு உண்மையாகும். இது அவரது தெய்வீகமும், அவரின் மரணமும் அதன் மூலம் நமக்கு உறுதிப்படுத்தப்படுகிறது. இந்த உண்மையானது விவாதம் அல்லது மாற்றம் செய்ய முடியாதது பேச்சு வார்த்தைக்குத் தேவையில்லாதது. கிறிஸ்தவர்கள் உறுதியாக நிற்பதற்கான தொட்டில் இது என்றும் கூறலாம்.[2]

**வசனம் 1.** கொரிந்துவில் பவுலும் அவரது தோழர்களும் **பிரசங்கித்த** சுவிசேஷத்தின் அடிப்படையான கருத்து என்ன வென்றால், கடவுள் இயேசுவை தமது வலது பக்கத்திலிருந்து ஆளுகை

செய்யும் வண்ணமாக அவரை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்தார் என்றும், இயேசு மறுபடியும் ஒரு நாளில் திரும்ப வருவார் என்பதுமாகும். அப்போஸ்தலன் மிகச்சாதுவாக தமது கல்வி புகட்டுவதில் அவர்களை வழிநடத்தினார். மரித்தோரின் உயிர்த்தெழுதலைப் பற்றிய அவரது விவாதத்தின் துவக்க நிலை என்னவெனில் கொரிந்தியர் தங்களது விசுவாசத்தை, தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் தம்மை வெளிப்படுத்திய கடவுளானவரிடமே வைத்துள்ளார்கள் என்பதை அவர்களுக்கு நினைவுறுத்துவதாக உள்ளது. அவர்கள் பவுலோடு இணைந்து தங்களது நிலைப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளபடியால் அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர் அறிவித்த சுவிசேஷத்தை அவர்கள் அணைத்துக் கொண்டுள்ளார்கள் (τὸ εὐαγγέλιον ὅ εὐηγγελισάμην ὑμῖν, *to euangelion ho euēngelisamēn humin*; "நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷம்"). அப்போஸ்தலனின் செய்தியானது நெகிழ்வற்றதாகக்; காணப்படுகிறது. இது கிரேக்கரின் மார்க்க சிந்தனைகளோடு ஒத்துப்போவதில்லை. இயேசு திரும்பி வரும்போது, ஒரு பொதுவான உயிர்த்தெழுதலும், உயிரோடிருப்பவருக்கும் மரித்தோருக்குமான நியாயத்தீர்ப்பும் காணப்படும் (காண்க 2 கொரி. 5:10). பவுல் கொரிந்துவிலுள்ள தமது உடன் விசுவாசிகளை ஒரு பொதுவான நம்பிக்கையிலும் நோக்கத்திலும் இணைத்த கட்டிற்கு நேராக எடுத்துச் செல்கிறார்.

மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து கேள்விகள் எழுப்புவது, கிறிஸ்தவ விசுவாச அறிக்கையை அவிசுவாசத்தில் இணைத்து விடுவதாக உள்ளது. மரித்தோரின் உயிர்த்தெழுதலை மறுதலிக்கிறவர்கள் விபரங்களையோ, விசுவாசத்தின் கருத்துக் களையோ மாத்திரம் மறுக்கவில்லை. அவர்களின் விசுவாச சந்தேகம் கடவுள் ராஜ்ஜியத்தின் அடிப்படையையே தங்களது கால்களின் கீழ் மிதித்துப் போடுவதாக உள்ளது. கிறிஸ்தவர்கள் எக்காலத்தும். நாசரேத்தின் இயேசுவே நெடுங்காலமாக வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியா என்ற உள்ளான விசுவாசத்தில் நிற்கிறார்கள். கடவுள் தமது குமாரனை நித்தியத்திலுள்ள மரித்தோரின் முதற்கனியாக எழுப்பியதின் மூலமாக அவரைத் தமது குமாரன் என்று அறிக்கை அளித்துள்ளார் (ரோமர் 1:4; 1 கொரி. 15:20). மானுடர் யாவருக்கும், கடவுளோடு ஒப்புரவாகுதலில் ஏற் படுவதற்கு இயேசுவே வாசலாயிருக்கிறார். கிறிஸ்துவின் கல்லறை வெறுமையாகக் காணப்பட்டபடியால், சரீர உயிர்த்தெழுதலின் செயல்பாடு ஏற்கெனவே ஆரம்பித்து விட்டுள்ளது. ஒரு விதத்தில், மரித்தோரின் உயிர்த்தெழுதலில் பங்கெடுக்கும் காரியத்தில் கிறிஸ்தவர்கள் ஏற்கெனவே ஈடுபடத் தொடங்கியுள்ளார்கள். உயிர்த்தெழுதலைக் குறித்து சந்தேகக் கேள்விகள் கேட்பது கிறிஸ்து விலுள்ள விசுவாசத்தை மறுப்பதற்கு

ஒப்பாக உள்ளது.

**வசனம் 2.** ஒரு கடினமான கிரேக்க சொற்றொடர் (τίνι λόγῳ εὐηγγελισάμην ὑμῖν εἰ κατέχετε, *tini logō euēngelisamēn humin ei katechete*, “நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால்”; 15:2) என்ற கிரேக்க சொற் கோவையின் மூலமாக, பவுல் கொரிந்தியக் கிறிஸ்தவர்களுக்கு, தாம் அவர்களுக்குப் பிரசங்கித்த அந்த சுவிசேஷச்செய்தியே அவர்கள் இரட்சிக்கப்பட ஏதுவாயிருந்தது என்பதை நினை வுறுத்துகிறார். மீட்கப்பட்டவர்கள் மத்தியில் அவர்களின் தொடர்ந்த வாழ்வு, அவர்கள் அணைத்து ஏற்றுக்கொண்ட அறிக்கையை உறுதியாகப் பற்றிக்கொள்வதையே சார்ந்துள்ளது. சத்தியத்தை விளம்புவதின் மூலமாக பவுல் தனது பங்கை அறிந்துள்ளார். கிறிஸ்துவின்மேல் தங்களது விசுவாசத்தைக் கொண்டதின் மூலமாக, அவர்கள் தங்களை அறிந்துக் கொண்டுள்ளார்கள். அவரும் அவர்களும் இணைந்து ஏற்படுத்தியுள்ள அஸ்திவாரம், அவர்கள் தாங்கள் அறிக்கையிட்டதை உறுதியாகப் பற்றிக் கொள்ளாத நிலையில் உடைந்து சிதறிவிடும். சில கொரிந்திய விசுவாசிகளை குறிப்பிட்ட சில விசைகள் வஞ்சித்து, மரணத்தின் பின்பாக சரீரப்பிரகாரமான வாழ்வு சாத்தியமானது என்றதான காரியத்தில் சந்தேகத்தை ஊன்றி விடுகின்றன. அவர்கள் ஆரம்பத்தில் தாங்கள் ஏற்படுத்திக் கொண்ட தங்களது அறிக்கையில் உறுதியாக நிற்கவில்லையென்றால், கிறிஸ்துவிலுள்ள அவர்களது நம்பிக்கை காணப்பட முடியாதபடி ஆகிவிடும். அவர்கள் **வீணானபடி நம்பிக்கை** கொண்டிருப்பதாகக் காணப்படும். அவர்களின் இரட்சண்யத்தினால் ஏற்பட்ட செய்தி, மரித்தோரின் உயிர்த்தெழுதலை உறுதியாக்குகிறது. பவுல் பிரசங்கித்த காரியங்களின் படியாகவே அவர்கள் இரட்சிக்கப் பட்டார்கள், அவர்கள் அவரது செய்தியை விசுவாசித்தார்கள். சரீர உயிர்த்தெழுதலானது சுவிசேஷத்தின் தற்செயலான நிகழ்வாக அல்லாமல், அது மத்திய நிலையிலுள்ளது, யாவருக்கும் நடுவாக அமைந்துள்ளது.

தொடர்ந்த தசம வருடங்களில் உயிர்த்தெழுந்த சரீரம் என்ற கருத்தைக் குறித்த விவகாரத்தில் கிரேக்க விசுவாசிகளின் தொடர்ந்த போராட்டம், பலவிதங்களில் வெளிப்பட்டது. கிறிஸ்தவர்களாக மாறிவிடும் போது, தாங்கள் ஒரு ஆவிக்குரிய, எழுத்தல்லாத, மரித்தோரின் உயிர்த்தெழுதலைப் பெற்றுக் கொண்டுள்ளோம் என்றபடியான எண்ணத்தை சிலர் கொண்டிருந்தார்கள். அவர்கள் பவுலின் சில போதனைகளை தவறாக அர்த்தங்கொண்டிருந்ததின் விளைவாக இது ஏற்பட்டிருக்கலாம் (உதாரணம், ரோமர் 6:4). சிலர் இமேனே, பிலேத்து போன்ற போதகர்களின் “உயிர்த்தெழுதல் ஏற்கெனவே கடந்து சென்றுவிட்டது” என்பதான செய்திகளை நம்பியிருக்கலாம் (2 தீமோ. 2:17, 18). ஞானஸ்நானம் என்னும்

நிலையில் பாவமாகிய மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலை அடைந்து கொண்ட போது, அவர்களின் ஆவி பரலோகத்தில் வாசம்பண்ணும் என்று அவர்கள் கூறினார்கள். அதே பொழுதில், சரீரவாழ்வானது இவ்வுலகிற்காக பதிவு செய்யப்பட்டுள்ளது. காண்கிறபடி, கொரிந்துவிலுள்ள எவரும் இதுவரை பவுலின் போதனைக்கு அவ்வளவு அதிக தூரமாய்ப் போயிருக்கவில்லை; எனினும் அவர்களில் சிலர், உயிர்த்தெழுந்த ஒரு சரீரம் ஆவிக்குரிய உலகில் வாழ முடியும் என்பதைப் புரிந்து கொள்வதில் அதிகப் போரா கண்டார்கள். இமேனே, பிலேத்துவின் தவறான போதனைகளுக்கு நேராய் வழிநடத்தும் விதையானது ஏற்கெனவே நடப்பட்டுவிட்டதாகக் காணப்படுகிறது.

**வசனம் 3.** கொரிந்துவிலுள்ள அவரது சகோதர, சகோதரிகளுக்கு, பவுல் கிறிஸ்தவ விசுவாசத்தின் துவக்க நிலையாகிய அடிப்படையான அறிக்கையை முன்வைத்தார். புதிய ஏற்பாட்டில் காணப்படும் விசுவாசத்தின் கருத்துரையாக, விசுவாச அறிக்கையை அவரது வார்த்தைகள் வெளிப்படுத்துகின்றன; அதுவே கிறிஸ்துவின் சுவிசேஷம், இஸ்ரவேல் மக்களுக்கு, உபாகமம் 26:5-9 வசனங்கள் அடிப்படையான அறிக்கையாகக் காணப்படுவதுபோல,[3] கிறிஸ்தவர்களின் அடிப்படை விசுவாசம் கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், கடவுளின் வல்லமையினால் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதாக உள்ளது. ἐν πρώτοις (*en prōtois*) என்ற சொற்கோவை, "எல்லாவற்றிற்கும் முதலாவதாக" என்று புரிந்து கொள்ளப்படும் (KJV; NKJV; ASV). ஆனால் விசுவாசத்தின் அடிப்படையான கருத்துகளில் பவுல் "பிரதானமாக ஒப்புவித்ததும்" (NASB; NIV; NRSV; ESV). என்றுள்ளது. அப்போஸ்தலன் கொரிந்தியரிடம் **தான் பெற்றுக்கொண்டதை** அவர் அவர்களுக்கு வழங்குவதாகக் கூறினார். பவுல் யாரிடமிருந்து செய்தியைப் பெற்றுக் "கொண்டார்"? கலாத்தியர் 1:11ல், அவர் மனிதரிடமிருந்து தான் பிரசங்கித்த சுவிசேஷ நற்செய்தியை பெற்றுக் கொண்டதில்லை என வலியுறுத்திக் கூறுகிறார். ஆயினும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைக் குறித்த சாட்சியை தாம் அப்போஸ் தலரிடமிருந்தும், பிற விசுவாசிகளிடமிருந்தும் கேட்டு, அதை ஏற்றுக்கொண்டிருந்தார் என்பதே உண்மையாகும். தனது மன மாற்றத்திற்கு முன்பாக தனக்குப் பிரசங்கிக்கப்பட்ட செய்தியிலிருந்து காணப்படும் எந்த விலகிப்போன போதகமும் அவரின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் என்பதைக் குறித்து அவர் எச்சரிக்கையாயிருந்தார். தாம் அவர்களுக்கு வழங்கியிருந்த செய்தியானது உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை கண்ணாரக்கண்டிருந்த அப்போஸ்தலர்களின் சாட்சியாகும் என்பதை கொரிந்தியர் அறிந்து கொள்ள வேண்டுமென்று பவுல் விரும்பினார். கிறிஸ்துவின் சிலுவை மரணமானது மானுடரின் பாவத்திற்குப்பதிலாக பாவ நிவாரணமாகச்

செலுத்தப்பட்டதாகும் என்பதான செய்தியை மற்ற அப்போஸ்தலர்கள் விசுவாசித்தபடியே அவரும் விசுவாசித்தார் (1 கொரி. 15:3). அந்த நம்பிக்கையானது பழைய ஏற்பாட்டில் மேசியாவைக் குறித்துச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலேயாகும்.

தனது பிரசங்கச் செய்தி வேதத்தின்படியானது என்று பவுல் எழுதும்போது, அவரது முதல் வாசகர்கள் அவர் பழைய ஏற்பாட்டு வேதபாகங்களையே பொருள் கொள்ளுகிறார் எனப்புரிந்து கொள்ள வேண்டும். இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும், “தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியும், அவருடைய முன்னறி வின்படியும்” (அப். 2:23) என்பதற்கான ஆதாரத்தை இந்த வேத பாகங்கள் வழங்குகின்றன. பிலாத்து இயேசுவை சிலுவைக்கு அனுப்பிய போது, அது அவரது குற்றங்களுக்காகவோ, அல்லது மனிதரின் திட்டங்களின் படியாகவோ, அவனால் நடப்பிக்கப் பட்டதல்ல. கிறிஸ்து பாடுபடவேண்டும் என்று சாட்சியாகக்கூறும் எந்தக் குறிப்பிட்ட வேதபாகமும் பவுலின் மனதில் ஒருவேளை இல்லாதிருந்திருக்கலாம். அதன்படியான வேதபாகங்கள் வேதத்தில் தாராளமாகக் காணப்படுகின்றன (ஏசாயா 53யைப் போன்று).

பவுலின் போதகத்தில், அவருக்கு முந்தினவர்கள் பிரசங்கித்த அதே செய்தி அடங்கியிருந்தது. கலாத்தியர் நிருபத்தில், தனது போதகம் ஒப்பற்றது என்றோ அல்லது அப்போஸ்தலர்களின் போதகத்திலிருந்து வேறுபட்டுள்ளது என்றோ அவர் எந்த உரிமையையும் பாராட்டவில்லை. சுவிசேஷமானது யூதர்களுக் கானது என்பதைப் போன்றே, அது புற இனத்தவருக்குமானது என்பதான ஒரு வெளிப்பாட்டை அவர் பெற்றிருந்தார்; அவரது பொறுப்பில் விழுந்த அந்தக்காரியத்தைக் குறித்தே அவரை கலாத்தியாவில் பின்தொடர்ந்தவர்களால் விவாதிக்கப்பட்டது. அவருக்கு முன்பாகத் தூண்களாகக் காணப்பட்டிருந்தவர்களிடமி ருந்து அவர் கற்றுக் கொண்டிருந்த அதே சுவிசேஷத்தின் அறிக்கையே அவரது அடிப்படையான நற்செய்தியாகும். ஆனால் இயேசு அந்த நற்செய்தியை யூதருக்கும், புற இனத்தவருக்கும் ஒரேவிதமாகப் பிரசங்கிக்கும்படியான கடமையை அவரிடம் கொடுத்தார் (காண்க கலா. 1:16).

**வசனம் 4. இயேசு மரித்தார், அவர் அடக்கம் பண்ணபட்டார், அவர் மூன்றாம் நாளில் உயிர்ப்பிக்கப்பட்டார்** என்ற பிரதான சத்தியத்தை, பவுலின் எந்த போதகமும் முந்திச்செல்லமுடியாது. பிற எல்லா சத்தியமான காரியங்களும் அதிலிருந்தே வெளிப் படுகின்றன. நிகழ்வான யதார்த்தமான காலத்தில் நடந்தேறிய நிகழ்வுகளின் விசுவாச அறிக்கை அது. அது ஒரு புதிரான அனுபவமோ, புராணம் போன்ற உறுதிப்பாடோ அல்ல. இயேசு அடக்கம் பண்ணப்பட்டது சொல்லப்பட்டதிலிருந்து, அவர் மரித்தார் என்ற

உண்மை, அவரின் வார்த்தையின்படியான எல்லா மருத்துவ வரையறைகளின் சாட்சியாக உள்ளது. இயேசுவின் அடக்கம் லூக்காவின் கூற்றை குறிப்பிடும்படியாக மெய்ப்பிக்கிறது. அப்போஸ்தலர் 1:3ல் கூறப்பட்டுள்ளபடி, "அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்" என்ற வசனத்தின் உண்மையை அவர் தெரிந்து கொள்ளப்பட்ட சிலருக்கு நிரூபித்துக் காட்டினார்.

பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டதின்படி நடந்தவைகளைப்பற்றி பவுல் என்ன சொல்ல விழைந்தார் என்பதை தெளிவாக கூறமுடியாதபடி உள்ளது. **வேதவசனத்தில் சொல்லப் பட்டுள்ளபடி** என்பது "அவர் மூன்றாம் நாளில் உயிரோ டெழுப்பப்பட்டார்" என்பதைக் குறிக்கும் உறுதி மொழியாக இருக்கலாம்; அல்லது அவர் அடக்கம் பண்ணப்பட்டு, பின்னர் "மூன்றாம் நாளில்" உயிர்த்தெழுந்தார் என்ற முழுவசனத்தைப் பற்றியதாக இருக்கலாம். அவரது அடக்கத்தை பற்றிய குறிப்பு தற்செயலானதாக சொல்லப்பட்டதாகத் தெரிகிறது. மரித்தவர்கள் அடக்கம் பண்ணப்படுகிறார்கள். இயேசுவின் அடக்கத்தைப்பற்றிய ஒரு சின்னக் குறிப்பை, அவர் தான் உறுதியாகத் தெரிவிப்பதை முழுமைப்படுத்துவதற்காக இணைத்திருக்கலாம். அதோடு கூட பழைய ஏற்பாட்டின் மிகக்குறைந்த பகுதியே, இயேசுவின் "மூன்றாம் நாள்" உயிர்த்தெழுதலுக்கு விளக்கம் தருவதாக அமைந்துள்ளது. யோனா கடந்து சென்ற அனுபவத்திற்கும், தமக்கு நேரிடப் போவதற்கும் இடையிலான ஒரு ஒப்பீட்டை இயேசு கூறியிருந்தார் (மத். 12:40), ஆயினும் அவர் யோனாவிற்கு நேர்ந்ததையும், தனக்கு நேரப் போவதையும் ஒருவிதமான மாதிரியான வகையில் தொடர்புபடுத்திச் சொல்வதாக உள்ளது. யோனா கூறின எதுவும், கிறிஸ்துவின் மூன்றாம் நாள் உயிர்த்தெழுதலைச் சுட்டிக் காட்டவில்லை. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனத்தோடு, கிறிஸ்துவைப் பற்றியத்தொடர்பை பவுல் ஏற்படுத்த விழைவது அடக்கத்தைப் பற்றியதாக இல்லாமல், உயிர்த்தெழுதலைப் பற்றியதாக உள்ளது. அப்போஸ்தலர் 2:25-28ல் சொல்லப் பட்டுள்ளது. ஆவண குறிப்பின் மூலமும் பவுலின் கடிதங்களிலிருந்தும் அது தெளிவாகிறது. மூன்றாவது நாளை தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல் என்பதாக பவுல் வேறெங்கும் கூறவில்லை.

**வசனம் 5.** பேதுருவின் பெயரை **கேபா** எனச் சொல்லுவதையே பவுல் அதிகமாக விரும்பினர். அவர்களது இரண்டு கடிதங்களில் பேதுருவின் பெயரைக் குறித்துள்ளார் (கலாத்தியர்; 1 கொரிந்தியர்).

பவுல் அவரை "பேதுரு" என்று இரண்டு தடவையும் (கலா. 2:7, 8) "கேபா" என்று எட்டு தடவைகளும் (1 கொரி. 1:12; 3:22; 9:5; 15:5; கலா. 1:18; 2:9, 11, 14) அழைத்துள்ளார். இவ்விதமான அவரது பெயர்ப்பிரயோகம், அவர் கிரேக்கத்தை விட, அரமேயத்தை அதிகம் விரும்புவதைக் காண்பிக்கிறது. பவுலின் கடிதங்களைத்தவிர, பிற எழுத்துக்களில் முரட்டுக் குணம் கொண்ட அந்த அப்போஸ்தலன் யோவான் 1:42ல் மட்டுமே "கேபா" என அழைக்கப்படுகிறார். லூக்கா 24:34ல் எழுதப்பட்டுள்ள, இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்னாக அவர் காணப்பட்ட சம்பவங்களையே பவுல் எடுத்துக் கூறுவதாக உள்ளது; இந்த அப்போஸ்தலன் லூக்காவின் எழுத்தில் "சீமோன்" என்று குறிப்பிடப்படுகிறார்.

இந்த வசனத்தில் பவுல் குறிப்பிட்டுள்ளபடி இயேசு பன்னிருவருக்கும் காணப்பட்டது லூக்கா 24:36-43யிலும், யோவான் 20:19-23யிலும் ஆவணப்படுத்தப்பட்டதையே சுட்டுகிறது. எனினும் பன்னிருவர் எல்லாரும் அங்கு காணப்படவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டியதாகிறது. யூதாசும், தோமாவும் கூட அங்கு இருக்கவில்லை. தொடர்ந்த நாட்களில், உயிர்த்தெழுந்த கர்த்தரை பிறர் யாவருக்கும் அப்போஸ்தலர்கள் அறிவித்து வந்தார்கள் என்பதும், அவர்களின் சாட்சி இயேசுவின் பரம் பரையாகத் தொடர்ந்தது என்பதும் நாம் அறிந்து கொள்ள வேண்டியதாகும்.

சுவிசேஷத்தின் விபரங்களில் இயேசுவின் சரிதை சொல்லப் பட்ட பிற்பாடு, இயேசுவோடே நெருங்கி வாழ்ந்திருந்த அந்தக் குழுவினர் "பன்னிருவர்" என்று இரண்டு தடவைகள் மாத்திரம் அழைக்கப்படுகின்றனர் (அப். 6:2; 1 கொரி. 15:5). இந்த இரண்டு குறிப்புகளிலும் "அப்போஸ்தலர்கள்" என்பது "பன்னிருவரை" குறித்துச் சொல்லப்பட்டதாகக் கூற முடியவில்லையெனினும், தர்க்கரீதியாக அதுவே யதார்த்த நிலையாகும். வெளிப்படுத்தின விசேஷம் 2:14ல், "பன்னிரெண்டு அப்போஸ்தலர்" என்ற சொற்களுடன் காணப்படுகிறது. யூதாவிற்குப் பதிலாக மத்தியாஸ் தெரிந்து கொள்ளப்பட்ட பிற்பாடு, அவர் பதினொரு அப்போஸ் தலர்களோடு சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்று சொல்லப் பட்டுள்ளது (அப். 1:26). இதன்படியாக, பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவின் உரை, மற்ற பதினொரு அப்போஸ்தலரின் ஐக்கியத் திலேயே நடத்தப்பட்டது என்பது சந்தேகமுமின்றித் தெரிகிறது (அப். 2:14).

"அப்போஸ்தலர்" என்பதற்கு முதலாம் நூற்றாண்டின் சபை என்ன பொருள் கொண்டிருந்தது? இது இயேசுவின் தனிப்பட்ட தோழர்களான பன்னிரெண்டு மனிதருக்கும் மாத்திரம் உரியதா (மத். 10:2; லூக். 6:13)? ஒரு விதத்தில், புதிய ஏற்பாட்டில் "அப்போஸ்தலர்" என்று சொல்லப்பட்டதின் பிரயோகம் தொழில் நுட்ப முறையிலும், மூலப்பொருளின் முறையிலும் சிறிது குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

மூலப்பொருள் என்றபடி, அப்போஸ்தலன் எனப்படுபவர், ஒரு திருப்பணி அவரிடம் அளிக்கப்பட்டுள்ளவர் பவுலும் இயேசுவின் சகோதரரான யாக்கோபை, திருச்சபையின் பிற தலைவர்களோடு "அப்போஸ்தலர்" என்றே கலாத்தியர் 1:19ல் அழைக்கிறார். இந்தபடியாக, பதத்தின் பிரயோகம் மிகப் பொருத்தமாகவே உள்ளது. ஏனென்றால், பேதுருவும் யோவானும் எருசலேம் திருச்சபையில் கொண்டிருந்த அதேவிதமான தலமைத்துவப் பொறுப்பில் யாக்கோபும் பங்கு கொண்டிருந்தார் (காண்க கலா. 2:9). பவுலும் பர்னபாசும் அந்தியோகியாவிலுள்ள திருச்சபையில் அப்போஸ்தலராகத் திருப்பணியாற்றினார்கள் (அப். 13:1-3). இயேசுவும் கூட அப்போஸ்தலன் (எபி. 3:1) என்று அழைக்கப் படுகிறார் (கடவுள் அவருக்குத் தமது திருப்பணியை நிறைவேற்ற ஒப்புக்கொடுத்தபடியால்). யூதேயாவிலுள்ள வறியவருக்காக நிதி சேகரிக்கும் படியாக தாம் அனுப்பிய சகோதரர்களைக் குறிக்கும் போது பவுலும் அந்தப் பதத்தையே பிரயோகிக்கிறார். NASBயில் அவர்களை "ஸ்தானாபதிகள்" எனக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது (2 கொரி. 8:23).

இயேசு உயிர்த்தெழுந்ததற்குப் பின்னான முதல் பெந்தெகொஸ்தன்று, பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுவதற்கு முன்னாகவே அப்போஸ்தலர், ஆவியினால் வழிநடத்தப்பட்டு, தங்களது எண்ணிக்கையை பன்னிரெண்டுக்குக் கொண்டு வந்திருந்தார்கள் (அப். 1:21-26). அந்தப் பன்னிரெண்டு அப்போஸ்தலரும், அவரின் ஊழிய ஆரம்பத்திலிருந்தே அவரோடு தரித்திருந்து, உயிர்த்தெழுந்த கர்த்தரை நேரில் கண்டவர் களாயிருக்க வேண்டும் என்பதாக அவர்கள் விரும்பினார்கள். "பன்னிரெண்டு" என்பது யாக்கோபின் பன்னிரெண்டு குமாரரோடு தொடர்பு கொண்டு, இஸ்ரவேலரின் பன்னிரெண்டு கோத்திரங் களை அடையாளம் காட்டுவதாக முக்கியத்துவம் கொண்டுள்ளது. ஆயினும், நாம் காண்கிறபடி, பன்னிரெண்டு பேர்களைப் பற்றிய, அவர்கள் ஒன்றாக நடந்து திரிந்து நடப்பித்த எந்தக் கிரியைகளும் அப்போஸ்தலர் நடபடிகளில் குறிப்பாகக் காணப்படவில்லை. யோவானின் சகோதரன் யாக்கோபு ஏரோது ராஜாவினால் கொலை செய்யப்பட்டபோது, அவருக்குப் பதிலாக வேறொருவரையும் நியமித்ததாகவும் சொல்லப்படவில்லை (அப். 12:2). பவுல், பன்னிருவரோடும் கூட சமமான நிலையில் தாம் உள்ளதாக உரிமை பாராட்டிக் கொள்கிறார் (1 கொரி. 9:1; 2 கொரி. 12:12; கலா. 1:1). ஆயினும் அவர் எவருக்கும் பதிலாக நியமிக்கப்பட்டவராகத் தன்னைக் கூறிக் கொள்ளவில்லை. மேலும், அவர் தனது அப்போஸ்தல ஊழியத்தை வித்தியாசமானதாகவே கொள்கிறார், அகாலப்பிறவி என்று தன்னைக் கூறிக்கொள்ளுகிறார் (1 கொரி. 15:8-10). அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாகத் தன்னைக் காண்பிக்கிறார்.

பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவின் சபையின் தூதுவர்களாக இருந்ததை அடையாளப்படுத்தி, லூக்கா, பவுலை பர்னபாவின் கூட்டுறவில் உள்ளவர் என்றே அழைக்கிறார். அப்போஸ்தலர் நடபடியின் ஆக்கியோன் “பன்னிரெண்டு அப்போஸ்தலன்” என்ற பெயரை, இயேசுவின் உயிர்த்தெழுதலை கண்களால் கண்ட இயேசுவின் தோழர்களுக்கு மாத்திரமே வழங்குகிறார்.

சபையின் தலைமைத்துவ பதவிகளைக் குறித்து பவுல் வரிசைப் படுத்தும்போது, அவர் கூறுவது “கடவுள் சபையில் முதலாவது அப்போஸ்தலரையும்” (12:28, 29; காண்க எபே. 4:11). அப்போஸ்தலர் நடபடிகளிலும், கொரிந்தியருக்கு எழுதின நிருபத்திலும் “பன்னிரெண்டுபேர்” என்ற சொற்றொடர், அப்போஸ் தலருக்கு சாதாரணமாகவே வழங்கப்படும் முறையாகவே உள்ளதாக தெளிவாகக் காணப்படுகிறது. அப்போஸ்தலன் என்ற உரிமைக்கு பவுல் தன்னை ஏற்படுத்திக் கொண்டது அவருக்கு மிக முக்கியத்துவம் பெற்றது, ஏனெனில், அது சமூகத்தில் உயர் நிலையிலுள்ள ஒரு குழுமத்தினருக்கான மதிப்பைக் காட்டுவதாக அல்லாமல், அந்தப்பதவியோடு இணைக்கப்பட்ட அதிகாரத்தின் படியானதாக உள்ளது. பேதுருவுக்கும், யோவானுக்கும், பவுல் சொன்னதும், செய்ததும் கடவுளின் கிரியையின் படியானதாகவே காணப்பட்டது (1 கொரி. 2:13; 2 கொரி. 12:12). ஆவியானவரின் பிற அற்புத வெளிப்படுத்தல்களைப் போன்றே இதுவும், புதிய ஏற்பாட்டிலுள்ள ஆவியானவருடைய தூண்டுதலின் சாட்சியின் வருகையினாலும் புதியஏற்பாட்டுச் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்ட தினாலும் காணப்படாமற் போயிற்று. முதல் நூற்றாண்டு சபையில், ஆவியானவரால் ஆளுகை செய்யப்படும் அப்போஸ்தலரின் வழி நடத்துதல், தொடர்ந்த நூற்றாண்டுகளில் காணப்படாத முறைகளில், அத்தியாவசியமாகக் கருதப்பட்டது.

**வசனம் 6.** உயிர்த்தெழுந்த இயேசு **ஐந்நூறு பேருக்கும் அதிகமான சகோதரர்களுக்குக் காணப்பட்ட** சம்பவத்தைக் குறித்து, பவுல் மாத்திரமே எழுதிவைத்துள்ளார். அவர்களில் அதிகமான பேர் அப்போதும் உயிரோடுள்ளதாகவும், சிலர் மாத்திரம் **நித்திரை யடைந்து** விட்டதாகவும் அவர் கூறுகிறார். ஒழுங்கான முறையில், பவுல் மரணத்தைக் குறித்து, “நித்திரை” என்றே கூறுகிறார் (κοιμάω, *koimaō* - 1 கொரி. 7:39; 11:30; 15:18, 20; 1 தெச. 4:15). உயிர்த் தெழுதலுக்குப் பின்பாக, இயேசு அந்தப் பெரிய கூட்டத்தாருக்கு எருசலேமில் தோற்றமளித்து, சுவிசேஷத்தின் விபரங்களிலோ, அப்போஸ்தலர் நடபடிகளிலோ குறிக்கப்படாமலுள்ளது பொருத்த மில்லாமல் காணப்படுகிறது. அதனால்தான், வேதாகம மாணாக்கர் 1 கொரி. 15:6ல் சொல்லப்பட்டுள்ள அந்த நிகழ்வு, அம்மாதிரியான நம்பிக்கையைப் பற்றிய நிச்சயமான அறிவு இல்லை என்ற போதிலும்,

அது கலிலேயாவில் நடந்திருக்கலாம் எனக் கூறி வருகிறார்கள். கலிலேயாவில், உயிர்த்தெழுதலுக்குப் பின்னாக இயேசு தோன்றின காரியம் வேத அறிஞர்களைக் கவர்ந்திழுக்கிறது. இதற்கான விளக்கங்கள் யாவும், உயிர்த்தெழுதலுக்குப் பின்பான சபையானது எருசலேமிலிருந்து கலிலேயாவுக்கு பெரிய எண்ணிக் கையில் திரும்பியது என்ற நம்பிக்கையிலேயே கட்டப்பட்டுள்ளது.[4]

மாற்கு கூறுகிறபடி, கர்த்தர் தமது சீஷர்களுக்குத் தாம் கலிலேயாவில் அவர்களுக்குக் காணப்படுவதாக வாக்களித்தார் (மாற்கு 14:28; 16:7). அதே மாதிரியான வாக்குத்தத்தம் மத்தேயு விலும் உள்ளது. அதன் பிரகாரம் இயேசு கலிலேயாவிலுள்ள ஒரு மலையிலே தான் அவர்களுக்கும் காட்சியளித்தார் (மத். 26:32; 28:16, 17). லூக்காவின் சுவிசேஷத்தில், கலிலேயாவில் இயேசு காட்சியளித்ததைக் குறித்து எதுவும் சொல்லப்படவில்லை; ஆயினும், யோவான் சுவிசேஷகன், இயேசு சீஷர்கள் கலிலேயாவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அவர்களைக் கண்டதாகவும், பேதுருவுடனும், "மற்ற சீஷர்களுடனும்" பேசினதாகவும் சாட்சியாகக் கூறியுள்ளார் (யோவான் 21:4-14). 1 கொரிந்தியர் 15:6ல் சொல்லப்பட்டுள்ள நிகழ்வு கலிலேயாவில் நடந்ததோ, அல்லவோ ஆயினும், பவுல் கூறுகிறபடியான ஐநூறுபேர் குறித்த சாட்சியில் அவரின் உறுதி தெளிவாக உள்ளது. மேலும் அந்த சாட்சிகளில் அதிகமானபேர் அப்போதும் உயிரோடுள்ளதாக அவர் தமது வாசகர்களை நினைவுறுத்துகிறார். அவர்களின் சாட்சிகளைப் பொறுத்தமட்டில் எந்த சந்தேகத்திற்கும் இடமில்லை. அதைக்குறித்து ஆர்வம் கொண்டவர்கள், தற்போது உயிரோடுள்ளவர்களைக் கண்டுபிடித்து, அவர்கள் நேரில் கண்டு கொண்டதைப் பற்றி விசாரித்துத் தெரிந்துக் கொள்ளலாம்.

**வசனம் 7. யாக்கோபுக்கு** இயேசு காணப்பட்டதும், பவுலினால் மாத்திரமே குறிக்கப்பட்டுள்ளது. இங்கே சொல்லப்பட்டுள்ள யாக்கோபு கர்த்தருடைய சகோதரரே என்பது நிச்சயமாகத் தெரிகிறது (கலா. 1:19). யோவானின் சகோதரனாகிய யாக்கோபு முன்னமே மரித்துப் போயிருந்தார் (அப். 12:2). அதே நேரம் கர்த்தரின் சகோதரனாகிய யாக்கோபு எருசலேம் திருச்சபையில் முக்கியத் தலைவராகப் பணியாற்றியிருந்தார் (அப். 12:17; 15:13; 21:18). கர்த்தரின் சகோதரர்களான யாக்கோபு, யூதா இருவரின் மனமாறுதலும், இயேசுவின் இந்தத் தோற்றத்தின் மூலமாகவே ஏற்பட்டிருக்கலாம் (அப். 1:14). அப்போஸ்தலருக்கு இயேசு இவ்விதமாக இரண்டாம் தரம் காணப்பட்டது யோவான் 20:26-29 அல்லது அப்போஸ்தலர் 1:1-9 களின்படியானதாயிருக்கலாம். இந்த வசனங்களில் சொல்லப்பட்டுள்ள 15:5ல் குறிக்கப்பட்டுள்ள "பன்னிருவரிடமிருந்து" வேறுபடுத்திக் கூறுவது வேதத்தின் ஆதாரங்களுக்கு முரண்பாடாகவே காணப்படும்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் காட்சி குறித்த விபரம் முழு

மையாகச் சொல்லப்படவில்லை பவுல் அவ்வாறான எண்ணத்தில் நாட்டம் கொண்டிருக்கவில்லை. அவர் எண்ணிக்கையாகக் கூறி யுள்ள தோற்றங்களின்படி, இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த் தெழுந்ததை நிரூபிப்பதற்கான போதுமான சரித்திரப்பிரகாரமான சாட்சிகள் உள்ளன. கர்த்தரின் சரீரத் தோற்றத்தைப் பற்றிய பிற சில நிகழ்வுகளும் பெண்கள் வெறுமையான கல்லறையைக் கண்டதற்குப் பிற்பாடு நிகழ்ந்தவைகளில் சொல்லப்பட்டுள்ளன. சரித்திரப் பிரகாரமான சாட்சியின் உண்மையை, நவீன சோதனை சாலையில் மதிப்பிடுபவர்களும், வேறு சிலரும் மட்டுமே, இயேசு மரித்தோரிலிருந்து மானிட சரீரத்தோடு, மெய்யாகவே எழுத்துப் பிரகாரமாக உயிர்த்தெழுந்தார் என்பதை, மட்டுப்படுத்தி, காரண விவாதங்களை எழுப்புகிறார்கள்.

**வசனம் 8.** தமஸ்குவுக்குச் சென்ற பாதையில் இயேசு தனக்குக் காட்சியளித்ததை (அப். 9:3-6) அதில் குறிப்பிடும் படியான வித்தியாசம் காணப்பட்டிருந்தாலும், அதை மற்ற அப்போஸ்தலர் போன்றவர்களுக்கு காட்சியளித்த மாதிரியின்படியே. பவுல் தன்னுடையதாகக் கொண்டுள்ளார். கர்த்தர் தமது பரமேறுதலுக்குப் பிற்பாடே பவுலுக்குத் தரிசனமானார் (அப். 1:9). ஆனால் பிறர் அநேகருக்குத் தமது பரமேறுதலுக்கு முன்பதாகவே காட்சி அளித்திருந்தார். கர்த்தரை நேரடியாகக் கண்டது அப்போஸ்தல ஊழியத்திற்கு ஒரு தகுதியாகக் காணப்பட்டது (1 கொரி. 9:1). தாம் உயிர்த்தெழுந்த கர்த்தரைத் தரிசித்ததற்கும், கர்த்தர் மற்றவர் களுக்குக் காணப்பட்டதற்கும், உள்ள வேறுபாட்டை பவுல் ஏற்றுக் கொண்ட போதிலும், அவர்கள் உயிர்த்தெழுந்த கர்த்தரைக் கண்டதைப் போன்றே தமது அனுபவமும் உள்ளதாக பவுல் எண்ணினார். பவுல் தனக்கு அப்போஸ்தல ஊழியம் இயேசுவால் வழங்கப்பட்டதை கூறும்போது, தன்னை அகாலப்பிறவி (ὡσπερεὶ τῷ ἐκτρώματι, *hōsperei tō ektrōmati*) எனக் கூறுகிறார். அப்போஸ்தலரோடு தன்னை இணைத்துக் கொண்டது சாதாரண ஒழுங்கு முறையின் படியானதல்ல என்ற போதிலும், தமஸ்குவுக் குப்போகும் வழியில் நடந்த நிகழ்வு எல்லாவிதத்திலும் தன்னை அப்போஸ்தலனாகத் தகுதி ஏற்படுத்துவதாக அவர் உறுதியாகக் கூறுகிறார். விசுவாசம், கிரியை என்ற காரியங்களில், திருச்சபைகள் அவர் அப்போஸ்தல அதிகாரத்தைப் பெற்றுள்ளதாக மதித்துக் கொள்ள வேண்டும் என்பதாக அவர் எண்ணுகிறார். இதற்கு செயல் முறையான தொடர்பு என்னவெனில், நேரடியாகக் கூறினதாயினும் சரி கடிதங்களின் மூலமாகச் சொல்லப்பட்டதாயினும் சரி அவரது அறிவுறுத்தல்கள் கர்த்தரிடமிருந்து பெற்றுக் கொண்டதாகவே ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என அவர் நம்புகிறார்.

ἔκτρωμα (*ektrōma*, “அகாலப்பிறவி”) என்ற அறிவு பூர்வமான

பதத்தை பவுல் தெரிந்து கொண்டதற்கு நாம் என்ன பொருள் கொள்ளலாம்? புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு தடவை மட்டுமே, இந்தப்பதம் காணப்படுகிறது, ஆனால் புராதன கிரேக்க மருத்துவ இலக்கியங்களில் இது மிகச் சாதாரணமாகக் காணப்பட்டது. உயிரோடு பிறவாத குழந்தையையோ, அல்லது கருவிலேயே சிதைந்துபோன குழந்தையையோ இது காண்பிக்கிறது; அதாவது காலத்திற்கு முன்னே நிகழ்ந்த ஒரு அசாதாரணமான நிகழ்வை இது தெரிவிக்கிறது.[5] எப்படியாக எண்ணிக்கொண்டாலும், அப்போஸ் தல ஊழியத்துக்கான பவுலின் அழைப்பு, எதிர்பார்த்திருந்த காலத்திற்கு முன்னதாகக் காணப்படவில்லை. எனினும், தமஸ்கு வுக்குப் போகும்பாதையில் கர்த்தர் பவுலுக்குத் தரிசனமானது, அப்போஸ்தல ஊழியத்திற்கான தெரிந்து கொள்ளுதல் ஏறக்குறைய முடிந்து போயிருந்த காலத்திலேயே நடந்த நிகழ்வாகும்.

மேற்கூறப்பட்ட ஒப்புடைமையை பவுல் தெரிந்து கொண்டதற்கு மிக எளிமையான விளக்கம் என்னவென்றால், அவர் தனது அழைப்பின் ஒரு குறுகலான காரியத்தைப் பற்றிய முனைப்பு கொள்வதையே விரும்பினார். இவ்வாறான மேலும் அதிகமான பொருத்தங்களைப் பற்றிய பகுப்பாய்வுக்கு இந்த ஒப்புடைமையோ அல்லது வேறெதுவோ தெரிந்து கொள்ளப்பட வேண்டியதில்லை. ektrōma என்ற கிரேக்க பதம், ஒரு குழந்தை எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வுகளுக்கு வெளியே பிறப்பதைக் குறிக்கிறது. பவுலின் மனமாற்றம் மற்றும் அப்போஸ்தலத்துவம் இவைகள் இரண்டுமே எதிர்பார்க்கப்பட்ட ஒழுங்கின் படியாக அமைந்திருக்கவில்லை. அவ்வாறான பொருளில் கூறும்போது, அவர் “அகாலப் பிறவியாகவே” பிறந்தவர். இந்த மொழி அமைப்பைக் குறித்து மேலும் அதிகமாக விளக்கத்தேவையில்லை.

இன்னொரு கேள்வி எழும்புவது என்னவென்றால்: பவுலின் எழுத்துக்களின் குறிக்கோள் என்ன, **எல்லாவற்றிற்கும் பின்பு அவர் எனக்குக் காட்சியளித்தார்** என்பதே. இதற்குப் புற இனத்தவரின் அப்போஸ்தலன் அர்த்தங்கொள்வது என்னவெனில், அப்போஸ் தலரோடு அவர் எல்லாருக்கும் பின்பு சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்றும், அவருக்குப் பின்பாக எவரும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டாம் என்பதாகவும் எண்ணிக் கொள்ளலாம். இன்னொரு சாத்தியம் என்னவெனில், “எல்லாருக்கும்பின்பு” என்ற மொழி தாழ்மையைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். “எனக்கும்” எனப்படும் இறுதி வார்த்தைகள் கிரேக்க பதமான κἀμοί (*kamoi*) “காமோய்” இன் மொழி பெயர்ப்பாகும், அது நம்பமுடியாத ஒரு நிலையைக் குறிக்கிறது என்னைப்போன்ற ஒருவனுக்கும் “கூட அவர் காட்சி யளித்தார் என்பதாக.” மூன்றாவதான சாத்தியம் என்னவென்றால் “எல்லாருக்கும்பின்பு” என்பது, அந்த வரிசையை முடித்துக்

கொள்வதற்கான ஒரு சாதாரண வடிவமேயாகும்.

இயேசு எழுத்தின்படியாக சரீர உயிர்த்தெழுதலை அடைந்து கொள்ளவில்லை என்ற எண்ணத்தை வலிமை இழந்து போகச் செய்வதற்கான அப்போஸ்தல அதிகாரத்தை பவுல் பிரயோகப் படுத்திக் கொள்ளும் காரியத்தில், தாழ்மையான "எல்லாருக்கும் பின்பு" என்ற மொழி பொருத்தமானதாகக் காணப்படவில்லை. தனது அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்காகப் பவுல் செய்ய வேண்டிய அடிப்படையான காரியங்களை நோக்கும் போது "எல்லாருக்கும் பின்பு" என்ற சொற்றொடர், அப்போஸ்தலரின் வரிசை, அவர்தாம் அந்த வரிசையில் சேர்க்கப்பட்ட பின்பு முடிந்துபோயிற்று என்ற உறுதியான எண்ணத்தை சுட்டுவதாக உள்ளது. எவ்வாறாகக் கூறினும், அவர் ஒரு அப்போஸ்தலனே, அதன்படி அவர் உயிர்த் தெழுதலைகுறித்து தீர்மானமாகப் பேசுவதற்குத் தகுதி படைத்தவர்.

**வசனம் 9.** இயேசுவின் உயிர்த்தெழுந்த தோற்றங்களை பவுல் வரிசைப்படுத்திக் கூறுவது, விசுவாசிகளின் சரீர உயிர்த்தெழுதலை வலியுறுத்திக் பேசும் அவரின் நம்பிக்கைச் செயலுக்கு முன்னோடி யாகவே காணப்படுகிறது. உயிர்த்தெழுந்த இயேசுவைக் குறித்த அவரது சாட்சி. தமஸ்குவின் சாலைச் சம்பவத்திற்கும், அதைத் தொடந்த அவரின் அப்போஸ்தல ஊழியத்திற்கான அர்ப்பணிப் பிற்கும் ஆகிய பழைய நினைவுகளை நினைவில் நிறுத்துகிறது. 15:9-11 வசனங்களின் முதன்மை நோக்கம் பவுலின் தனிப்பட்ட அனுபவங்களைக் குறித்துச் சொல்வதாக அல்லாமல், உயிர்த் தெழுந்த கர்த்தரின் சரீர பிரசன்னத்தையே உணர்த்துவதாகக் காணப்படுகிறது.

பவுல் ஊழியத்திலுள்ள இரண்டு வரையறையான சத்தியங் களில் ஒப்புரவாக விரும்பவில்லை. முதலாவதாக, அவருடைய அப்போஸ்தலத்துவம் பன்னிரண்டு அப்போஸ்தலரின் அதே வரிசையில் இருந்தது. அவரது அதிகாரம் அவைகளிலிருந்து பெறப்பட்டது அல்ல, அது எந்த மானுட ஆதாரங்களிலிருந்து கிடைக்கப் பெற்றதும் அல்ல (கலா. 1:1). கர்த்தரே அப்போஸ் தலனை பேசும்படி அமர்த்தினார். இரண்டாவதாக, கர்த்தர் தனக்கு அளித்த மதிப்பிற்கு ஏற்றபடியாக, அப்போஸ்தலன் தனது சொந்த தகுதியின்மை பற்றிய ஆழமான உணர்வை தன்னில் கொண்டி ருந்தார். ஒரு விதத்தில், அவர் நான் **அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்**, ஆயினும் அவருடைய மனத்தாழ்மை எந்த இரண்டாம் நிலையிலிருந்தும் வரவில்லை. என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவர் **தேவனுடைய சபையைத் துன்பப் படுத்தினதினாலே** தன்னை மிகக்குறைந்த மதிப்பில் கொள்கிறார். ஒரு காலத்தில், தான் கிறிஸ்தவர்களை வேட்டையாடி, அவர்களை விசாரணைக்கும் மரணத்திற்கும் ஒப்புக்கொடுத்தார் என்பதை பவுல் மறக்கமுடியாத நிலையிலிருந்தார் (அப். 22:4; 1 தீமோ. 1:12-14). சபையைத்

துன்பப்படுத்தினதின் மூலமாக, தாம் கிறிஸ்துவுக்கு எதிராகத் தனது கோபத்தை, எரிச்சலை ஊற்றினதை அவர் உணர்ந்து கொண்டிருந்தார் (அப். 9:4, 5). அவர் பின்னாகத் திரும்பி நோக்கும்போது, தனது வாழ்வில் தாம் கிறிஸ்துவுக்கு எதிர்த்து நின்ற அந்த இருண்ட காலத்தைக் காண நேர்ந்தது.

பவுல் ஒரு வைராக்கியம் நிறைந்த யூதராகவும், சபையைத் துன்பப்படுத்துபவராகவும் காணப்பட்டது நேர்மறையான விளைவுகளன்றி காணப்படவில்லை. இந்த அவரின் பின்னணி, அவரது பணிக்கு மிக ஆழமான நம்பிக்கைத்தன்மையை வழங்கியது. கிறிஸ்தவர்களை அவர் எதிர்த்து நின்ற ஆரம்பங்களிலிருந்தே, சுவிசேஷத்தின் செய்தியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளும்படியான உள்ளார்ந்த அறிவை அவர் பெற்றிருந்தார். நசரேயரின் பின்னடியாளர்களை யூததேசத்தின் திரைச்சீலை என்பதில் நெய்து கொள்வது சாத்தியமில்லாத காரியம் என்பதை அவர் கண்டுகொண்டிருந்தார். யூதர்கள், புற இனத்தார் இருவருமே கடவுளுக்கு முன்பாக சமமானவர்கள்; ஒரே விதமான செய்தியையும் ஒரே விதமான கோரிக்கைகளையும் அவர்கள் தங்கள் முன் கண்டிருந்தார்கள். யூதர்கள் தனிப்பட்ட எந்தக்காரியத்தையும் சொந்தம் கொண்டாடவில்லை. சுவிசேஷம் சுட்டிக்காட்டும் விளைவு களுக்கான எதிர்ப்புகளே தர்சு பட்டணத்தானாகிய சவுல் தனது ஆற்றல்களை தீவிரமாகவும், ஊக்கத்துடனும் மெய்யான வழியை அழித்துப் போடும்படியான அர்ப்பணிப்பிற்கு செலவிடும்படியாகத் தூண்டினது. கடவுள் யூதரையும், புற இனத்தவரையும் எந்த பாரபட்சமும் இல்லாமல் தேடிச்சென்றார் என்ற இந்த உண்மையை அவர் கடவுளின் கிருபையினால் உணர்ந்து கொண்டபோது பவுல் தனது தாலந்துகளை, தான் முன்னால் துன்பப்படுத்தின அதே காரியத்தைக் கட்டுவிப்பதற்காகப் பிரயோகித்தார். கிறிஸ்துவின் நற்செய்தியை உலகம் முழுவதும் எடுத்துச் செல்லும்படியாக கடவுள் அவர் மூலமாகச் செயல் பட்டார். இவ்வாறாக அவர் புற இனத்தவருக்குக் கடவுளின் அப்போஸ்தலனாக மாறிவிட்டார்.

**வசனம் 10.** கர்த்தரின் கிருபையை முன்வைத்தே அப்போஸ் தலன் தனது ஊழியத்தின் சாராம்சத்தை துவங்கவும் முடிக்கவும் செய்தார். பவுல் தனக்காக எந்த நல்மதிப்பையும் எடுத்துக் கொள்ளவில்லை. கடவுளின் கிருபையினால் மாத்திரமே பிற எல்லா அப்போஸ்தலரைக் காட்டிலும், அவர் அதிகமாக உழைக்கவும், அதிகமான கனிகளை உருவாக்கவும் முடிந்தது. அவர்கள் **அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்** என அவர் அறிவிப்பது பன்னிருவரும் சேர்ந்து உழைத்ததைவிட அதிகமாயிருந்தது என்ற வெளிப்படையான பொருளைக் கொள்கிறது. F. F. Bruce இதை வித்தியாசமான கோணத்தில் கண்டார். அவர் கூறினது “இயேசுவின் முதல்

பன்னிரெண்டு சீஷர்களைவிடவும் அதிகமாக பவுல் தனது எஜமானின் ஆளுமையையும் பணியையும், அதன் உலகளவான பயன் பாட்டையும் மதிப்பீடு செய்திருந்தார்; அவைகளுக்கு செயலளவான பயனையும் ஏற்படுத்தியிருந்தார்."[6] பன்னிரு அப்போஸ்தலரையும் போலவே, எல்லாவிதத்திலும் பவுலும் ஒரு அப்போஸ்தலனே என்பதை கொரிந்தியர் அறிந்திருக்க வேண்டும் என்பது மிக இன்றியமையாததாகும். இந்த கிறிஸ்தவர்களுக்கு அவருடைய வார்த்தைக்கு மதிப்பு இருந்தது, அது கிறிஸ்துவினிடத்தில் உண்மைத்தன்மையின் தொடக்க புள்ளியாக இருந்தது.

கடவுளின் கிருபையின்படியே பவுல் அப்போஸ்தலன் தனது சொந்த முயற்சிகளை மதிப்பீடு செய்கிறார். அவர் எழுதினது என்னவென்றால், **நான் அல்ல** என்னில் காணப்படும் **கடவுளின் கிருபையே**. பவுலை அப்போஸ்தலனாகக் கடவுள் அழைத்ததின் மூலமாக அவர்மேல் கிருபையைப் பொழிந்தருளியுள்ளார்; தர்சு பட்டணத்தின் அந்த யூதன் அந்த அழைப்புக்கு நேர்மறையாக பதிலுரைத்துள்ளார் மற்றும் அவருக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை அவ்வாறாகவே, கொரிந்தியருக்கு அளிக்கப்பட்ட கிருபையும் **வீணாகிவிட முடியாதது** என்பதில் பவுல் உறுதியாயிருந்தார் (15:58). கடவுள் பவுலை ஊழியத்தில் ஏற்படுத்தினதின் பலனாகவும், அப்போஸ்தலனின் கீழ்ப்படிதலோடுள்ள பதிலுரையின் மூலமாகவும், மானுடரின் இரட்சிப் பிற்கான தெய்வீக வடிவமைப்பு, இந்தச் சகோதரர்களிடம் வெளிப் பட்டது. அநேகர் கொண்டிருப்பதைப் போன்று கடவுளின் கிருபையை பவுல் வேறுவிதமாகவும் ஏற்றுக் கொண்டிருக்கலாம். விசுவாசத்திலும், கீழ்ப்படிதலிலும் பதிலளிப்பவர்களுக்கே மீட்பு சாத்தியமாகிறது, ஏனெனில் இரட்சிப்பின் துவக்கத்தை கடவுள் தாமே மேற்கொண்டிருந்தார்.

**வசனம் 11.** பவுல் கர்த்தரிடமிருந்து தனக்குக் கொடுக்கப்பட்ட பணியின் சுதந்தரத்திற்கும் கர்த்தர் அப்போஸ்தல ஊழியம் அளித்துள்ள பிறரோடு தனது நிலைப்பாட்டிற்கும் இடையிலான ஒரு ஆபத்தான பாதையினூடே மெதுவாக நடந்து கொண்டிருந்தார். "அவர்கள்" என்பதின் பொருள் "அப்போஸ்தலரே" (15:9); அது பன்னிருவரின் கூட்டாண்மைக்கு சமமானது (15:5). **நானோ ... அல்லது அவர்களோ** என்பது எதை நிறைவேற்றுகிறது என்பதைக் குறித்து பவுல் கவலை கொள்ளவில்லை, ஏனெனில் அவர்கள் எல்லாரும் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஒரு திருப்பணியில் பங்கு கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒரே செய்தியைப் பிரசங்கித்தார்கள்; அது கொரிந்தியர் விசுவாசத்தின் மூலமாக அணைத்துக்கொண்ட அதே செய்தியாகும். எல்லாவற்றிற்கும் முன்பாக, அந்தச் செய்தியானது சரித்திரத்தில் விளங்கிய நாசரேத் தூரானாகிய இயேசுவைக் குறித்ததும்; ஒரு

உறுதிபாடு கொண்டதும், ஒரு அறிக்கையுமாகக் காணப்படுகிறது. எல்லா மனிதரைப் போன்றே அவர் மரித்துப்போயிருந்தாலும் கடவுள் அவரை கல்லறையில் விட்டு வைக்கவில்லை. மூன்றாம் நாளில், கடவுள் அவரை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்தார் - அவர் சரீரப் பிரகாரமாக உயிரோடு எழுப்பப்பட்டார்.

இயேசுவின் சரீரம் எழுப்பப்படவில்லையென்றால், கொரிந் தியர், பவுல், பன்னிருவர் இவர்களை ஒன்றாக இணைத்த செய்தி அர்த்தமற்றுப் போயிருக்கும். இந்த ஆரம்ப உண்மைகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு, பின்னொரு முரண்பாடான காரியத்தை கொரிந்துவில் எதிர்கொள்ளும்படியாக பவுல் ஆயத்தமானார். அடுத்த தொகுதியில், வரப்போகிற காலங்களில் மீட்கப் பட்டவர்களுக்கு கடவுள் வாக்குப்பண்ணியிருக்கிற வாழ்வின் தரத்தை, அதன் மேன்மையைக் குறித்து அவர் உரையாற்றினார்.

## ஒரு வெற்றுக்கல்லறை (15:12-19)

இயேசுவின் தெய்வீகம் என்பதான கருத்து அடங்கிய அவரின் அடையாளம் குறித்த கடவுளின் தனிப்பட்ட சாட்சியானது, அவர் மரித்தோரிலிருந்து உயிரோடேழும்பியதன் மூலமாக பலம் பெறுகிறது (ரோமர் 1:4). பவுலின் கூற்று வழங்கும் தெளிவு பலமாகக் காணப்பட்ட போதிலும் சரீர உயிர்த்தெழுதலைக் குறித்து கூறும் சாட்சியை பலமிழந்து போகும்படியான பல்வேறு முயற்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. 1 கொரிந்தியரின் வசனங்களில் பவுல் வெற்றுக் கல்லறையைப் பற்றிய எந்தக் குறிப்பும் சொல்லவில்லை என்பதாக, நட்புத்தன்மையற்ற திறனாய்வாளர்கள் சுட்டிக்காட்ட முனைகிறார்கள். வெற்றுக்கல்லறை என்பதான பாரம் பரியக் கருத்து, பின் காலத்தில் உருவாகினதெனவும் சொல்லப் படுகிறது. சில திறனாய்வாளர்கள் கூறுகிறபடி, கிறிஸ்தவ யுகத்தின் எட்டாவது தசம ஆண்டுகளில், சுவிசேஷத்தின் உண்மைகள் எழுத வைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டபோது, வெற்றுக் கல்லறையின் சத்தியம் பாரம்பரியத்தில் மூழ்கிப்போனது. எனினும் தெளிந்த அறிவோடு செய்யப்பட்ட ஆய்வுகள் வெளிப்படுத்துவது என்ன வெனில் வெற்றுக் கல்லறையைப் பற்றி பவுல் எளிய விதத்தில் கூறுவதைத் தவிர்ப்பது சொற்புரட்டாகக் கொள்ளப்படுகிறது. ஆனால் அப்போஸ்தலனின் சாட்சியைத் தீவிரமாக மதிப்பீடு செய்வதாகக் காணப்படவில்லை. இயேசுவின் உயிர்த்தெழுதல் சரீர உயிர்த்தெழுதல் என அவர் நம்பினார். அந்தக் காரியத்தில் அவரைத் தவறாகப் புரிந்து கொள்ளத் தேவையில்லை. *கடவுள் இயேசுவின் சரீரத்தை எழுப்பியபோது, அவரின் சரீரம் வைக்கப்பட்டிருந்த கல்லறை வெறுமையாக்கப்பட்டிருந்தது மிகத்தெளிவாக வெளிப் பட்ட உண்மையாகும்.*

கொரிந்தியருக்கு பவுல் கூறிய காரணவிளக்கங்கள் உயிர்த்தெழுதல் குறித்த மூன்று முக்கிய கருத்துக்களை ஏற் படுத்தியது. (1) கொரிந்தியக் கிறிஸ்தவர்கள் அறிக்கையிட்டதும், பவுலும், பிற அப்போஸ்தலரும் பிரசங்கித்தலும், இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் என்பவைகளைப் பற்றியதே. (2) உயிர்த்தெழுதல் என்பது சுவிசேஷத்தின் பிற்சேர்க்கையல்ல; அது சுவிசேஷத்தின் முக்கியப்பொருளாகும். (3) இயேசுவின் உயிர்த் தெழுதலை மறுப்பது கடவுள் தம்மை இரட்சகராக வெளிப் படுத்தியதை மறுதலிப்பதற்கு சமமானதாகும். இயேசுவின் உயிர்த்தெழுதல் இல்லாத பட்சத்தில் - எழுத்துப்பிரகாரமான, சரீர உயிர்த்தெழுதல் - கிறிஸ்தவர்களானவர்கள் கையை விட்டு நழுவிக் கொண்டிருக்கும் விசுவாசத்தை பிடித்துக் கொண்டிருக்கும் நம்பிக்கையிழந்த நிலையிலுள்ள மக்களாகக் காணப்படுவார்கள்.

**[12]கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பிரசங்கிக்கப் பட்டிருக்க, மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்? [13]மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால் கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே. [14]கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. [15]மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்துச் சாட்சிசொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே. [16]மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்க வில்லை. [17]கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். [18]கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே. [19]இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்.**

**வசனம் 12.** சுவிசேஷத்தின் அடிப்படைக் கொள்கைகளை ஒத்திகை நடத்தின பிற்பாடு பவுல் ஒரு குறிப்பிட்ட பயன்பாட்டை நோக்கிச் செல்கிறார். இயேசுவின் உயிர்த்தெழுதல் கிறிஸ்தவ விசுவாசத்தின், முதன்மை உறுதிப்பாடுகளில் ஒன்றாகும் என்பதின் படி, அது அப்போஸ்தலராலும், கொரிந்திய சகோதரர்களாலும் நம்பிக்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறான சந்தர்ப் பத்தில் **மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லை என** அவர்களில் சிலர் எவ்வாறாகக் கூறலாம்? சில கிரேக்க சிந்தனையாளர்கள், ஒருவர் உயிரோடு காணப்படுவதற்கு ஒரு மனிதனின் ஆவியும், சரீரமும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன என்ற நம்பிக்கையைக்

கொண்டிருந்தார்கள். ஒரு சரீரம் செத்துப்போகும்போது, வேறெது வுமே அங்கே கிடைக்கப்பெறுவதில்லை அல்லது காணப்படு வதில்லை என்றே அவர்கள் நினைத்தார்கள். எனினும் கொரிந்தியர், இந்த வாழ்விற்குப்பின்னான ஒரு வாழ்வை மறுக்கும் நிலைக்குச் செல்லவில்லை என்றே உள்ளது. மரித்தோருக்காக ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ளும் போது அவர்கள் என்ன செய்தாலும், அந்த சடங்கின் மூலம் மரணத்திற்குப் பின் ஏதோ ஒன்று உண்டு என்பதையே சுட்டிக் காட்டுகிறது (15:29).

மரணத்தின்போது என்ன நிகழுகிறது என்பதைப் பற்றிய எண்ணப்பார்வைகள் கிரேக்க-ரோமரின் உலகில், நவீன காலத்தில் காணப்படுவதைப் போன்றே, வெவ்வேறு விதமாகக் காணப் பட்டன. நவீன விளக்கங்களில் காணப்படும் ஒரு மிகச் சாதாரண எண்ணப்பார்வை என்னவெனில், கொரிந்தியர் மிக அதிகமாக உணரப்பட்ட கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றிய நினைவுகளினால் தொற்று ஏற்பட்டுக் காணப்பட்டிருந்தார்கள். கடைசி காலங்களோடு தொடர்புள்ள உயிர்த்தெழுதல் என்பது ஏற்கெனவே நடந்தாயிற்று என்ற எண்ணமே அதுவாகும். இயேசுவே கிறிஸ்து என்று விசுவாசிப்பதும், அவர் கற்பித்த வாழ்வை ஏற்றுக்கொள்வதும், மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவது என்பதாகும் எனவும் சிலர் கூறிவந்தார்கள். பவுலுக்கு பின்னான நூறு ஆண்டுகளின் போது வாழ்ந்த ஒரு பகுத்தறிவுவாத விசுவாசி, “தாங்கள் முதலாவது மரித்து, பின்னர் எழும்புவார்கள் எனக் கூறுபவர் தவறான எண்ணத்தைக் கொண்டுள்ளார்கள். அவர்கள் வாழும்போதே முதலாவதாக உயிர்த்தெழுதலைப் பெற்றுக் கொள்ளாத நிலையில் அவர்கள் மரிக்கும் போது எதையும் பெற்றுக் கொள்ள முடியாது”[7] என எழுதியுள்ளார்கள். பிற்காலத்தில் பகுத்தறிவு வாதம், பற்பல நம்பிக்கைகளின் ஒரு கோர்வையாக உருவாகி, ஒருவிரிவான முறையில் ஊடகங்களை ஏற்படுத்தின.[8] சில பகுத்தறிவாதிகள் வரப்போகிற காலம் ஏற்கெனவே வந்தாயிற்று என்றும், உயிர்த்தெழுதல் நடந்தாயிற்று என்றும் நம்பியிருந்தார்கள் (காண்க 2 தீமோ. 2:18). ஆனாலும் அவ்வாறான எண்ணங்கள் முதலாம் நூற்றாண்டின் மத்திய பாகத்தில் பவுல் உயிரோடிருக்கும் போதே பெருகிக் காணப்பட்டன என்பதற்கான போதுமான ஆதாரங்கள் இல்லை.

சரீர உயிர்த்தெழுதலைக்குறித்து காரண விளக்கங்களைக் கேட்ட கொரிந்தியரின் முறைகளைக் குறித்து நாம் ஊகித்துக் கொள்ள முடிகிறது. பிளேட்டோ முதலான கிரேக்க சிந்தனைகளில், சரீரம் மற்றும் ஆவி இவைகளுக்கிடையிலான ஒரு மிகக்குறிப்பான அளவுகோடு வரையப்பட்டிருந்தது. ஆவியானது மாமிசத்தில் அகப் பட்டுக்கொண்டு விட்டதாக நம்பப்பட்டது. மரணம் நிகழும்போது, அது பலவீனமான, அழிவிற்கேதுவான சரீரத்திலிருந்து வெளியேறி,

பரலோகத்தின் ஆளுமைக்கு நேராக பறந்து சென்று, உலகளவான ஆத்துமத்தின் வடிவில் சுவீகரிக்கப்படும். பொருளின் வடிவமான மாமிசத்திற்கும், உருவமில்லாத ஆவிக்கும் இடையில் எந்த பொருத்த நிலையையும் கிரேக்க சிந்தனையாளர்களால் கண்டு கொள்ள முடியவில்லை. இதற்கு மாறாக, சரீரம்-ஆத்துமா என்பவைகளைப் பற்றிய பவுலின் புரிதல் பழைய ஏற்பாட்டின் வெளிப்பாட்டில் வேர் கொண்டிருந்தது.

> பவுலைப் பொறுத்தமட்டில் ஆத்துமா-சரீரம் இவைகளின் தொடர்பு, முற்றிலும் சாதாரணமாக அறியப்படுவதேயாகும். ஆத்துமா இல்லாத சரீரம் என்பது ஒரு நிர்வாண நிலையைக் கொண்டுள்ளது. உயிர்த்தெழுதலின் போதோ, அல்லது கிறிஸ்து வின் வருகையின்போதோ சரீரம் மாற்றமடையும் என்பது உண்மையானதொன்றாகும். அது கடவுள் ராஜ்ஜியத்திற்கு மேலும் அதிகமான தகுதியைப் பெற்றுக் கொள்ள முடியும். எப்படியாயினும், பொருள் வடிவத்தில் தீமை காணப்படுகிறது என்பதான போதனை பவுலிடம் காணப்படவில்லை.[9]

பரவலாகக்காணப்பட்ட கிரேக்க எண்ணப்பார்வையை பொருள் வடிவத்தில் தீமை தரித்துள்ளது என்பதாக விளக்கவும் மறுக்கவும் கட்டாயமில்லாத நிலையில், கடவுள் இயேசுவை, சரீரமும் ஆவியுமாக, கல்லறையிலிருந்து உயிரோடெழுப்பினார் என்பதை பவுல் முன்வைத்துக் கூறினர். இயேசுவின் உயிர்த்தெழுதல் சுட்டப்படும் சரீரம்-ஆத்துமா என்ற ஐக்கியத்திற்கு சாட்சி பகருகிறது. சரீரம் பொருள் வடிவமாதலால், தீமையானது என்றோ, பலவீனமானது என்றோ எண்ணிக்கொள்ளப்படக் கூடாது. இந்தக் காலத்தில் வாழ்க்கை என்பது சரீரம் ஆத்துமாவின் அனுபவமாகும். ஆவியானது, எந்தவொரு சரீர அளவிலோ, பௌதீக அளவிலோ, எல்கை கொண்டு இல்லாதது எண்ணத்தில் கொள்ள முடியாத தொன்றாகும். மேலும், இயேசுவின் சரீர உயிர்த்தெழுதல் மிகத்தெளிவானதும், நிச்சயமானதுமான சாட்சியாகும்; அவரை கிறிஸ்து என்று நம்பிக்கை கொண்டுள்ளவர்கள் அதே மாதிரியான உயிர்த்தெழுதலில் பங்கு கொள்வார்கள். இயேசு மரித்தோரி லிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை மெய்யாகக் கொண்டுள்ள நிலையில், “மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லை” என்ற யாரொருவர் ஏன் வாதம் செய்ய வேண்டும் எனவும் சரீர உயிர்த்தெழுதல் இல்லை எனவும், சொல்ல வேண்டும் எனவும் பவுல் அறிய விழைகிறார். கல்லறைக்கு அப்பாலுள்ள ஒரு வாழ்வைக் குறித்த இந்த முக்கியமான காரியத்தைப் பற்றிய கேள்விகளுக்கு இயேசுவின் உயிர்த்தெழுதல் தீர்வு காண முடியும்.

**வசனம் 13.** இயேசு மரித்தோரிலிருந்து சரீரத்தோடே எழுந்தார் என்பதான அப்போஸ்தலரின் சாட்சியை ஒருவர் ஏற்றுக் கொண் டுள்ள நிலையில், பரலோகத்தில், மீட்கப்பட்டவர்களுக்கு சரீரத் தோடு கூடிய

வாழ்வு உண்டு என்பதைப் பற்றிய எந்த சந்தேகமும் காணப்படமுடியாது. இதற்கு எதிரிடையாக மானிடர் எவரும் சரீரமரணத்திற்கு அப்பால் வாழ முடியாது என்று காணப்பட்டால், இயேசு உயிரோடெழுந்திருப்பது (உயிரோடெழுந்தது) சாத்திய மான காரியம் அல்ல. இயேசு சரீர உயிர்த்தெழுதல் அடைந்தார் என்பதை மறுக்கும்படியான விவாதம் நிலை நிற்கமுடியாது. அவர்களின் முக்கியமான தோற்றம் என்னவென்றால் எந்தப் பொருள் வடிவமும், ஒருவர் மரிக்கும்போது அவரில் தங்கியிருப் பதில்லை. இயேசுவின் சரீரம் மரித்தது என்பதான இரண்டாவது தோற்றத்தை அவர்கள் மறுக்கவே முடியாது. ஆகவே, இயேசுவின் எந்தப் பொருள்வடிவமும், சிலுவையில் பிழைக்கவில்லை என்பதான முடிவை அவர்கள் கட்டாயமாக ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. அவர்களின் கூற்று சரியானதென்றால், கல்லறையினின்று எந்தப் பொருள் வடிவமும் வெளிவந்திருக்க முடியாது, ஆனால் பவுல், அவர் உயிர்த்தெழுந்தார் என்பதற்கான மறுக்கமுடியாத ஆதாரத்தை ஏற்கெனவே முன் வைத்து விட்டிருந்தார்.

பவுலின் இவ்வாறான வெளிப்பாட்டில், மானுடரின் வாழ்வு முறையில் இயேசு முழுவதுமான பங்கைப் பெற்றிருந்தார் என்பது தெளிவாகிறது. அவருக்கு ஒரு சரீரம் உண்டாயிருந்தது. *கல்லறைக்கு அப்பால் சரீர அளவிலான ஒரு வாழ்வு இல்லையென்றால், இயேசுவின் சரீரம் உயிரோடெழுப்பப்பட முடியாதிருந்திருக்கும்.* மரித்தோரின் உயிர்த்தெழுதலை மறுத்தவர்கள் அவர் கல்லறையினுள் வைக்கப்பட்டிருந்த பின்பு இயேசுவைக் கண்டு, தொட்டு, அவரோடு பேசினவர்களோடும் அவர்கள் தாங்கள் கண்டதை சாட்சியாகச் சொன்னவைகளோடும் இணைந்து சரியான விதத்தில் சிந்தித்துப்பார்க்க வேண்டியதாகிறது.

> மரித்தோர் எழுப்பப்படுவார்கள் என்பதை மறுப்பதான விவாதத்தைத் திரும்பிப்பார்த்து சிந்தனை செய்வதற்கு பவுல் தமது வாசகர்களை ஒன்று கூட்டுகிறார். இவ்வாறான மறுப்பைத் தெரிவிக்கிறவர்கள், மரித்தோரிலிருந்து எவரும் எழும்பமுடியாது என்பதான காரியம் நிச்சயமாகக் கூறப்படும் நிலையிலேயே அது உண்மை எனக்காணப்படும் என்பதை மறந்து போகிறார்கள். இந்தக் காரியத்தில், இவ்வுலகில் வாழ்ந்து மரித்த கிறிஸ்துவானவரே உயிரோடெழுப்பப் படவில்லை; ஏனெனில் மரணத்தின் உலகளவான தன்மை அவருக்கு எந்த விதிவிலக்கையும் அளிக்கவில்லை. அவரின் இணையற்ற வாழ்வு எல்லா மானுட வாழ்வின் முடிவிலிருந்து அவரைப்பாதுகாக்கவில்லை.[10]

**வசனம் 14.** ஒரு தொடர் நிபந்தனை வாக்கியங்களைப் பிரயோகித்து, பவுல் தனது விவாதத்தை, ஒரு முடிவிலிருந்து இன்னொரு முடிவுக்கு நேராக அழுத்திக் கூறுகிறார். கிறிஸ்துவில் இரட்சிக்கப்பட்டவர்களின் உயிர்த்தெழுதலும், கிறிஸ்து தம்மில்

உயிர்த்தெழுதலும் ஒன்றாகக் கட்டப்பட்டுள்ளன. “மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லையென்றால்” (15:13), இயேசு உயிரோ டெழும்பவில்லை; ஆனால் இயேசு உயிரோடெழுந்திருக்க வில்லையென்றால், பவுல் பிரசங்கித்த எல்லாக்காரியங்களும், கொரிந்தியர் விசுவாசித்த எல்லா உண்மைகளும் **வீணாகவும்**, ஒரு பொய்யாகவும் ஆகிவிட்டிருக்கும். அப்போஸ்தலன் நிலையான தன்மையையே வேண்டிக் கேட்கிறார். மரித்தோரின் உயிர்த் தெழுதலை ஒருவர் மறுக்க விரும்பினால், அவ்வாறு மறுத்தவர், தனது காரண விளக்கங்களை கசப்பான இறுதிவரை தொடர வேண்டிய கடமை கொண்டுள்ளார். இயேசு சரீரப்பிரகாரமாகக் கல்லறையிலிருந்து எழுந்தார் என்பதும், அதைத் தொடர்ந்ததான மீட்கப்பட்டவர்கள் யாவரும் சரீர உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவார்கள் என்பதான நிச்சயமும், சுவிசேஷத்தின் பிரசித்தத்தின் அடிப்படையாக உள்ளது. “கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வில்லையென்றால், கடவுள் தமது மக்களை இரட்சிப்பதற்கான மீட்பின் செயல்களானது, ஒரு சாவின் முடிவு என்பதான தெருவில், ஒரு கல்லறையில் முடிவடைந்துபோகும்.”[11]

**வசனம் 15.** மரித்தோரிலிருந்து உயிரோடெழும்புவதை மறுப் பது வேறு சில காரியங்களையும் சுட்டுகிறது. உயிர்த்தெழுதல் இல்லையென்றால், பவுலும், மற்ற அப்போஸ்தலரும், **கடவுளின் பொய்ச்சாட்சிகளாகக் காணப்படுவார்கள்**. அவ்வாறான சந்தர்ப் பத்தில், அவர்கள் வஞ்சிக்கப்பட்டு, அறியாமையில் அமிழ்ந்து போனார்கள் என்றோ அல்லது அவர்கள் பொய்யர் என்றோ நாம் அவர்களைத் தீர்ப்பு சொல்ல வேண்டும். அவர்கள் நல்மனச்சாட்சி கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் தவறாகக் கருதப் பட்டார்கள் என்பதற்கான ஏராளமான தோற்றங்களும் காட்சிகளும் காணப்பட்டிருந்தன. ஒருவர் ஏமாற்று வேலைசெய்பவரானால் அவருக்கு மிகக் கவனமான ஒத்துழைப்பு தேவையாயிருந்திருக்கும். உயிர்த்தெழுதல் இல்லையென்றால், பவுலும் மற்ற அப்போஸ் தலரும் “பொய் சாட்சிகளாயிருப்பார்கள்.” இயேசு உயிரோடெழும் பினார் என்பதே அவர்களது சாட்சியாகும். யாரை நம்ப வேண்டும் என்பதை கொரிந்தியர் தீர்மானிக்க வேண்டியதாயிற்று. இரண்டு காரியங்களை உரிமை கோரவேண்டியதாயிற்று: (1) மரித்தோரின் உயிர்த்தெழுதல் என்பது காணப்பட்டது. (2) இயேசு மாமிசத்தில் மரித்தோரிலிருந்து எழுந்த பின்பு, வெளிப்பட்டார். இந்த இரு கூற்றுகளும் ஒப்புரவாக இயலாதது என்பதை பவுல் மிகச் சரியான விதத்தில் விவாதித்தார். பவுலும், மற்ற அறிவுள்ள நம்பிக்கையான மக்களும் வெறுமனே பொய் சொன்னார்கள் என கொரிந்தியர் தீர்க்கமான எண்ணங்கொண்டார்களா? பொய்யானது என்று அவர்கள் அறிந்துள்ள காரியத்திற்காக அவர்கள் தங்களது எல்லா வற்றையும் ஏன்

ஆபத்திற்குள்ளாக்க வேண்டும்?

சமீப நூற்றாண்டுகளில், இயேசுவின் சரீர உயிர்த்தெழுதல் என்பது "ஒரு விசுவாச அறிக்கை" என்று தர்க்கம் செய்ய விரும்பும் இறையியலாளர்கள், காலங்களில் நடந்தேறிய மெய்யான நிகழ்வுகளோடு தொடர்பில்லாத நிலையில், ஒருவிதமான குழப்ப நிலையை சந்திக்க நேர்ந்தது. இயேசுவின் உயிர்த்தெழுதல் காலத்தின் மெய்யான நிகழ்வு இல்லா பட்சத்தில், அவரைப்பற்றிய சாட்சியானது, உணர்ச்சி பூர்வ அனுபவங்களுக்கும், யதார்த்தமான நிகழ்வுகளுக்கும் இடையிலான வித்தியாசத்தைக் கண்டு கொள்ள முடியாத கற்பனைக் காட்சிகளில் மயங்கிப் போன முட்டாள்களின் சாட்சியாகவோ, அல்லது அவ்வாறான சாட்சி பொய்மையாகவோ காணப்படும். நூற்றாண்டுகளின் ஆண்டுகளில் பவுலின் விவாதங்கள், சத்தியத்தைத் தன்னுடன் தோழமையில் கொண்டு தொடருகின்றன.

இயேசுவின் இறந்துப்போன சரீரத்தை மூன்றாவது நாளில், கடவுள் உயிரோடு கொண்டு வந்தார். அதைக் கண்ணாரக் கண்டவர்கள், அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின்னான தோற்றங் களைக் குறித்து சாட்சி பகர்ந்தார்கள். அவர்தாம் திரும்பி வருவேன் என வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். இப்போது அவர் கடவுளின் வலது பாரிசத்தில் ஆளுகை செய்து கொண்டிருக்கிறார். இவைகளெல்லாவற்றிற்கும் அப்பால் கிறிஸ்துவின் உரிமை கோருதலும் அவரைக் குறித்து பிறர் கோரிய காரியங்களும் அர்த்தங் காணும்படியான ஒரு நம்பிக்கையற்ற மனிதத்தேடல் என்பதாக மிக எளிதாகத் தள்ளுபடி செய்யப்படலாம். அது அவ்வாறான காரியம் அல்ல என்பதை பவுல் அறிந்திருந்தார். அவர் தாம் பிரசித்தம் பண்ணின சுவிசேஷத்தின் சத்தியத்தின் நிச்சயத்தின் அடிப்படையில் தமக்குரிய எல்லாவற்றையும் ஆபத்தில் ஈடுபடுத்தும் படியான ஆயத்தத்தைக் கொண்டிருந்தார்.

**வசனம் 16.** கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்கள் இரண்டு விதத்திலும் அதை ஏற்றுக்கொண்டிருக்க முடியாது. இந்தக் கிறிஸ்தவர்கள் மரணத்திற்குப் பின் சரீரப்பிரகாரமாக காணப்பட வில்லையானால், **கிறிஸ்துவும் கூட உயிரோடெழுப்பப்படவில்லை.** ஒன்றில் உயிர்த்தெழுதல் இல்லை என்ற காரண விளக்கத்தை அவர்கள் விட்டொழிய வேண்டும் அல்லது இயேசு உயிரோ டெழுப்பப்பட்டார் என்பதான சாட்சியை அவர்கள் தள்ளி விடவேண்டும். மரணத்திற்குப் பின்னான வாழ்விற்காக மாத்திரம் பவுல் தர்க்கம் பண்ணவில்லை. மரணத்திற்குப் பின்பு சரீரப்பிர காரமான நிலை என்பதான உயிர்த்தெழுதல் உண்டு என்பதை அவர் நிச்சயப்படுத்திக் கூறுகிறார். இயேசு கல்லறையிலிருந்து வெளியே வந்ததுபோலவே, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழும்புவார்கள் (1 தெச. 4:16). சிலுவை மரணத்திற்குப்பிற்பாடு இயேசு சரீரப் பிரகாரமாகக் காணப்பட்டார். சரீர உருவில் வரையறுக்கப்படாத ஒரு மேகம் போன்ற மானுட

ஆத்துமாவை கற்பனையிலும் காண்பது கடினமானது. Brevard S. Childs என்பவரின் வார்த்தைகளில், “சரீர உருவற்ற ஒரு மானுட நிலை காணப்பட முடியாது. அது வாழ்விலிருந்து பிரிக்கப்பட முடியாதது. புதிய ஏற்பாட்டின் [வருகைக்கு முன்பாக] இறுதிகால நம்பிக்கை சரீர உயிர்த்தெழுதலுக்கானது ஆகும், அது ஆத்துமாவின் வாழ்வு நிலைக்குரியதானது அல்ல.”[12]

**வசனம் 17.** மேற்கூறப்பட்டப்படி, கொரிந்தியர் தீர்மானம் எடுக்க வேண்டியவர்களாகிறார்கள். ஆனால் உயித்தெழுந்த கர்த்தரைக் குறித்த அப்போஸ்தலரின் சாட்சியை மறுப்பதை அவர்கள் தெரிந்து கொள்ளும் போது, அதனால் ஏற்படும் விளைவுகளை அவர்கள் அறிந்து கொள்ளவேண்டும் என பவுல் விரும்பினார். இயேசு உயிரோடெழுப்பப்படவில்லையென்றால் பவுல் அறிவித்த சுவிசேஷத்தின் ஒவ்வொரு காரியமும் தவறாகி விடும். **உனது விசுவாசம் தகுதியற்றது** என்பதான மேற்கோளான முடிவை அவர்கள் சந்திக்க வேண்டியதாகும். நீங்கள் **இன்னமும் உங்கள் பாவங்களில் காணப்படுவீர்கள்** என்றும் அவர் கூறியிருந்ததாக கடைசியில் சொல்லப்பட்ட சொற்றொடர் இரண்டு விதத்தில் புரிந்து கொள்ளப்படலாம். (1) கர்த்தரின் உயிர்த்தெழுதல் இல்லாத பட்சத்தில், சிலுவையின் மொத்த முயற்சியும் சந்தேகத்திற் கிடமாகி விடும். (2) இரண்டு விதத்தில், கொரிந்தியரின் அனுபவத்திற்கு, இந்தக் கூற்றை முறையீட்டாகக் கொள்ளலாம். உயிரோடெழுந்த கர்த்தரின் ஊக்கம் நிறைந்த உதவியின்றி, அவர்கள் பாவத்தைத் தவிர்த்து வாழ்வதற்கு அவர்களுக்கு எந்த வல்லமையும் கிடைக்கப் பெறாது. உண்மையில், கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை உயிரோடிருக்கிறவராகக் கண்டிருந்தார்கள்; அவர் அவர்கள் வாழ்வில் கிரியை செய்கிறவராகவும் காணப்பட்டிருந்தார். அவர்கள் பாவத்திலிருந்து விலகிவிட்டது, இயேசு உயிரோ டெழும்பியதற்கு வாழும் சாட்சிகளாக அவர்களை ஏற்படுத்தியது. உயிர்த்தெழுதல் என்பது இல்லாத பட்சத்தில், இந்த இரண்டு எதிர்மறை விளைவுகளும் தொடரும்; ஆயினும் நிருபங்களில் பவுல் நியாயப்படுத்துவதில் காணப்படும் முனைப்பு, அப்போஸ்தலன் முதலாவதான பொருளை வலியுறுத்துவதாகவே குறிப்பு காண்பிக்கிறது (காண்க ரோமர் 4:24, 25).

**வசனம் 18.** கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலை மறுப் பதினால் ஏற்படும் தொடர் விளைவுகளைப் பற்றி பவுல் தொடர்ந்து வலியுறுத்திக் கூறி வந்தார். உயிர்த்தெழுதல் இல்லையென்றால், **கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்** (οἱ κοιμηθέντες, *hoi koimēthentes*), அதாவது மரித்துப் போனவர்கள் **அழிந்து போய் விடுவார்கள்.** மரித்தோரின் உயிர்த்தெழுதலை மறுப்பது, கிறிஸ்தவ விசுவாசத் திற்கு மிக அருமையான ஒரு நம்பிக்கையை விட்டொழிவதான பலனைக்

கொடுக்கிறது. நித்திய ஜீவனே மீட்கப்படுவதற்கும், நியாயம் காணப்படுவதற்கும் அடிப்படையான வெளிப்பாடாகும்.

நித்திரையைப்பற்றிய பவுலின் உருவகமான பயன்பாடு மரணத்தின் அகோரத்தை மிதப்படுத்தி விடுகிறது. பிளேட்டோ, ஸ்தோயிக்கரின் தத்துவக் கொள்கைகளில் காணப்படும் "நன்மை காணப்படாது" என்பதான எண்ணப்பார்வை அக்கால கிரேக்க-ரோம உலகில் பெருமளவில் நிலைத்து விட்டிருந்தது. குவளைகள் மனித கபாலத்தின் உருவில் வடிவமைக்கப்பட்டன. கருச்சிதைவு, வேசித்தனம், குழந்தைகளை துர்இச்சைகளுக்குக் கொடுத்தல் போன்றவை மிகச் சாதாரணமாகக் காணப்பட்டன. அநேகரின் கல்லறைகளில், "N F F N S N C," என்பதான முதல் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன; இது *non fui, fui, non sum, non curo* என்ற லத்தீன் சொற்றொடரின் சுருக்கமே. இதன் பொருள் என்னவெனில், "நான் காணப்படவில்லை, நான் காணப்பட்டேன், நான் இல்லை, நான் கவனம் செலுத்தவில்லை."[13] "ஸ்தோயிக்கரின் மூல வார்த்தை அக்கறையின்மை என்பதாகும்"; இந்த தத்துவக் கொள்கையின்படி "நல்லவர் ஒருவர், அவனே அவளோ விதியால் நியமிக்கப்பட்ட காரியத்தைத் தவிர்க்க எதுவும் செய்ய இயலாது, என்பதைக் கண்டறிந்து கொள்வார்."[14] கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலை நாம் ஏற்றுக்கொள்ளும்போது இம்மாதிரியான எண்ணப் போக்கின் படியை உடைத்தெறிந்து விடலாம்.

**வசனம் 19.** உயிர்த்தெழுதலில் நம்பிக்கையில்லாதவர்கள், மரித்தோர் நிரந்தரமாகவே அழிந்து போகிறார்கள் என்ற எண்ணம் கொண்டவர்கள் முதலானோர் கைவிடப்பட்ட நம்பிக்கையைக் கொண்டுள்ளார்கள். கிறிஸ்துவின் சரீர உயிர்தெழுதலைக் குறித்தல்லாத, வேறு எந்த நம்பிக்கையின் செய்தியும் காணப்படாது என்பதை பவுல் அறிந்திருந்தார். இயேசு உயிரோடெழுப்பப்பட்டார் என்பதான தோற்றத்தின் அஸ்திவாரத்திலேயே சுவிசேஷத்தின் செய்தி கட்டியெழுப்பப்படுகிறது. அந்தச் செய்தி பொய்யான தென்றால், நமக்கு எந்த நம்பிக்கையும் இல்லை என்பதாகவே அது பொருள்படுகிறது. அவ்வாறான நிலையில், கிறிஸ்தவர்கள் **மிகவும் அதிகமாக இரக்கம்** காண்பிக்கப்படுகிறவர்களாவார்கள். கிறிஸ்துவில் வைக்கப்படும் நம்பிக்கையே மனித குலத்தின் ஒரே நம்பிக்கையாகும்.

ஒருவர் மரணத்தில் நித்திரையடைந்து விடும் வேளைக்கும், மரித்தோரை உயிர்ப்பிக்கும்படியாக கர்த்தர் திரும்பிவரும் கணநேரத்துக்கும் இடையில் என்ன நிகழ்கிறது என்பதை பரிசோதனை செய்யும் படியாக பவுல் தொடரவில்லை. உயிரோ டெழுப்பப்பட்ட சரீரத்தில் ஜீவன் (உயிர்) என்பது மரணத்தின் போதா அல்லது கர்த்தர் திரும்பிவரும்போதா ஆரம்பம் கொள்கிறது? பவுல் அதைப்பற்றிக் கூறவில்லை. நித்திய வாழ்வு என்பது சரீர உருவில் காணப்படும்

என்பது நிச்சயமானது. பொருளளவான சரீரமோ, பொருள் உருவான பொருட்களோ உள்ளானபடி தீமையானது அல்ல. தீமையும், பாவமும் மனிதர் ஏற்படுத்தும் அறநெறித் தேர்வுகளின் மூலமாக விளைகிறது; அவைகள் சரீரத்தை உருவாக்கும் பொருட்களினால் ஏற்படுவதல்ல.

## எவ்வாறான சரீரம்? (15:20-28)

**20கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்
தவர்களின் முதற்பலனானார். 21மனுஷனால் மரணம் உண்டான
படியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று.
22ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதைப் போல, கிறிஸ்துவுக்குள்
எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். 23அவனவன் தன்தன்
வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து;
பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.
24அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல
துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும்
பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை
ஒப்புக்கொடுப்பார். 25எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக்
கீழாக்கிப்போடும் வரைக்கும், அவர் ஆளுகைசெய்ய வேண்டியது.
26பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம். 27சகலத்தையும்
அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே; ஆகிலும் சகலமும்
அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது,
சகலத்தையும் அவருக்குக் கீழ்ப் படுத்தினவர்
கீழ்ப்படுத்தப்படவில்லையென்பது வெளியரங்க மாயிருக்கிறது.
28சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும்
சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும்
கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்.**

சில காலங்கள் முன்பாக, அறிவர்களின் சமுதாயம் இந்த ஒழுங்குமுறையை காணக்கூடிய விதத்தில் புறக்கணித்திருந்த வேளையில், Alexander Balmain Bruce என்பவர் கிறிஸ்தவக் கொள்கைகளைப் பற்றிய ஒரு நூலை எழுதினார். எதிர் காலத்திற்கான நல்லதே நடக்கும் என்ற எண்ணத்தோடு அறநெறி நடத்தைகளுக்குத் திரும்பும்படியான தீர்க்கதரிசனக் கோரிக்கை களை புரூஸ் பிரதிபலித்தது, அவைகளில் முக்கியமானதொன்றாகக் காணப்பட்டது. கீழ்க்கண்ட காரியத்தை புரூஸ் கூறி உள்ளார்:

> *நீதிநெறிக்கான ஆவலும், நம்பிக்கை* என்ற எண்ணத்தின் மேல் ஆவலும் இம்மட்டும் சாதாரணமானதாகக் காணப்படவில்லை. உயர்மட்ட அளவில் இவைகள் எவர்களிடம் தோன்றுகிறதோ அவர்கள் உலகின் குறிப்பிடும்படியாகச் சொல்லக்கூடிய மனிதர் மத்தியில் தர வரிசை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். ஆயினும் இந்த

> இரண்டின் கூட்டமைப்பே எபிரெயத் தீர்க்கதரிசியின் உருவத்தை இணையற்றதாக்கும் தன்மை கொண்டது.[15] (வலி யுறுத்தல் சேர்க்கப்பட்டிருக்கிறது.)

நாசரேத்தூரானாகிய இயேசுவும், அவரைப்பின்பற்றின அப்போஸ்தலரும், தீர்க்கதரிசிகளையும் தாண்டிச் சென்று விட்டார்கள (1) பயபக்தியான வாழ்விற்கான ஒப்புரவு ஏற்படுத்திக் கொள்ளமுடியாத ஒரு கோரிக்கை. (2) கர்த்தர் திரும்பி வருவார் என்பதை எதிர் பார்த்திருக்கும் வருங்காலத்தில் நல்லதே நடக்கும் என்ற நம்பிக்கை, இவைகளை அவர்கள் கூட்டமைத்தார்கள். இறுதிகாலக் காரியங்களைக் குறித்த புதிய ஏற்பாடு வெளிப் பாடுகளில், உள்ளானபடியாகவும், விளக்கத்தோடும், நீதி நெறியோடு கூடிய வாழ்விற்கான அழைப்பு காணப்படுகிறது (1 கொரி. 15:34; 2 கொரி. 5:10; 2 பேதுரு 3:11). கர்த்தர் திரும்பி வருகிறார் என்பது, சரீர உயிர்த்தெழுதல், நியாயத்தீர்ப்பு, நித்திய ஜீவன் என்பவைகளைப் பொருள் கொள்கிறது. கர்த்தரின் எதிர்கால நம்பிக்கையைக் குறித்து தீர்க்கதரிசிகள் முன் நிழலாகக் கூறினார்கள். புரூஸ் இதைக் குறித்துக் கூறுவது என்னவென்றால்:

> அறநெறித் திறனாய்வாளர்கள் இக்காரியங்களைக் குறித்து துக்கமுகத்தோடு எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையற்ற நிலையில் காணப்படுவதே இயற்கையான நடபடியாக உள்ளது. ஆகவேதான், தங்களது சமகாலத்தினரிடம் மிகக்குறிப்பான கோரிக்கைகளை விடுத்தவர்களும், நம்பிக்கையில் உறுதியாகக் காணப்படாத வர்களிடம் மிகக் கடினமான நியாயத்தீர்ப்பை வழங்கியவர்களுமான இஸ்ரவேலின் தீர்க்கரான இந்த மனிதர், நன்மையானதும், சந்தோஷமானதுமான உயரிய கொள்கைகள் மெய்மையாக மாறிவிடும் தருணத்தில், உலக இலக்கியங்களில், வரப்போகிற பொற்காலம் என்பதான மிகப்பிரகாசமான, உற்சாக பூர்வமான சித்திரத்தை, வரைந்து வைத்துள்ளார்கள்.[16]

உயிர்த்தெழுதலைக் குறித்து பவுல் கொரிந்தியருக்கு எழுதிய போது, அவர் *நீதி*, *நம்பிக்கை* என்ற பொருள்களையும் அதில் அடக்கியுள்ளார். இயேசு என்பதான எதிர்காலத்தின் உயிர்த் தெழுதலும், நம்பிக்கையும், வரப்போகிற காலத்தின் அப்போஸ் தலரின் கையாடலில்; பின்னிப்பிணைந்துள்ளன. இயேசு மரித்தார் என்பதும், அதைத்தொடர்ந்தது என்பதும் நம்பிக்கையான சாட்சிகளிடமிருந்து சரித்திர ஆதாரத்தோடு நம்பிக்கையின் செய்தியாக ஆரம்பிக்கிறது. இயேசுவே கிறிஸ்து என்றும், கடவுள் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பியதின் மூலமாக அவர் கிறிஸ்து என்று அறிவித்ததுமான அறிக்கையிலேயே கிறிஸ்தவ நம்பிக்கை வழிந்தோடுகிறது; அதில் நிலை நாட்டப்படுகிறது.

**வசனம் 20.** 15:13-19 வசனங்களில் உயிர்த்தெழுதலின்

நம்பிக்கையில்லாத ஒரு நிலவரத்தின் வெறுமையை வர்ணித்த பவுல், இயேசு உயிர்த்தெழுதலின் மெய்மையான தன்மையையும், அது சுட்டிக்காட்டும் எல்லாவற்றையும் குறித்து உறுதியளித்தார். இயேசு மெய்யாகவே, **மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டதினால்**, அவர் **நித்திரையடைந்துள்ளவர்களின் முதற்பலனாகக்** காணப்படுகிறார் (காண்க 15:18). இங்கு அப்போஸ்தலன் இஸ்ரவேலரின் சரித்திரத்தில் ஆழமாகப்பதிந்துள்ள ஒரு தத்துவத்தை எடுத்துப் பிரயோகிக்கிறார். இஸ்ரவேலர் நிலத்தின் முதற்கனிகளை கர்த்தருக்குத் துதி செலுத்தும் வண்ணமாகப் படைக்கவேண்டும் (உபா. 26:1, 2ல்). முதற்கனிகள் என்பது மேலும் கிடைக்கப் போகிறவைகளின் அடையாளமாகக் காணப்பட்டது; அவைகள் அறுவடையின் ஆரம்பமுமாகும், இன்னொரு சந்தர்ப்பத்தில், "முதற்கனிகள்" என்ற ஒப்புடைமையை, விசுவாசிகள் சரீரத்தின் மீட்பு என்பதான புத்திரசுவிகாரத்தை (ரோமர் 8:23) ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தருணத்தில் நம்முள்ளில் வாசம்பண்ணும் பரிசுத்தஆவியை கர்த்தர் அருளினதற்கு ஒப்பாக பிரயோகித்துள்ளார்.

இயேசுவின் உயிர்த்தெழுதல் கடவுளின் வல்லமையை செயல்முறையில் விளக்குகிறது. அவர் மரித்தோரை எழுப்பவும், தமது பிள்ளைகளை உள்ளில் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியால் வலிமைப்படுத்தவும் வல்லமை பெற்றவர்; இதைவிடவும் மேலான காரியங்களுமுண்டு. முதற்கனிகள் என்பது கிறிஸ்தவ குடும்பத்தில்; வரப்போகிற உயிர்த்தெழுதலை வாக்குத்தத்தம் பண்ணுகிறது. இயேசுவின் உயிர்த்தெழுதல், முன்காலங்களின் சரித்திர ரீதியான ஒரு நினைவுச் சின்னத்தைவிடவும் மேலான முக்கியத்துவம் பெற்றது; *அறுவடை உண்டாகும் முதல் அறுவடையார் அவர்*. அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது, கடவுளின் வல்லமையில் வைத்துள்ள உறுதியான விசுவாசத்தை விட அதிகமான காரி யத்தில் வெளிப்பட்டது; அவரின் வெற்றுக்கல்லறை, உள்ளில் வாசம் பண்ணும் ஆவியானவரைவிட அதிகமாக வெளிப்படுகிறது. இயேசு "அறுவடையின் மெய்யான துவக்கமாகி" விட்டிருந்தார்.[17] இயேசுவில் நித்தியமான உயிர்த்தெழுதலானது, மனிதசரீரத்தில் பலமாக ஊடுருவிச் சென்றுள்ளது. "இயேசுவின் உயிர்த்தெழுதல் என்பது நித்தியமான ஒழுங்கிற்குச் சொந்தமாக உள்ள, சரித்திரப் பிரகாரமான ஒன்றின் காட்சியைப்பற்றிய தோற்றத்திற்கு எவ் விதத்திலும் குறைவானது அல்ல" என்பதாகப் பொருள் கொள்கிறது.[18]

**வசனம் 21.** ஆதாமோடு இயேசுவை ஒப்பிட்டு, கடவுள் மானுடனாக அவதரித்ததின் நீண்டதாக பரந்துள்ள நித்தியமான விளைவுகளை, பவுல் அடிக்கோடிட்டுக் காண்பிக்கிறார். மிக அதிகமான விளைவு என்பது, ஆதாம் ஏவாளால் இவ்வுலகில் கொண்டுவரப்பட்டிருந்தது என்பதை அப்போஸ்தலன் தொடர்ந்து

கூறிவந்தார். எனினும், அந்தத் தாக்கமானது கிறிஸ்துவின் வருகையின் மூலமாக மேற்கொள்ளப்பட்டு விட்டது என்றும் அவர் கூறினார். இந்த சத்தியத்தை அவர் பின்னால் ரோமர் 5:12-17ல் கையாடியுள்ளார். பின்னர் 1 கொரிந்தியர் 15:44-50 வசனங்களிலும் இந்த ஒப்புடைமையைத் தொடர்ந்து பிரயோகித்துள்ளார். ஆதாமின் கலகச் செயல் **மரணத்தைக்** கொண்டு வந்தது; அது சரீர அளவிலும், ஆவிக்குரிய விதத்திலும் காணப்பட்டதாகும். ஆதாம் பாவம் செய்தது மாத்திரமல்லாமல், பாவத்திற்கான ஒரு மாதிரியையும் ஏற் படுத்தினான். அவன், மானுட இனத்தை பாத்திரமாக்கும்படியான, பாவத்திற்கான ஒரு மாதிரியுமாகிவிட்டிருந்தான். “எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள்” என்று பவுல் ரோமர் 3:23ல் எழுதியுள்ளார். “பாவம்” என்பதன் உலகளவானதும், ஆதாம் ஏவாளின் பாவமும் சம்பந்தப்பட்டதல்ல என்று கூறமுடியாது. ஆயினும் ஆதாமுக்கும் கிறிஸ்துவிற்கும் இடையில் பவுல் வரைந்துள்ள ஒப்புடைமைகளில் இறையியலாளர்கள், அப்போஸ்தலனின் அறிவிலும் இல்லாத இறையியல் சம்பந்தப்பட்ட கேள்விகளின் பதில்களை, கண்டுள்ளார்கள். ஆதாமைத் தொடர்ந்து, பாவமும் மரணமும் பெற்றோரிடமிருந்து பிள்ளைகளிடம் சுதந்தரமாக கடந்து சென்றது என்பது பவுலின் வார்த்தைகளில் எங்கும் காணப்படவில்லை. முதல் பாவம் என்பதான தத்துவம் ஆதாமின் மீறுதலிலோ, அல்லது இயேசுவின் உயிர்த்தெழுதலிலோ காணப்பட்டிருக்கவில்லை.

சில மார்க்கக் குழுவினரின் எண்ணங்களில் காணப்பட்ட அகஸ்டினின் விளக்கம், ஆதாமின் பாவத்தில் எல்லா மானுடரும் பாவம் செய்தார்கள் என்பதாக உள்ளது. பெண் என்பவரே பாவத்தை சுமக்கிறவராகவும், பாலியல் என்பது குற்றவாளி என்ற முறையிலும்; கருதப்பட்டது. “நாம் எல்லாரும் அந்த மனிதனி [ஆதாம்]டம் உள்ளோம். பாவத்தின் முன்னால் அவரிடமிருந்து உருவாக்கப்பட பெண்ணினால் அவன் பாவத்தில் வீழ்ந்தான்.”[19] “பாவம் என்பது சுதந்தரிக்கப்பட்டது, அதனால் குழந்தை பிறக்கும் போதே பாவத்தின் தன்மையைக் கொண்டுள்ளது” என்பதான காரண விளக்கத்தை இங்கு காணலாம். “முதல் பாவத்தின் பின்னால், மனிதர் ஒழுக்கமற்ற நிலையைக் கொண்டிருந்து, குழந்தைகளை வெறுத்தொதுக் கினார்கள்.”[20] அவரது எண்ணத்தின் படி, பாவம் மனிதரை கடவுளிடமிருந்து பிரிக்கும் ஒரு ஆவிக்குரிய நிலைமை ஆகும், அது மாமிசத்தின் வேட்கையைப் பின்தொடரும் மனிதரின் தெரிந்து கொள்ளுதல் அல்ல என்பதாகும். இந்த எண்ணச் செயல்பாடுகளின் முடிவுரையை எவ்வாறு கூறலாம் என்றால் மானுடர் பாவத்தின் குற்ற மனப்பான்மையோடு பிறந்து, அதன் அதிகாரத்தில் வாழ்கிற படியால், அவர்கள் எந்த நன்மையான காரியத்தையும் செய்ய முடியாது.

கொரிந்தியரிடம் பவுல் தர்க்கம் பண்ணின காரியத்தில்

உடனடியான ஒரு நிலைமையைக் குறித்துக் கூறுகிறார். அது பின் சந்ததியாரிடம் சொல்லப்படும் இறையியல் சம்பந்தப்பட்ட எந்த விவாதங்களும் அல்ல. அவர், கடவுளின் அதிகாரம், மனிதரின் சுதந்தரம் என்பதான பெரிய காரியங்கள் பற்றிய எந்த அக்கறையும் கொள்ளவில்லை. இம்மாதிரியான கேள்விகள் அவர் தனது வாலிபப்பிராயத்தின் செயல்களை நினைவில் கொண்டு வந்த நிலையில் அகஸ்டினைச் சுற்றி அதிகமாகக் காணப்பட்டன.[21] பாவமும் மரணமும் ஆதாமினால் உண்டானது போல, மன்னிப்பும் நம்பிக்கையும் (**மரித்தோரின் உயிர்த்தெழுதலும்**) இரண்டாவது ஆதாமாகிய இயேசுவின் மூலமாக உண்டாயிற்று என பவுல் விளம்புகிறார். அவர் தெய்வமாயிருந்தாலும், மானிடத்தன்மையை முழுவதுமாக ஏற்றுக்கொண்டிருந்தார். அப்போஸ்தலனின் இந்தக் காரண விளக்கம் செயல்பட வேண்டுமென்றால், "ஒரு மனிதனின் மூலமாக மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டானது" என்ற சாட்சியை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இயேசுவின் உயிர்த்தெழுதல், "மீட்கப்பட்டவர்கள் யாவரும் நித்தியமான வாழ்வுக்காக உயிர்ப்பிக்கப்படுவார்கள்" என்ற சத்தியத்தை வாசகர் கள் யாவரும் அறிந்துக் கொள்ள வேண்டும் என்பதில் பவுல் முனைப்பு கொண்டிருந்தார்.

**வசனம் 22.** கடவுளின் கிரியைகள் கிறிஸ்துவில் விளக்கிச் சொல்லும்படியாக பவுல் ஆதாமின் எடுத்துக்காட்டை பிரயோ கித்தார். இந்த இரண்டு காரியங்கள் மிகச்சரியாகப் பொருந்திக் காணப்படவில்லை என்ற போதிலும், அவர் அவ்வாறே தெரிந்து கொண்டார். முதலாம் ஆதாம் பாவத்தின் வசீகரிப்பின் வலிமையைக் காட்டுகிறான். ஆதாமின் எதிர்ப்புச் செயல் மனிதர் செயல் படுவதைப் போன்று ஒரு மனிதன் நடந்து காட்டுவதாக உள்ளது. அவனும் அவனது பின் சந்ததியாரும் பாவத்தைத் தெரிந்து கொண்டார்கள். ஆதாமில் முதலாவது வெளிப்பட்ட பாவத்தின் மூலமாக எல்லாரும் சாகிறார்கள். ஆதாமின் உலகளவான தன்மையானது மனித குலம் எவ்வாறு காணப்பட வேண்டும் என்பதை அவன் செய்து காட்டினதில் அடங்கியுள்ளது. முதல் பெற்றோர் நடைமுறைப்படுத்திக் காட்டிய மாதிரியைப் பின்பற்றி, மனித குலமும் கடவுளோடு எதிர் மறையாகக் காணப்படுவதாகத் தங்களை நிரூபித்தார்கள்.

ஆதாமைப் போலவே இயேசு கிறிஸ்துவும், மனிதகுலத்தின் குடும்பத்தைப் பற்றிய உலகளவான உண்மையை விளக்கிக் காட்டினார். மனிதர் தெரிந்து கொள்ளுதலை ஏற்படுத்திக் கொள்ளலாம். தீமையைப் போலவே நன்மையும் தனது சிறப்புத் தன்மையைக் கொண்டுள்ளது. **கிறிஸ்துவில் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்**; அதன்படி மரணத்திலிருந்து மாறி வருபவர்கள் யாவரும் மீட்பையும், ஒப்புரவாகுதலையும் கண்டு கொள்ளலாம். ஆதாமின் நடத்தை, கிறிஸ்துவின் செயல்பாடு

இவைகளின் விளைவுகள் முற்றிலும் இணைந்து போவதாகக் காணப்பட்டால், ஆதாமில் துவங்கிய உலகளவான மரணமானது, கிறிஸ்துவிலான உலகளவான இரட்சிப்பினால் பின்தொடரப்படும். எனினும், சிலர் கிறிஸ்துவை சொந்தமாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதை பவுல் அறிந்திருந்தார். கிறிஸ்துவாகிய மேசியா உலகளவான ஒரு ஈவை அருளியுள்ளார்; அவர் உலகளவான ஒரு தெரிந்து கொள்ளுதலையும் முன் வைத்துள்ளார். யூதர், புற இனத்தவராகிய இருவரும் எந்த பட்சபாதமும் காண்பிக்காத கிறிஸ்துவைத் தெரிந்து கொள்ளலாம். அவரைத் தெரிந்து கொள்பவர்களுக்கு கர்த்தர் மன்னிப்பை அருள் செய்கிறார். அவரில் காணப்படுபவர்கள் யாவரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். கிறிஸ்துவின் மரணம் உயிர்த்தெழுதல் என்பவைகளின் நற்பலன்கள் ஒவ்வொருவராலும் அறிந்துணரப்படும் என்பதையோ (ரோமர் 2:6-8), ஆதாமின் பாவமானது குழந்தை உருவான சமயந்தொட்டே அதை மோசமான முறையில் ஆட்கொண்டு விழுகிறது என்பதையோ பவுல் சொல்லிக் காட்டுவதாகக் காணப்படவில்லை. அவர் சொல்லவிழைவது என்னவென்றால் பாவம் மரணம் என்பதான பாதையில் ஆதாம் மனித குலத்தை ஏற்படுத்தி விட்டான் என்பதே. ஆயினும் உலக முறையின்படி, மனிதகுலம் மீட்பு, வாழ்வு இவைகளை வழங்கும்படியான, ஒரு கோரிக்கையையும் தெரிந்து கொள்ளுதலையும் எதிர் கொள்ளும் படியாக கிறிஸ்து அனுமதித்தார். அவரே உலகனைத்திற்குமான இரட்சகர்.

**வசனம் 23.** மரித்தோர் உயித்தெழுவார்கள் என்ற தனது பொருளைக்குறித்து பவுல் தொடர்ந்து பேசும்போது, இயேசுவே முதலாவது எழுப்பப்பட்டவர் என்று கூறுகிறார். அவர் இரண்டாம் முறை தோன்றும் போது, கிறிஸ்துவில் தரித்திருக்கிறவர்கள் யாவரும் அந்த உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவார்கள். ஒவ்வொருவரின் உயிர்த்தெழுதலும் **அவனவன் தன்தன் வரிசையிலே** உயிர்ப்பிக்கப்படுவான் என்பதையும் பவுல் வலியுறுத்திக் கூறுகிறார். வருதல் (παρουσία, *parousia*; “காணப்படுதல்”) என்ற பதத்தை அவர் தொழில் நுட்பமுறையில், இங்கு ஒருமுறை மட்டுமே (கொரிந்தியர் நிருபத்தில்) பிரயோகிக்கிறார்; அதன்படி காலத்தின் இறுதியில் கர்த்தர் திரும்பிவருதல் நடக்கும் (1 தெச. 2:19; 3:13; 4:15; 2 தெச. 2:1, 8). பல நேரங்களில் பவுல் தனது தோற்றத்தையோ அல்லது அவரது உடன் பணியாட்களின் வரவையோ எடுத்துக் கூறினார். 1 கொரிந்தியரின் நான்கு இடங்களில், கர்த்தர் திரும்பி வருகிறதைப் பற்றிய குறிப்பை தெளிவாகக் கூறியுள்ளார் (1:7, 8; 4:5; 11:26; காண்க 16:22). எனினும், கொரிந்தியருக்கு எழுதின கடிதங்களிலோ, பவுலின் வேறெந்த எழுத்துக்களிலோ கிறிஸ்துவின் திரும்பிவருதல் மிக ஆர்வம் எற்படுத்துகிற காரிய மாகக் காணப்படவில்லை. இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதே அப்போஸ்தலனின்

முக்கியமான அக்கறையாகக் காணப்பட்டது; அதாவது, முதலாவது இரண்டாவது வருகைகளின் இடை வெளியான தற்காலத்தில் கடைசி எக்காளம் ஊதப்படும் போது நடைபெறப்போகும் நிகழ்வுகளின் தொடரை எடுத்துக் கூறுவதைக்காட்டிலும், தற்காலத்தில் நாம் வாழும் வாழ்க்கைக்கு அவர் அதிக முக்கியத்துவம் அளிக்கிறார்.

கிறிஸ்துவுக்குரியவர்கள் அவருடைய மகிமையில் பங்கெடுக் கிறார்கள். மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, கடைசி நியாயத்தீர்ப்பு என்ற மூன்று பொருள்களின் ஒன்றோடொன்று உள்ள தொடர்பு பவுலினால் தர்க்கம் பண்ணப்பட்டது என்பதைவிட அவரால் ஊகிக்கப்பட்டது என்பதே சரியானதாகும். கர்த்தரின் திரும்பிவருதலுக்கு முன்பாகவும், இப்போதும்கூட, கிறிஸ்துவே உயிர்த்தெழுதலின் முதற்கனி களாயிருக்கிறார். அவரில் மரித்தோரின் உயிர்த்தெழுதல் ஏற்கெனவே ஆரம்பமாகிவிட்டது. தற்காலத்தின் முழுமையின் முன் பலனாக, கிறிஸ்தவர்கள், “ஆவியின் முதற்கனிகளாக ... நமது புத்திர சுவீகாரம் நிறைவேறுவதற்கு ஆவலாய்க் காத்திருக்கிறவர்களாகும்” (ரோமர் 8:23). பேற்றைப் பெற்றுள்ளார்கள் என்ற போதிலும், எதிர்காலம் எனப்படுவது ஒன்று உண்டு. இயேசு உயிர்ப்பிக்கப்பட்டாயிற்று என்ற போதிலும் அவரது பின்னடி யார்கள் கர்த்தர் திரும்பி வருவதற்கு முன்பாக உயிர்த்தெழுதலை உணர்ந்து கொள்ள முடியாது.

இந்த அதிகாரத்தில் உலகளவான உயிர்த்தெழுதலைக் குறித்து பவுல் எதுவும் கூறவில்லை; கிறிஸ்துவை நன்கு அறிந்திராத வர்களுக்கு தற்போதுள்ள நிலமையில் உயிர்த்தெழுதலைக் குறித்து விளம்புவது பவுலின் நோக்கங்களில் காணப்படவில்லை. பிற சில இடங்களில் அவர் அதைக் கூறியிருந்தார். மேலும், கிறிஸ்துவில் உயிரோடிருப்பவர்கள், இயேசு தமது தூதர்களோடு திரும்பி வரும் போது அவரோடு சேர்க்கப்படுவார்கள் என்று 1 தெசலோனிக்கேயர் 4:15-18ல் பவுல் கூறியுள்ளார். 2 தெசலோனிக்கேயர் 1:6-10ல், கடவுள் தமது மக்களை ஒடுக்குகிறவர்களைத் தண்டிப்பார் என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார் (காண்க 2 கொரி. 5:10). என்ற போதிலும், கடவுளை மறுதலிக்கிறவர்களுக்கு உயிரோடெழுப்பப்படும் சரீரத்தைக் குறித்த எந்தச் செய்தியையும் அவர் கூறவில்லை. சரீர உயிர்த்தெழுதல் என்பது மீட்கப்பட்டவர்களுக்கு அருளப்படும் வாக்குத்தத்தமாக புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ளது. அப்படியிருந்தும், கடவுளை மறுதலிக்கிறவர்களுக்காக உயிர்த் தெழுப்பப்பட்ட சரீரங்கள் பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லை. புதிய ஏற்பாட்டில் உடல் ரீதியிலான உயிர்த்தெழுதல் மீட்பிற்காக ஒரு வாக்குறுதி அளிக்கப்படுகிறது. “நித்திய அழிவு” (2 தெச. 1:9) அது மட்டுமல்லாமல், கிறிஸ்துவின் மீது தங்கள் முதுகில் திரும்புவோர்கள் நித்தியத்தில் எப்படி இருப்பார்கள் என்பதைப் பற்றி புதிய ஏற்பாட்டில் விவாதிக்க வில்லை.

**வசனம் 24**. *parousia*, என்றதான கர்த்தரின் வருகையும், இக்காலத்தின் **முடிவும்** ஒரே சமயத்தில் நிகழப்போவதாக எண்ணிக் கொள்ளப்படுகிறது. கிறிஸ்துவின் ஆளுகை மற்றும் தற்காலத்தில் கடவுளின் ஆளுகை இவைகளின் இடையிலான தொடர்பைக் குறித்து பல்வேறுவிதங்களில் விவாதித்துக்கூறுவது நம்பிக்கை யற்றதும் வீணானதுமாக உள்ளது. ஒரு விதத்தில் கூறும்போது, இயேசுவின் ஆளுகை அவர் பரமேறும்போதே ஆரம்பித்து விட்டதாகவும், அவர் நியாயாதிபதியாகவும் கர்த்தராகவும் திரும்பி வருமளவும் அது தொடர்வதாகவும் எண்ணிக் கொள்ளலாம் (அப். 1:9-11). இயேசுவின் முதலாவது தோற்றமும், இரண்டாவதானதும், ஒன்று மற்றொன்றைக்குறித்து தொடர்பு ஏற்படுத்தாமல் பேசிக் கொள்வது சாத்தியமில்லாதபடி மிக நெருக்கமாக இணைந்து காணப்படுகிறது. முதலாவது தோற்றம் இரண்டாவதானதற்கு உத்தரவாதமாக உள்ளது. இயேசு கடவுளின் வலதுபாரிசத்தில் அமர்ந்து திருச்சபையை ஆளுகை செய்வதாக பவுல் எப்போதும் சித்தரித்துக் காண்பிக்கிறார் (ரோமர் 8:34; எபே. 1:20; கொலோ. 3:1). இறுதிகாலம் வரும்போது, **அவர் ராஜ்ஜியத்தை கடவுளும் பிதாவுமானவரிடம் ஒப்படைப்பார்**.

கர்த்தர் திரும்பி வந்து, திருச்சபை பூமியின் ஆளுகைக்கு அடங்கியுள்ள நிலமைக்கு காணப்படாத போது கிறிஸ்துவின் மீட்புப்பணி நிறைவடைந்து விடும். அது சத்தியமானதால், கடவுளே எல்லாவற்றிற்கும் எல்லாமுமாகக் காணப்படுவார் (15:28). **எல்லா துரைத்தனத்தையும் அதிகாரத்தையும் வல்லமையையும்**, பிதாவான வரிடம் அவர்(கிறிஸ்து) ஆளுகையை ஒப்படைக்கும்போது, நீக்கிப்போடுவார். பரலோக ஆட்சியில் காணப்படும் எல்லாவித எதிர்ப்பு சக்திகளும் (கொலோ. 1:16), தற்காலத்தில் கிறிஸ்துவின் ஆளுகைக்கு ஏற்பட்டுள்ள சவால்களும் கர்த்தர் இயேசுவின் ஆளுகையின் கீழ் வந்துவிடும். கிறிஸ்து "எல்லாத்துரைத்தனத் திற்கும், அதிகாரத்திற்கும். வல்லமைக்கும் ஏற்றவராகக் காணப்பட மாட்டார் என்பதாக பவுல் கூறவில்லை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்," அவர் கூற முற்படுவது என்னவென்றால், எல்லாவற்றையும் அணைத்துக்கொள்ளும் மானுடரின் மீட்புக்கான கடவுளின் வடிவமைப்பு (திட்டம்) பூரணமடைந்து விடும் என்பதையே பவுல் உறுதியாகக் கூறுகிறார். நாம் கடவுளின் ஆளுகையில் நம்பிக்கையாயிருந்து, கிறிஸ்துவிலிருந்து கடவுளுக்கு அதிகார வல்லமை கடந்து செல்வதைப் பற்றி அதிகமாக யோசனை செய்யாமலிருப்பது ஞானமாகக் கொள்ளப்படும். அவர் மகிமையில் வெளிப்படுவதற்கும் எல்லாக் காரியங்களும் பூரணமாக நிறைவடை வதற்கும் இடைக்காலத்தில் பூமியில் பெறப்போகிற ஆயிரம் ஆண்டு கிறிஸ்துவின் ஆளுகையைக் குறித்து பவுல் எதுவும் கூறவில்லை. அவ்வாறான எல்லாப் போதகங்களும் மனுடரால் ஏற்படுத்தப்

பட்டதாகும்.

**வசனம் 25.** இயேசு தமது திருச்சபையின் மேல் **ஆளுகை செய்ய வேண்டும்**. அவர் ஒரு ஜனத்தின் ராஜாவும் (மத். 2:2; 27:11; லூக். 19:38; கொலோ. 1:13) முதற்பேறானவரின் சபையின் தலையாகவும் இருக்கிறார் (எபி. 12:23). திருச்சபை மற்றும் கடவுள் ராஜ்ஜியத்தின் இடையிலான நுட்பமான வேறுபாடுகள் பின்காலத்திற்குரியவை; அவருடைய ராஜரீகத்திற்கு எதிராக எழும்பும் புதிய ஏற்பாட்டில் அவ்வாறான வித்தியாசங்கள் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளன. முந்தின வசனத்தில் கிறிஸ்து எல்லாச் சட்டங்களையும், அதிகாரத்தையும் நிர்மூலமாக்கிப் போடுவார் என்பதை பவுல் உறுதியாகக் கூறினார் (1 கொரி. 15:24). **அவர் எதிரிகளை தமது கால்களின் கீழ் மிதித்துப்போட்டார்** என்ற சொற்றொடரில்; முதல் பெயர்ச்சொல்லின் பொருள் நிச்சயமற்றுக் காணப்படுகிறது. கிறிஸ்துவின் பாதங்களின் கீழ் எல்லாவற்றையும் போட்டுவிட்டது தேவனா அல்லது கிறிஸ்துவே மற்றெல்லா அதிகாரத்தையும் அடக்கிப்போட்டாரா? "அவருக்கு" என்ற இடைச்சொல் 15:25யை கிறிஸ்துவைப்பற்றிக் கூறும் முந்தின வசனத்தின் சிந்தனையோடு இணைக்கிறது. ஆனால் தேவனே 15:27ல் சுட்டிக்காட்டப்பட்ட சங்கீதம் 8:6ன் பொருளாயிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. 15:25யிலும் கடவுளே முதன்மைப் பொருளாக உள்ளார். "கடவுள் எல்லாச்சத்துருக்களையும் அவரது [கிறிஸ்து] பாதத்திற்கு கீழாக்கிப் போடுவார்." "அவரது பாதங்களின் கீழ்" என்ற வார்த்தை சங்கீதம் 8:6லும், 110:1லும் காணப்படும் அதே கருத்தை எதிரொலிக்கிறது. "கடவுளே அதிகாரத்தின் முகவரும் ஆதாரமுமாக விளங்குகிறார்; கிறிஸ்துவிலேயே எல்லாமும் கீழ்ப்படுத்தப் பட்டுள்ளன."[22]

ஆடவரையும் மகளிரையும் பாவத்திலிருந்து மீட்டு, கிரயமாகப் பெற்றுக் கொண்ட மானிடனாக அவதரித்த இயேசு, காலங்களின் கடைசியில் அவரது பரமேறுதலுக்கும், *parousia*விற்கும் உள்ள இடைவெளியில் ஆளுகை செய்கிறார். பிதாவானவரின் ஆளுகைக்கும், குமாரனின் ஆளுகைக்கும் மத்தியில் என்ன வித்தி யாசம் காண்பிக்கப்பட வேண்டுமோ அது தெய்வத்துவம் (தேவன்) என்ற தலைமைத்துவத்தில் ஒளிந்துள்ளது. பவுல் எந்த வித்தியாசத் யும் சுட்டவில்லை. பிதாவானவரை ஏற்றுக்கொள்பவர், குமாரனைத் தங்களோடு அணைத்துக் கொள்வதன் மூலமாகவே அதைச் செய்திருக்கிறார்கள். கிறிஸ்துவின் மூலமாக கடவுளிடம் சேருகிற வர்கள், அவர் திரும்ப வரும்போது காணப்படும் வெற்றிவாகையில் பங்கு கொள்வார்கள் (காண்க ரோமர் 14:9). தீமையானது தற்காலத்தில் எவ்வாறான சிறிதளவு வெற்றியைப் பெற்றிருந்தா லும், அது ஒன்றுமில்லாமற் போய்விடும். கிறிஸ்துவின் உயிர்த் தெழுதலே இறுதி வெற்றியின் நிச்சயமாக உள்ளது.

**வசனம் 26.** ஆரம்பமுதலே, பௌதீக அளவில், மரணம் என்பது மூச்சு அடங்கிப் போவதாகவும், உணர்வும் இயக்கமும் அடங்கிப் போவதாகவும் எண்ணிக்கொள்ளப்பட்டிருந்தது. மரணம், மரித்தல் என்பதைப் பற்றிய ஆதிக்குறிப்பிலும் அவ்வாறே உள்ளது (ஆதி. 2:17). பௌதீகத்திற்கு அப்பால் அதற்கு ஒரு அளவு உண்டு என்பதை கடவுள் சொல்லிக் காட்டினார். இது கிரிம் ரீப்பர் **அல்லது கடைசி** எதிரி என நபராக இருந்தாலும், மரணம் என்பது வாழ்வின் (உயிரின்) எதிர்மறையாகவே உள்ளது. வாழ்வு என்பது மகிழ்ச்சி, ஒருவர் தனது இடத்தைக் கண்டுகொள்வது, அன்பு, குடும்பம், மனநிறைவு, திருப்தி என்பவைகளின் அடையாளமாக உள்ளது; மரணம் வாழ்வின் எதிர்மறை. இயேசு மரணத்தை அதன் கூரில் கொள்ளையிட்டுக் கொண்டார் (15:55, 56). மக்கள் மிகவும் ஏற்ற தான உயரிய வாழ்வு பெறும்படியாக அவர் வருகை தந்திருக்கிறார் (யோவான் 5:24; 10:10).

இயேசுவின் உயிர்த்தெழுதல் மூலமாக முதற்கனிகளாகிய சரீர உயிர்த்தெழுதல் மாத்திரம் விசுவாசிகளுக்கு உறுதி வழங்கப்பட வில்லை, இயேசுவின் உயிர்த்தெழுதல் எல்லா சத்ததுருக்களின், ஏன் மரணத்தின் மேலும் கூட அவரது இறுதி வெற்றியையும் உறுதிப் படுத்துகிறது. கிறிஸ்து திரும்ப வருமளவும், மானுடரின் உலகில் பாவமும் மரணமும் அதிகாரம் பெற்றுக் காணப்படும்; ஆனால் கடைசியாக அதுவும் ஒழித்துப் போடப்படும். பாவத்தினால் மரணம் உண்டானது; ஆனால் வாழ்வோ (ஜீவனோ) மரித்தோரிலிருந்து உயிர்த்த அவரின் மூலமாக உண்டாகிறது. அவரது வெற்றி பூரணமாகும்போது மரணம் காணப்படாமற் போய்விடும்.

சங்கீதம் 8:6லிருந்து பவுல் எடுத்துக்கூறிய வார்த்தைகள் ஒரு பொதுவான பயன்பாடாக அமைந்துள்ளது. “மனிதன் என்ன வாகிறான்” என சங்கீதக்காரன் கேட்கிறான், “மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்?” (சங். 8:4). இந்த வார்த்தைகளை பவுல் குறிப்பாக நாசரேத்தின் இயேசுவைப்பற்றிக் கூறுகிறார் (காண்க எபி. 2:5-8). சங்கீதக்காரன் உறுதியாகக் கூறுகிறபடி, “உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்” (8:6). இவ்வார்த் தைகளின் ஒரு இணையற்ற பயன்பாட்டை கடைசியான மனிதனிடம், அதாவது மானுடனாக அவதரித்த கிறிஸ்துவிடம்; பவுல் கண்டிருந்தார். கிறிஸ்துவின் மானுட அவதாரத்தினாலும், அதன் விளைவாக ஏற்பட்ட மரணத்தினாலும், “கடவுள் எல்லா வற்றையும் அவரது பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினார்” (1 கொரி. 15:27) அவர் தமக்காக ஒரு பரிசுத்த ஜனத்தை சுத்திகரிப்பதின் மூலமாக (காண்க 1 பேதுரு 1:14-19) இயேசுவின் சட்டம் வெளிப் படுகிறது. அவர் தமது திருச்சபையின் மேல் ஆளுகை செய்கிறார்.

**வசனம் 27.** இந்த சத்தியத்தை அப்போஸ்தலன் தெளிவுபடுத்திக் கூறினார். ஆனால் அவர் **சொல்லியிருக்கும் போது** என்ற NASB மொழி பெயர்ப்பு ஒரு மூன்றாம் நபர் ஒருமை வினைச்சொல்லுக் கான பொருளை வழங்குகிறது (εἴπῃ, *eipē*). "அவன்," "அவள்," "அது" எதைக்குறிக்கிறது என்பதை சந்தர்ப்பத்தின்படி பொருள் கொள்ள வேண்டும். பவுல் சங்கீத புஸ்தகத்தின் வசனங்களை எடுத்துக்காட்டாகக் கூறுகிறபடியால் மேற்கண்ட சொற்றொடரின் மிகச்சரியான மொழிபெயர்ப்பு "ஆயினும் அது கூறுகிறபடி" என்றே இருக்கவேண்டும். மொழி பெயர்ப்பில் காணப்பட்ட வித்தியாசம் மிகச் சிறியதே. கடவுள் சொல்லியிருக்கிறார் என வேதம் கூறுவதும், கடவுள் வேதத்தில் என்ன கூறியிருக்கிறார் என்பதுவுமே பவுலின் கருத்தாயிருந்தது. அப்போஸ்தலனின் கருத்துக்குறிப்பின்படி, **சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று** சொல்லியிருக்கும் போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப்படுத்தப் படவில்லையா என்பது வெளியரங்கமாயிருக்கிறது என்பதாக உள்ளது. பிதாவாகிய கடவுள் குமாரனுக்குக் கீழ்ப்படுத்தப்பட வில்லை. ஆளுகையிலும், மகிமையிலும் பிதாவும் குமாரனும் பிரிக்க முடியாதவர்களாக உள்ளபோது, பிதாவின் முதன் மையை உறுதியாகக் கூறுவதற்கு பவுல் தயங்கவில்லை. வேதத்தில் எங்கும் பிதாவானவர் குமாரனுக்குக் கீழ்ப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட வில்லை. பிதா குமாரனுக்கு ஒரு பணியை நியமித்துள்ளார் (யோவான் 5:36); குமாரன் பிதாவின் சித்தத்தையே செய்தார் (யோவான் 4:34). இயேசு மானிடனாக அவதரித்த ஒப்பற்ற சேவை அவரை கடவுளின் ராஜ்ஜியத்தை ஆளும்படியாக அதிகாரப் படுத்துகிறது (எபே. 1:22, 23); எனினும், அவரின் ஆளுகை, கடவுளின் மிக உயரிய நிலையோடு பொருந்தியே அமைந்துள்ளது.

**வசனம் 28.** 1 கொரிந்தியர் முழுவதிலும், இந்த வசனத்திலும் 1:9யிலும் மட்டுமே, பவுல் இயேசுவை கடவுளின் குமாரன் எனக் குறிப்பிடுகிறார். பிதாவும், குமாரனும் ஒருவரோடொருவர் மிக உயரிய நிலைக்கு போட்டியிடுவதாக அப்போஸ்தலன் குறிப்பிடவில்லை. திரித்துவத்தின் உள்ளேயே "போட்டி" என்ற காரியம் உண்டாகிறதைப்பற்றி கற்பனை செய்வதும் கடின மானதே. பிதாவும் குமாரனும் ஒரே மனதுடையவர் களாக (காண்க 6:19; 12:3), ஒரே தன்மையோடு காணப்படுகிறார்கள். பவுல் ஏற்படுத்தின வித்தியாசம், இயேசு இரட்சகர் என்ற நிலையையும், அவர் தமது மக்களின் தலைமையில் உள்ளார் என்பதையும் தொடர்பில் ஏற்படுத்துவதாக உள்ளது. அவர்களில் ஒருவராக அவர் ஆளுகை செய்கிறார். நியாயத்தீர்ப்பிற்காகவும், உயிர்த்தெழு தலுக்காகவும், தமது பிள்ளைகளை நித்தியத்தில் ஏற்றுக் கொள்ளும்படியாகவும் அவர் திரும்பிவரும் போது, ஒப்புரவு ஏற்படுத்தும் அவரின் இணையற்ற நிலை

முடிவடைந்து விடும் (1 தீமோ. 2:5; காண்க 1 கொரி. 8:6). அந்த சமயத்தில், **தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்.** சகலத்திலும் சகலமு மாயிருக்கிற தேவனே தெய்வத்துவமுள்ளவர்.

இவைகள் சுட்டிக்காட்டுவது என்னவென்றால், குமாரன் பரமேறினதற்கும், அவரின் *parousia* விற்கும் இடையிலான கடைசி காலத்தில் (15:24), குமாரனுக்கு ஆளுகையிலும், அதிகாரத்திலும் ஒரு பங்கு காணப்படும். அது மானுட உலகின் வாழ்விலும் சாவிலும் கூடக் காணப்படும். இப்போதும் கூட குமாரனின் அதிகாரம் பிதாவின் மகிமையையோ மாட்சிமையையோ மிஞ்சியதல்ல. குமாரனின் மானிட அவதாரத்தை அடிப்படையாகக் கொண்டே பிதாவானவர் அவருக்கு ஒரு திருப்பணியை வழங்கியுள்ளார். பிதாவும் குமாரனும், மனித குலத்தின் மீட்புக்காக ஒரே நித்திய நியமத்தில் பூரணமாக ஒன்றிணைந்துள்ளார்கள்.

கிறிஸ்துவின் செய்தியானது, ஒரு முழு மனதான அர்ப் பணிப்பிற்கான, மரணம் வரையிலும் கூட செல்லத்தக்கதான, அழைப்பாக உள்ளது (லூக். 14:26, 27). பவுல் தர்க்கிக்கிறபடி, மரித்தோரின் உயிர்த்தெழுதல், கலிலேயாவின் போதகரில் கொண்டுள்ள விசுவாசத்தை, அவர் வரையறுத்திருந்த அடிப்படைத் தன்மை கொண்ட வாழ்வை வாழ்வதோடு இணைக்கிறது. வரப்போகிற காலத்தின் வாழ்வைப் பற்றிய எதிர்பார்ப்பு காணப்படாத நிலையில், இயேசுவைப் பின்பற்றி நடப்பதைத் தெரிந்து கொள்வதையும், தன்னை இடறல்கள், இன்னல்கள், மரணம் என்பவைகளுக்கு முன் நிறுத்துவதையும், ஒரு முட்டாள் மட்டுமே தெரிந்து கொள்ளுவான். சரீர உயிர்த்தெழுதலானது, கிறிஸ்துவில் கொண்டுள்ள விசுவாசத்தின் இருதயத்தில் பங்கு பெறுவதாக உள்ளது.

## “ஏன்” என்ற ஒரு பெரிய கேள்வி (15:29-34)

**29மேலும் மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர் களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்? 30நாங்களும் ஏன் எந்நேரமும் நாசமோசத்திற்கு ஏதுவாயிருக் கிறோம்? 31நான் அநுதினமும் சாகிறேன்; அதை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் உங்களைக் குறித்து, நான் பாரட்டுகிற மேன்மையைக்கொண்டு சத்தியமாய்ச் சொல்லுகிறேன். 32நான் எபேசுவிலே துஷ்டமிருகங்களுடனே போராடினேனென்று மனுஷர் வழக்கமாய்ச் சொல்லுகிறேன்; அப்படிப் போராடின தினாலே எனக்குப் பிரயோஜனமென்ன? மரித்தோர் உயிர்த் தெழாவிட்டால், புசிப்போம்**

**குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே? 33மோசம் போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும். 34நீங்கள் பாவஞ்செய்யாமல் நீதிக்கேற்க விழித்துக்கொண்டு, தெளிந்தவர் களாயிருங்கள்; சிலர் தேவனைப்பற்றி அறிவில்லாதிருக்கிறார்களே; உங்களுக்கு வெட்கமுண்டாக இதைச் சொல்லுகிறேன்.**

**வசனம் 29.** இந்த வசனத்திலே காணப்படும் எளிதில் புரியக்கூடாத கடினமான தன்மையை விளக்குவதற்கு வேதாகம மாணாக்கர் பல்வேறு உபாயங்களை வழங்கியிருந்தார்கள். இவைகளில் பலவும் அவைகள் நல்லபொருளுள்ள விளக்கத்தைக் கொடுக்கின்றன என்பதை விட, அதை எடுத்துக் கூறியவரின் குழப்பமான மனநிலையைக் குறிப் பதாகவே அர்த்தங் கொள்ளப்பட்டன. போதகத்திரட்டின் மொத்த அமைப்பும் இந்த வசனத்தின் எழுத்துப் பிரகாரமான விளக்கத்தில் மோதிக் கொள்ளுகின்றது. வேறு சிலர் கூறுகிறபடி, கொரிந்தியர் இறந்து போனவர்களின் பெயரால் ஒருவித பிறருக்காகத் துன்பம் அனுபவிக்கிற மாதிரியில் ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். அது சரியானதாகக் காணப்படும் நிலையில், புதிய ஏற்பாட்டில் அதைப்பற்றிச் சொல்லப்பட்டுள்ள ஒரே ஒரு குறிப்பு இதுவாகும். மேலும் இந்த விளக்கம் இக்கட்டான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துகிறது, எப்படியென்றால் பவுல் அதை மிகச்சாதாரணமாக எடுத்துக்கூறிவிட்டு, பின்னர் அதை தளர்த்தி விடுகிறார். கிறிஸ்தவர்கள் மரித்துப்போன அவிசுவாசிகளான நண்பர்கள், உறவினர்கள் போன்றவர்களின் நாமத்தில் ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டிருந்தார்களானால், அதை சரிப் படுத்த முனையாமல் அந்த வழக்கத்தைக் குறித்துச் சொல்ல முனைவது பவுல் சொல்வது ஏற்றபடியாக அமையவில்லை. நிலை குலைந்து போன கிறிஸ்தவ போதகங்களை எதிர்கொள்ள பவுல் வெட்கப்படவில்லை. ஞானஸ்நானத்தைக் குறித்த காரியங்களை பவுல் விவாதிக்கும் சமயங்களிலெல்லாம் (ரோமர் 6:3-7; 1 கொரி. 6:11; கலா. 3:27; கொலோ. 2:12; தீத்து. 3:5), ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்களிடமிருந்து ஒரு விசுவாச பதிலுரையை அவர் எடுத்துக் கூறினார்.

கொரிந்தியர் மரித்தோரின் பெயரால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும் காரியத்தில் காணப்பட்ட முரண்பாடுகளுக்கு மாறாக சில விரிவுரையாளர் இந்த உரை நடைப்பகுதிக்கு விரிவானபடி விளக்க மளித்துள்ளார்கள். Herman Ridderbos இவ்வாறக எழுதியுள் ளார் “அவரது எதிரிகள் சிலரிடம் காணப்பட்ட [ஆனால் அவர் ஏற்றுக்கொள்ளாத] ஒரு வழக்கத்தை அவர் முறையிட்டுக் கூறியிருக்கலாம்.”[23] அது எந்த நன்மையையும் ஏற்படுத்தாது என அவர் அறிந்திருந்தும் பிரச்சனையற்றது என அவர் கண்டிருக்கலாம்.

மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், **மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்** என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகள், அவர் அந்த வழக்கத்தை ஏற்றுக் கொள்ளாத நிலையையே காட்டுகிறது. அவரின் அந்தக் குறிப்பு உயிர்த்தெழுதலைப்பற்றிய அவரது போதகத்தை உறுதியாக்குவதாயிருந்தாலும், அவ்வாறான போதகத்தை அவர் தெளிவான முறையில் மறுத்துக் கூறியிருக்க வேண்டும் என சிலர் எதிர்பார்க்கலாம். எனினும், பவுல் அந்த வழக்கத்திலிருந்து தம்மை விலக்கிக் கொண்டதாகவே காணப்படுகிறது. **அவர்கள் என்ன செய்வார்கள்?** என்று அவர் கேட்கிறார்; "நாம் என்ன செய்வோம்?" என அவர் கேட்கவில்லை. அந்தக் கேள்வியின் அர்த்தம், "மரித்தோரின் உயிர்த்தெழுதல் நடைபெறாவிட்டால், மரித்தவர் களுக்காக ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதின் பலன் என்ன?" என்பதாக உள்ளது. "உயிர்த்தெழுதல் என்ற காரியத்தை மறுப்பவர்கள் சிலரும்கூட, மரித்தோரின் பெயரால் ஞானஸ்நானம் எடுத்துக் கொள்கிறார்கள். அதற்கு என்ன அர்த்தம் கூறலாம்?"[24]

இன்னொருவிதத்தில் கூறும்போது (மரித்தவர்களைப்பற்றி எண்ணிக்கொண்ட பிற்பாடு) ஞானஸ்நானம் என்பதின் மதிப்பீட்டைக் குறித்து ஒருவரின் புரிந்துகொள்ளுதல், எவ்வாறு காணப்படும் என்பதை நினைவில் கொண்டுவர பவுல் முனைந்திருக்கலாம். கிறிஸ்துவில் நம்பிக்கை ஏற்படுத்திக் கொண்டவர்கள், பிறர் மரிப்பது போல அவர்கள் தாங்களும் மரித்து, கடைசி எக்காளம் ஊதப்படும்போது கர்த்தரை சந்திப்பார்கள் என்ற சத்தியத்தை உணர்ந்து கொள்வதால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள விரும்புவார்கள். பவுலின் சிந்தனைகளை David E. Garland கீழ்கண்டவாறு சுருக்கிக் கூறுகிறார். "மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், ஞானஸ்நானம் என்பது நிகழப்போகாத ஒரு காரியத்தை தவறாக மாதிரிப்படுத்தும் ஒரு சடங்காக மாறிவிடுகிறது"[25] சாதாரணமாக பயன்பாட்டில் உள்ள வார்த்தைகளின் பொருளை இழுத்துக் கூறுவது, பிறரைப்போலவே, பவுலின் வழக்கமாயுமிருந்தது ὑπέρ (*huper*) - "அதை நிறைவேற்றும் எண்ணத்தோடு" என்ற இடைச்சொல்.

எதிர்பாராதவிதமாக மரித்துப்போகும் ஒருவரின் விசுவாசத் திற்கு சாட்சி என்பதாக பவுல் விசுவாசிகளின் ஞானஸ்நானத்தை அர்த்தங்கொள்கிறார் என்பது ஒருவிதமான சாத்தியக்கூறாக இருக்கலாம். பயபக்தியுள்ள ஒரு விசுவாசி தான் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வது மரித்துப்போன ஒருவரின் விசுவாசத்தை வெளிப்படுத்துவதற்காகச் செய்யப்பட்டதாகயிருக்கலாம். கடவுளின் தயவையும், கிருபையையும் நாடி முறையீடு செய்வதற்கான ஒரு தீவிர முயற்சியாக அவர் அதை மேற்கொண்டிருக்கலாம். அந்தப்படியான ஒரு

அமைவு பவுல் தான் செய்ததை விட அதிகமாக எதையும் சொல்லவில்லை என்பதை விளக்குவதாகக் காணப் படலாம். மரித்தோருக்காக ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர் களின் துக்கத்திற்கு இணங்கிப்போவதாகவும் அவர் அதைக் கூறியி ருக்கலாம்.

பவுலின் வார்த்தைகளின் எந்த விளக்கமும் முற்றிலும் திருப்திகரமாகக் காணப்படவில்லை. எனினும், தள்ளிப்போடக் கூடிய இவ்வசனத்திலிருந்து சில முடிவான அர்த்தங்களை சிலர் எடுத்துக் கொண்டுள்ளார்கள். (1) "மரித்தோர்" எனப்படும் பதம் கிரேக்கத்தில் பன்மையில் புரிந்து கொள்ளப்படுவதால், அந்த வசனம் மரித்த கிறிஸ்துவின் பெயரால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வது என்பதாகக் கொள்ள முடியாது. (2) மரித்தோருக்காக ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வது என்பதான எந்தப் போதகமும் புதிய ஏற்பாட்டில் காணப்படாதபடியால், ஒருவர் மற்றொருவரின் பாவங்களைக் கழுவும்படியாக ஞாஸ்நானம் பெற்றுக் கொள்வது என்பதற்கு முறையான பலன் காணப்படும் என்ற எண்ணத்தை நாம் தாராளமாக ஒதுக்கிவைத்து விடலாம் (காண்க அப். 22:16). ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும் ஒருவிசுவாசி தனது பாவங்களை உணர்ந்து பரிதவிக்கிறார் என்பதான விசுவாசத்தின் பதிலுரையாக, இரட்சிக்கும் விசுவாசம் உணர்ந்து கொள்ளப்படுகிறது.

**வசனம் 30.** கொரிந்தியரிடமிருந்து சற்று விலகி தன்னைக் குறித்தக் காரியத்தில் கவனஞ்செலுத்தி பவுல் கூறுவதென்ன வென்றால் (மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லையென்றால்) அவரும் அவரோடுள்ள பிற போதகர்களும் கிறிஸ்துவிற்காகத் தங்களது உயிர்களை ஆபத்தில் வைக்கவேண்டும் என்பதாகும். சரீர உயிர்த்தெழுதல் இல்லாத மரணத்திற்குப் பின்பான ஒரு வாழ்வு காணப்படும் சாத்தியத்தை அப்போஸ்தலன் சற்றேனும் எண்ணிக் கொண்ட நிலையில், அவ்வாறான இந்த வாழ்விற்குப் பின்பான ஒரு வாழ்வில் அவர் எந்த மதிப்பும், ஆவலும் (ஈர்ப்பும்) கொண்டதாகக் காணவில்லை.

கிரேக்க சிந்தனையாளர்களைப் பொறுத்த மட்டில், பௌதீக நிலையிலுள்ள ஒரு சரீரம் மரணத்திற்குப் பின்னும் காணப்படும் என்பதான எண்ணம் நாகரீகமற்ற அறிவின்மையின் உச்ச நிலையாகும். உதாரணமாக, அத்தேனே பட்டணத்தில் (ஏதென்ஸ்), மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர் பேசும் நேரம் வரைக்கும், அவர் நேர்மறையான வரவேற்பைப் பெற்றுக் கொண்டதாகக் காணப்படுகிறது (அப். 17:32). பவுலின் எதிரிகள் சிலர் (எதிர் மறை எண்ணங்கொண்டவர்கள்) அவர் வாக்கு சாதுரியம் இல்லாதவராயிருந்தபடியால் அவரின் அப்போஸ்தல அதிகாரத்தைக் குறித்து சந்தேகம் கொண்டிருந்தார்கள் (2 கொரி. 10:10). அவரிடம் தத்துவஞானம், தத்துவ ரீதியான அறிவு காணப்படவில்லை என்றும்

கூறினார்கள் (காண்க 1 கொரி. 2:6). தமது திறனாய்வாளர்களுக்கு பவுலின் பதிலுரை என்னவென்றால் புத்திகூர்மையான அறிவு சார்ந்த தன்மையில் அவரிடம் என்ன குறைபாடு காணப்பட்டிருந்தாலும், ஒப்புரவு செய்யாத விசுவா சத்தின் மூலமாக அவர் அதை ஈடுகட்டிக் கொண்டிருந்தார். தாம் விசுவாசித்த காரியத்திற்காக மரிக்கவும் ஆயத்தமாயிருந்தார், ஆனால் கல்வி அறிவு பெற்றிருந்த தத்துவ மேதைகள் அவ்வாறாகக் காணப்படவில்லை.

தனது விமரிசைசெய்பவர்களின் கூற்றுகளை மறுக்கவும் பவுல் தயங்கவில்லை. அவரிடம் குறைவான ஞானம் காணப்பட்டிருந்த தானால், அது பூமிக்குரிய ஞானமேயாகும். கடவுளின் மகிமைக்கு அடையாளமான தனது பலவீனத்தின் மூலமாக அவர் கடவுளின் கிரியைகளைப் புரிந்து கொண்டிருந்தார். தத்துவக் கல்வியைப் பற்றி அவர் எந்தவித பாவனையையும் காட்டிக் கொள்ளவில்லை. மேலும் அவர் தொடர்ந்து ஆபத்தை சந்திக்கும் நிலையில் காணப்பட்டது கடவுளின் வழிநடத்துதலை அவர் சார்ந்திருந்ததற்கு ஆதாரமாக விளங்கியது. பவுல் கொரிந்தியரிடம் எழுப்பும் கேள்வி என்ன வென்றால், மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லையென்றால், அவர் ஏன் தான் செய்வதைப்போல வாழ்ந்து, போதிக்க வேண்டும் என்பதே. ஒவ்வொரு மணி நேரமும் அவர் ஏன் தன்னை **எந்நேரமும் ஆபத்தில் ஒப்புக்** கொடுக்க வேண்டும் என்பதாகவும் உள்ளது.

**வசனம் 31. நான் அநுதினமும் சாகிறேன்** என்று பவுல் கூறுவதன் பொருள் என்னவென்றால், அவர் தொடர்ந்து ஆபத்தான நிலையில் காணப்பட்டார் என்பதாகும். எந்தக் கணமும் அவர் சிறைப் படுத்தப்படும் ஆபத்தையும், மரணத்தையும் கூட எதிர் கண்டார். அவர் சென்ற இடங்களிலெல்லாம் அவருக்கு எதிரிகள் காணப்பட் டார்கள். ஆயினும் அப்போஸ்தலன் தனது இன்னல்களை சுவிசேஷத்தின் பொருட்டு சுமையாகக் கருதவில்லை (காண்க அப். 9:16; 2 கொரி. 11:23-27) கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களைப் போன்ற பிற கிறிஸ்தவர்களில், கடவுளின் மகிமைக்காகவும், ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காகவும், விசுவாசத்தை எழுச்சி யூட்டுவதனால் உண்டாகும் மனதிருப்தி, மன மகிழ்ச்சி இவைக ளுக்காக அவர் தனது உயிரையும் ஆபத்தில் வைக்க விருப்பம் கொண்டார். "உறுதி" νή (*nē*) என்ற பதம் ஒரு உறுதி மொழியை அறிமுகப்படுத்தும் வண்ணமாக பிரயோகிக்கப்படுவதாகும், இது புதிய ஏற்பாட்டில் இங்கு மாத்திரமே காணப்படுகிறது. இதன் மூலம், அப்போஸ்தலன் தான் எழுதிய சத்தியத்தை பயபக்தியோடும், உறுதியாகவும் சார் உறுதியளிக்கிறார். இந்த வசனம் REBயில், "நான் தினமும் சாகிறேன்; நமது காத்தராகிய கிறிஸ்து இயேசுவுக்காக எனது நண்பர்களாகிய உங்களில் உள்ள எனது பெருமிதத்தின் மூலம் நான் உறுதி வழங்குகிறேன்" என வரையப்பட்டுள்ளது.

உங்களைக்குறித்து நான் **பாராட்டுகிற** மேன்மையைக் கொண்டு என்ற சொற்றொடரின் விளக்கம் கேள்விகளை எழுப்புகிறது. KJVயின் "உங்களது" அல்லது "உங்களில்" என்பது மிக வலிமையாகக் காணப்படுகிறது. அதன் உட்பொருள் "பயபக்தியோடு கூடிய உறுதிமொழியினால், நான் உங்களது பெருமிதத்தை முறையிடுகிறேன்." அப்போஸ்தலன் தான் கடந்து சென்ற ஆபத்தை, அவர்கள் கிறிஸ்துவில் கண்டு கொண்ட ஆசீர்வாதங்களின் பெருமிதம் எவ்வளவு உண்மையோ. அவ்வளவு யதார்த்தமானது என்பதாக பயபக்தியோடு உறுதியாகக் கூறுவதாக நாம் பொருள்கொள்ளலாம். கொரிந்தியக் கிறிஸ்தவர்கள் தங்களது விசுவாச அறிக்கையில் வெளிப்படுத்திய மனதிருப்தி, மன மகிழ்ச்சியை பவுல் குறிப்பிடுவதாக கிரேக்க வேதத்தில் காணப் படுகிறது. இன்னொரு சாத்தியம் என்னவெனில், அப்போஸ்தலன் அவர்களில் தனக்கே உரிய பெருமிதத்தை, தனது மனநிறை வையும், மனமகிழ்ச்சியையும் குறிப்பிடுவதாக உள்ளது. வசனத்தின் இறுதி பகுதியில், "பெருமிதம்" என்பது நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவில் அவர் வைத்துள்ள (மனநிறைவான) பெருமையான எண்ணம் என்பதாக தெளிவுபடுகிறது. அப்போஸ்தலன் தாம் கூறியதின் சத்தியத்தை, அவரது பிரசங்கத்தின் மூலமாக அவர்கள் கிறிஸ்துவில் ஜீவனைப் பகிர்ந்து கொள்கிறார்கள் என்ற உறுதிமொழியை வேண்டுதல் செய்து வெளிப்படுத்தினார். அது வரையறுக்கப்பட்ட ஒரு பெருமித உணர்வாக, அவர்கள் கிறிஸ்துவில் காணப்படுவதின் மூலம் சாத்தியமானதாக உள்ளது.

**வசனம் 32.** உயிர்த்தெழுதலையும் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையையும் ஒரு புறம் வைத்துவிட்டு, பவுல் கூறுவது என்னவென்றால், அவர் தனது உயிரையும் பணயமாக வைக்க விருப்பங் கொண்டுள்ளதை சிலர் வேறுவிதமாக, அவர் சுயநல எண்ணத் தோடுள்ளதாகக், காண்கிறார்கள். அப்போஸ்தலன் **மனித உள்நோக்கத்தோடு** செயல்பட்டார் என சிலர் கூறலாம் (κατὰ ἄνθρωπον, *kata anthrōpon*; 15:32), அதாவது, கிறிஸ்தவ சமுதாயத்தில் அவர் ஒரு தலைவராகப் பெற்றுக்கொண்ட மதிப்பையும், பேராவலையும் தனது உள்நோக்கமாகக் கொண்டுள்ளார் என்பதாகக் கூறலாம். "மனித உள்நோக்கம்" என்பது அவர் தாம் சகித்துக் கொண்டவைகளைக் குறிப்பது என்பதை அப்போஸ்தலன் மறுக்கிறார். கொரிந்து பட்டணத்தில் அவரது உயிர் ஆபத்து நிறைந்தே காணப்பட்டது (அப். 18:12). தற்போது Aegean கடலின் குறுக்கான இருநூறு மைல்களிலும், அந்த ஆபத்தான நிலை தொடர்ந்து கொண்டிருந்தது. நான் **எபேசுவில் துஷ்ட மிருகங்களோடு போராடினேன்** என அவர் தாராளமாகக் கூறலாம்.

ஸ்தோயிக்கரின் எண்ணங்களைக் கொண்டுள்ள எழுத்தாளர் கள், அசாதாரணமான இடுக்கண்கள், ஆபத்தான அனுபவங்கள்

போன்றவைகளை "துஷ்ட மிருகங்களோடு போராடுவதாகக்" கூறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.[26] பவுல் தாம் ஒரு துஷ்ட மிருகங்களோடு போராடும் அரங்கிற்கு எடுத்துச் செல்லப் பட்டார் என அவர் பொருள் கொண்டதாக இல்லையெனினும் சிலர் அதை அவ்விதமாகவே எண்ணிக் கொண்டார்கள். அவ்வாறான ஒரு இக்கட்டான சூழலில் அவர் உயிர் பிழைத்திருக்க முடியாது; சிலர் தப்பியிருக்கலாம். எபேசுவில், சில மிகக் கடினமான சோதனை களை பவுல் எதிர் கொள்ள நேர்ந்தது; ஆனால் அவைகள் எவ் வாறானது என்பதைப் பற்றிய விளக்கத்திற்கு அவர் செல்லவில்லை. அவர் ஏறக்குறைய மூன்று வருடங்களை எபேசுவில் கழித்தார் (காண்க அப். 20:31); ஆயினும், 1 கொரிந்தியரின் முதலாம் நிருபத்தை எழுதுவதற்கு முன்பாக அவர் அங்கு எவ்வளவு காலம் காணப்பட்டிருந்தார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. எனினும், கன்னார்களின் கலகத்தைப் பற்றி அவர் குறிப்பிடவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது, ஏனெனில் அவர் அந்த நகரத்தை விட்டுச் செல்வதற்கு அந்த நிகழ்வே காரணமாயிருந்தது (அப். 19:24, 25; 20:1; காண்க 2 தீமோ. 4:14).

மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாத நிலையில், ஒருவர் அவ்வாறான கடினமான நிலைகளுக்குத் தன்னை ஒப்புக் கொடுப்பதற்கு எந்த முகாந்தரமும் இல்லை என்பதையே பவுலின் சோதனைகள் சாட்சியிடுகின்றன. வரப்போகிற வாழ்வின் நம்பிக் கையில்லாத பட்சத்தில், அவ்வாறான இடுக்கண்களும், போராட்டங் களும் எந்த லாபகரமானதும் அல்ல. மிகச்சிறந்த முறையான செயல்பாடு ஹெடோனியர்[27] என்பவர்களின் முறையைப் போன்றதாகக் கொள்ளலாம் (ஏசாயா 22:13). கிரேக்க - ரோம உலகின் பல மூலைகளில் இந்தக் கூற்றின் விதிவசமானதாக மக்களின் மன எண்ணங்களில் படிந்து போயிருந்தது. இதன் உட்பொருள் என்னவென்றால், "மரித்தோரிலிருந்து எழும்பும் உயிர்த்தெழுதலை நீ விசுவாசிக்கவில்லையென்றால், உனது எண்ணத்தை அதன் காரண விளக்கங்களின் முடிவுக்குக் கொண்டு வர நீ துணிவு கொள். தற்காலத்தின் அர்த்தமற்ற சந்தோஷங்களை நீ அனுபவித்துக் கொள், ஆயினும் எதிர்காலத்தில் மரணத்தைக் காண்பது நிச்சயம் என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும்." இவ்வாறான லத்தீன் சொற்கோவைகள் *carpe diem* (நாளைய தினத்தைப் பிடித்துக்கொள்) அதே தத்துவத்தில் பதிக்கப் பட்டுள்ளன. மரணமும், கல்லறையுமே எதிர்பார்க்கப்படும் ஒரே வருங்காலமானால், இக்கால நேரமே எல்லாவற்றிலும் மேலாக முக்கியத்துவம் கொண்டுள்ள காரியமாகும்.

**வசனம 33.** இறுதி காலத்தில் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு சரீர உயிர்த்தெழுதல் உண்டு என்பதை மறுக்கிறவர்கள் தீயதான நோக்கங் கொண்டுள்ளவர்களாவர். பவுல் தனது வாசகர்கள் அப்படிப்பட்டவர்களைத் தவிர்த்தொதுக்க வேண்டும் என

விரும்பினார். மேலோட்டமாக நோக்கும் போது, கொரிந்தியர் சிலர் சரீர உயிர்த்தெழுதலை மிகச்சாதாரணமாக புறக்கணித்தார்கள். பவுல் கொரிந்து பட்டணத்தில் அனுபவித்த கஷ்டங்களை மிகக்குறிப்பாக எடுத்துக் காண்பிப்பது கடினமான காரியமாகும். இவைகளை நவீன கால வாசகர்கள் தாங்களே சிந்தித்து அறிந்து கொள்ளலாம். சில கொரிந்திய பட்டணத்து விசுவாசிகள் தாங்கள் ஏற்கெனவே உயிர்த்தெழுதலைக் கண்டு கொண்டாயிற்று என் எண்ணிக் கொண்டிருக்கலாம். ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதின் மூலமாக உயிர்த்தெழுதல் என்பதான ஒரு புதிய வாழ்வில் நுழைந்தாயிற்று என்று பவுல் கற்றுக் கொடுத்ததாக அவர்கள் நம்பியிருந்தது, சிலதவறான அறிவினாலும், மூர்க்கமான தகவல் சிதைவினாலும் ஏற்பட வாய்ப்பிருந்தது (காண்க ரோமர் 6:4). தாங்கள் ஏற்கெனவே உயிர்த்தெழுதலைப் பெற்றுக் கொண்டாயிற்று எனவும், தாங்கள் கிறிஸ்துவோடு வீற்றிருக்கிறோம் எனவும் அவர்கள் நம்பியிருந்தபடியால் அவர்களுக்கு அறநெறி தவறுதலைப் பற்றியோ, பாவத்தைப் பற்றியோ எந்த அச்சமும் இல்லை. இந்தத் தத்துவத்தை ஒரு முக்கியமான கொள்கையை திரும்ப எடுத்துக் கூறுவதன் மூலமாக பவுல் மறுத்தார். கிறிஸ்தவர் செய்யும் பாவ அறிக்கை, அவர்கள் செய்முறையில் நடத்திக் கொண்டிருக்கும் அறநெறியிலிருந்து பிரிக்கப்படக் கூடாதது என்பதை பவுல் அவர்களுக்குத் தெளிவாக்கினார்.

**ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்** எனப்படும் நீதிமொழியானது புராதீன உலகப்பிரகாரமான இலக்கியத்தின் பல குறிப்புகளிலிருந்து நவீன சகாப்தத்தில் காணப்படுவதாகும். பவுல் இங்கு விளம்பிய வார்த்தைகள் ஏதென்சின் மெனாண்டனாப் பற்றிச் சொல்லப்பட்டதாகும் (கி.மு. 300). “கெட்ட தோழமை” (ὁμιλίαι κακαί, *homiliai kakai*) என்று நாம் இங்கு கருத்தில் கொள்வது, ஒருவரின் தோழமைக் கூட்டத்தாரைப் பற்றியதும், அவர் கொண்டுள்ள நம்பிக்கைகளைப் பற்றியதுமாகும். KJVயின் மொழிபெயர்ப்பு, “கெட்ட தொடர்புகள் நல்ல பழக்கங்களைக் கெடுத்துப்போடும்” என்பதில் ஒரு சத்தியமான வட்டம் உள்ளது; ஆனால் அப்போஸ்தலனின் பொருளடக்கம் பேசப்படும் வார்த்தைகளைவிட அதிகமான உள்ளடக்கம் கொண்டதாயுள்ளது. “நல்லது” என்பது χρηστός (*chrēstos*) என்ற உரிச்சொல்லின் மொழிபெயர்ப்பாகும்; அது “அறநெறிகள்” என் மாறுதலடைகிறது. இதன் பொதுவான அர்த்தம் “பிரயோஜன மானது” என்பதாகும். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் அதன் பொருள் “அறநெறி முறையில் *நல்லதாகவும், தயவுள்ளதாயும் காணப்படுவது*” என்பதோடு இணைந்துள்ளது.[28] தீமையோடு இணைந்து, அதற்கு ஒத்துப்போவது - அது வாய்ச் சொல்மூலமான ஏற்றுக் கொள்ளுதல் என்றாலும் கூட

தீமையோடு - தீமையில் பங்கு பெறுவதாகும் என பவுல் சுட்டிக் கூறுகிறார். வார்த்தைகள் தவிர்க்க முடியாதபடி ஒருவரின் வாழ்வின் கனிகளில் ஊடுருவிப் போய் விடும். இந்த விளக்கமானது “இஸ்ரவேலர் மற்றும் கிரேக்கரின் அறநெறிக் கொள்கைகளோடு இணைந்து, சமூக - அரசியல் அமைப்பில் பயன்பாடோடு கூடிய பார்வைப்பொருளாக வெளிப் பட்டுக் காணப்படும்.”[29]

**வசனம் 34.** கொரிந்தியரிடம் அவர்கள் முட்டாள்தனமாக உயிர்த்தெழுதலை மறுப்பதை விட்டு விடவேண்டும் என பவுல் முறையிடுகிறார். நீங்கள் **நல்மனச்சாட்சியுடையவர்களாகக் காணப்படுவது** முக்கியமானது - தெளிந்த புத்தியுள்ளவர்களாயி ருங்கள் - **பாவம் செய்யாதிருங்கள்** என அவர் எழுதினார். கிரேக்க நிகழ்காலத்தில் கூறுவதின்படி, அவர்கள் தவறான போதகத்தை சகித்துக் கொண்டிருக்கும் வரை, கிறிஸ்துவோடுள்ள அவர்களது உறவு ஆபத்தான நிலமையில் உள்ளது, என்பதாகும். பாவம் என்பது களவுசெய்வது, பொய்சொல்வது என்பவைகளோடு நின்று விடவில்லை. நம்பிக்கைகளில் பாவம் நிறைந்து காணப்படலாம்; அவ்வாறே அடிப்படையான போதகங்களை மறுத்துக் கூறும் நம்பிக்கைகளை ஏற்றுக் கொள்வதும் பாவமே. கொரிந்தியருக்கு வெட்கமுண்டாகும்படி, கடவுளைப் பற்றிய அறிவில் குறைந்து காணப்படுவதை செயலில் காட்டும் போதகங்களோடு அவர்கள் ஒத்துப்போய், அதோடு ஒப்புரவாகி விட்டிருந்தார்கள். அவர்களின் நலனுக்காக, பவுல் தமது வாசகர்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறார். அதைப்போலவே, அவர்களில் புகழ்ந்து கூறும் படியான காரியங்கள் காணப்பட்ட போது, அவர்களுக்கு புகழ்ச் சியையும், தவறான காரியங்கள் காணப்பட்டபோது மறுப்பையும் அவர் தெரிவித்தார். அவரது நோக்கம் தாம் பிரபலமாக வேண்டும் என்பதாக அல்லாமல், இந்த சகோதரர்களை கர்த்தருக்கு நேராக வழிநடத்த வேண்டும் என்பதாகவே காணப்பட்டது.

## வெவ்வேறு விதமான சரீரங்கள் (15:35-41)

**35ஆகிலும், மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப் பட்ட சரீரத்தோடே வருவார்களென்று ஒருவன் சொல்வானாகில்,**
**36புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்க மாட்டாதே. 37நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய். 38அதற்கு தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார். விதைவகைகள் ஒவ்வொன்றிற்கும் அததற்கேற்ற மேனியையே கொடுக்கிறார். 39எல்லா**
**மாம்சமும், ஒரேவிதமான மாம்சமல்ல; மனுஷருடைய மாம்சம் வேறே,**

**மிருகங்களுடைய மாம்சம் வேறே, மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளுடைய மாம்சம் வேறே. [40]வானத்துக் குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு; வானத்துக் குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே; [41]சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே, மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது.**

**வசனம் 35.** உயிர்த்தெழுதலை மறுதலிப்பதை சிலர் அவர்களுடைய எதிராளிகள் காரணங்காட்டி விளக்குவதற்கு இயலாமையின் அடிப்படையில் கூறிவந்தார்கள். பௌதீக சரீரம் அழிந்து போகும் தன்மை கொண்டது என்பதை உயிர்ப்பிக்கப்படமுடியும்? Garlandன் கூற்று பாதியளவு சரியாக அமைந்துள்ளது:

> கொரிந்தியரின் குளறுபடி சில மூர்க்கமான போதகம் சம்பந்தப்பட்ட கிளர்ச்சியில் வேர்கொண்டிராமல், அவர்களின் கிரேக்க கண்ணோட்டத்தின்படி, நேர்மையான குழப்பநிலையில் காணப்படுகிறது. பௌதீகமானதும், அழிவிற்கானதுமான ஒரு பூமிக்குரிய சரீரம் எவ்வாறு ஆவிக்குரியதும், அழிந்து போக முடியாததுமான ஆட்சிக்கு ஏற்றதாக அமைக்கப்பட முடியும் என்பதை அவர்களால் உணர்ந்து கொள்ள முடியாத நிலை யிலிருந்தார்கள்.[30]

குழப்பநிலை எவ்வாறாயினும் ஒரு காரணியேயாகும். ஆனால் 15:34ல் பவுல் "பாவஞ்செய்வதை நிறுத்துங்கள்" எனக் கட்டளை யிடுவது குழப்பத்தைவிட அதிகமான ஆழ்ந்த நிலை காணப் படுவதைக் குறிக்கிறது.

கொரிந்திய விசுவாசிகளை விசுவாசத்தில் வளர்க்கும்படியாக பவுல் "சொல்லணிக்கலை சார்ந்த" என்ற முறையைப் பிரயோகித் தார். அறிவு சார்ந்த வார்த்தைகளை அவர் ஒரு கற்பனையான எதிரியின் வாயில் வைத்து (காண்க ரோமர் 9:19; 11:19; யாக். 2:18), பின்னர் வாக்குவாதங்களோடு தொடர்ந்து ஈடுபட்டார். அவரது நோக்கம் என்னவென்றால், கடவுள் தமது மக்கள் ஒவ்வொரு வருக்கும் ஒரு பரலோகத்தன்மை கொண்ட சரீரத்தை வழங்க முழுவதுமாக வலிமை படைத்தார் என்பதை கொரிந்தியருக்கு வலியுறுத்திக் கூறுவதேயாகும். அவ்வாறான சரீரத்தில் நித்திய வாழ்வானது ஆவிக்குரிய ஆளுகையில் உணர்ந்து கொள்ளப்படும். இவைகளைத் தொடர்ந்த கேள்விகள் கொரிந்துவிலுள்ள சிலரால் எழுப்பப்பட்டவையாகும். ஆயினும் பவுலின் மனதில் குறிப்பாக எவரும் காணப்படவில்லை. சிலர் குதர்க்கமாக இவ்வாறு கேட்டிருக்கலாம், மரித்தோர் எவ்வாறு உயிர்ப்பிக்கப்படுவார்கள்? எவ்விதமான சரீரத்தில் அவர்கள் வருவார்கள்? இந்த அதிகாரத்தில் முதன்முறையாக பவுல் "சரீரம்" என்ற பதத்தைப்பிரயோகிக்கத் தெரிந்து கொண்டார். இந்தக் கேள்விகளில்

எழுப்பப்பட்ட சந்தேகங்கள், ஞானத்தின் மெய்மை என்பதைவிட அதன் தோற்றம் என்பதே பொருத்தமாக உள்ளது. பவுல் உறுதியாகக் கூறுவ தென்னவென்றால் கடவுள் தம்மை வெளிப்படுத்தியதைக் குறித்த எந்தக் கரிசனையுமின்றி, அவைகள் காண்பிக்கப்பட்டன. பொதுவான மனித அனுபவத்தையும் அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

**வசனம் 36.** முட்டாள் (ἄφρων, *aphrōn*) என்பதான கடினமான, கவனத்தை ஈர்க்கும் வார்த்தையினால், தங்களது திறமையான கேள்விகள் உயிர்தெழுதலைப் பற்றிய எந்த விவாதத்தையும் அடக்கிப்போடும் என்று எண்ணிக் கொண்டிருந்தவர்களை பவுல் எதிர் கொண்டார். REB அவரது பதிலுரையின் தாக்கத்தை இவ்வாறு காண்கிறது. "என்ன முட்டாள்தனமான கேள்விகள்!"

**வசனம் 37.** இவ்வாறான சந்தேகப் பேர்வழிகள் தங்களைச் சுற்றி, நோக்கி இயற்கையினால் அருளப்பட்ட உதாரணங்களைக் காணும்படியாக பவுல் கோரிக்கை வைக்கிறார். நீங்கள் என்பது மிக வலிமையாகக் காணப்படுகிறது. பவுல் கூறிவந்தது, "நீங்களும் கோதுமையின் தண்டை விதைத்துவிட்டு, அது கோதுமைத் தண்டையே உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்க வேண்டாம்," என்பதே. ஒருவிதை விதைக்கப்படும்போது, அதன்அழிவு அதன் மரணத்தை விளைவிக்கிறது; ஆனால் அந்த செயல்முறை புதிய உயிரை விளைவிக்கிறது. வாழ்வு மரணத்திலிருந்தே எழும்புகிறது. விதையிலிருந்து உருவாகிய செடியானது விதையைப் போன்றே காணப்படுவதில்லை, ஆயினும் விதைக்கும், செடிக்கும் இடையில் ஒரு தொடர்நிலை காணப்படும். அவ்வாறே மானிடரும்கூட வாழ்வு பெற்றுக் கொள்வதற்கு மரிக்க வேண்டியதாகிறது. மாமிசம் மரித்துப்போய்விடும், ஆனால் அதன் அழிவில் ஒரு புதிய ஆவிக்குரிய சரீரத்தின் எதிர்பார்ப்பு அடங்கியுள்ளது. மாமிசத்தின் அழிவுக்கு சரீர வாழ்வின் முடிவு தேவையின்றி உள்ளது. நித்திய வாழ்வு சரீர உருவில் காணப்படும் என்ற தத்துவத்தை மறுக் கிறவர்கள் எழுப்பிய கேள்விகள், பொருளளவான உலகிற்குப் போதுமான அளவில் கவனத்தைச் செலுத்தவில்லை.

இயேசுவும் அதே கொள்கையைப் பிரயோகித்தார். அதாவது, மரணத்திலிருந்து வெளிப்படும் வாழ்வு வித்தியாசமானது ஆனால் தொடர்புள்ள குறிப்பை உருவாக்குகிறது. கர்த்தர் மரிக்கும் தருவாயில், சில கிரேக்க மொழிபேசும் யூதர்கள், பஸ்காவில் தொழுகை செய்யும்படியாக வந்திருந்தார்கள். அவர்கள் இயேசு வைக் காண விரும்பினார்கள். யோவானின் சுவிசேஷத்தில் சொல்லப்பட்டதின்படி இயேசு தமது சாதுரியமான முறையின் மூலமாக இந்த ஆர்வம் கொண்ட மனிதர்கள் தங்களது எண்ணப் பார்வையை மாற்றிக் கொள்ளும்படி அவர்களைத் துரிதப் படுத்தினார்.

“கோதுமைமணியானது நிலத்தில் விழுந்து சாகா விட்டால், தனித்திருக்கும். செத்ததேயாகில் அது மிகுந்த பலன் கொடுக்கும்.” என அவர் கூறினர் (யோவான் 12:24).

விதை அழிந்துபோவது, ஒரு அழகிய செடி எழும்புவதற்குத் தடையாகக் காணப்படாது. அதைப் போன்றே, பௌதீக சரீரத்தின் மரணமும் சரீர உயிர்த்தெழுதலுக்குத் தடையாக எவ்விதத்திலும் காணப்படமுடியாது. இயற்கையில் விவரிக்கமுடியாத நிகழ்வுகளை நடப்பிக்க வல்லமையுள்ள கடவுள் சரீர உயிர்த்தெழுதலைப்பற்றிய தமது வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்ற வலிமை படைத்தவர். பௌதீக வாழ்வில் பங்குபெற்றவர்கள், பூமிக்குரிய சரீரங்கள் எவ்வாறு சரீர உருவில், வரப்போகிற காலத்துக்கு ஏற்றபடியாக மாற்றுருவடையும் என்பதை மக்கள் எவ்விதத்திலும் புரிந்து கொள்ள முடியாதபடி காணப்படுவார்கள். ஒரு குறிப்பிட்ட நிலையில், விசுவாசிகளான ஆண்களும் பெண்களும், கடவுள் அவர்களது சரீரங்களை, அவர் பயன்படுத்தும் முறைகளை அறியாதபடி, மறுரூபப்படுத்துவார் என்பதை எளிமையான நம்பிக்கையில் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு **சாதாரண தானியம்**, அது **கோதுமை மணியாகக்** கூட இருக்கலாம், அவ்வாறாக மாறதலடைந்து விடுகிறது. மானிட ஆய்வாளராக ஒருவர் ஒரு பட்டாணியையும், ஒரு கூழாங்கல்லையும்கூட, சிருஷ்டிகர் பிரயோகித்த முறைகளைப் புரிந்து கொள்ளாத நிலையில், ஒன்று பூக்கள் பூத்துக் குலுங்கும் செடியாகவும், மற்றொன்று உயிரற்ற நிலையிலும் காணப்படும் படியாக மாற்றியமைப்பார். மனித சரீரம் கூழாங்கல்லின் உயிரற்ற நிலையைக் கொண்டில்லாமல் பட்டாணியின் வலிமையைப் பெற்றுள்ளது என்று பவுல் தர்க்கம் செய்கிறார்.

**வசனம் 38.** ஒரு விதை முளைத்தெழும்பி, உயிர் பெற்று, ஒரு புதிய சரீரத்திற்கு உயிர் கொடுக்கும்போது கடவுள் கிரியை செய்கிறார் எனத் தெரிந்து கொள்ள வேண்டும். தன் அழிவிலிருந்து முளைத்தெழும்பி பெறும் உயிரை விதைக்க வழங்குவது கர்த்தரே. கடவுள் ஒவ்வொரு விதைக்கும் அதற்கு உரித்தான வடிவத்தை வழங்குகிறார், அதாவது விதையிலிருந்து எம்மாதிரியான செடி வளரும் என்பதை அவரே தீர்மானிக்கிறார். கிறிஸ்தவர்கள் உயிர்த்தெழுந்த சரீரத்தின் தன்மையைக் கருத்தில் கொள்ளும் போது, அவர்கள் கடவுளின் அதிசய வல்லமையையும் நினைத்துக் கொள்ளவேண்டும் என்பதை பவுல் வலியுறுத்திக் கூறுகிறார். இக்காலத்தில் வாழும் யாவருக்கும் அவர் எண்ணிக் கொள்ள முடியாத காரியங்களைச் செய்ய வல்லவர். விதைகளுக்கும் அவைகள் உற்பத்தி செய்யும் சரீரங்களுக்கும் இடையிலான தொடர்நிலையை மறந்து போகக் கூடாது. பூமியின் ஜீவிகளை விட அதிகமாக விண்ணில் மீன்களை (உருவங்களை) ஒரு உருவ அமைப்பிலிருந்து வடிவமைத்துவிடமுடியாது. தனித்தன்மை

என்பது எக்காலத்திலும் பாதுகாக்கப்படும்.

அப்போஸ்தலனின் காரணவிளக்கங்களில் முக்கியத்துவம் பெற்றது என்னவெனில், விதையும் அதிலிருந்து எழும்பும் செடியும் அதிக வித்தியாசத்தைக் கொண்டிருந்தாலும், அவைகள் ஒரே பொருளின் வடிவங்களே. இரண்டுமே சுத்தமாக ஆவிக்குரிய தனித்தன்மை பெற்றதல்ல இந்த எண்ணப்பார்வையை Wayne Grudem முன்வைத்துள்ளார்:

> இயேசுவும் புதியஏற்பாட்டு படைப்பாளர்களும் உயிர்த்தெழும் சரீரம் வழக்கமுறையாகவும், சாரமாகவும் பொருள் வடிவமற்றது என கற்பிக்க விரும்பினார் களென்றால் அவர்கள் அவ்வாறு செய்திருக்கலாம்; ஆனால் மாறாக, அது வழக்கமுறையாக பௌதீகத்தன்மையும் பொருள் வடிவமு முள்ளது என்று அவர்கள் தெளிவான குறிப்பை வழங்கினார்கள்; அது நிலையாக பலவீனம், வியாதி, மரணம் இவைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, பூரணத்தன்மை பெற்றுக்கொண்ட ஒரு சரீரமாகக் காணப்பட்டிருந்தது என்பது நினைவிற்கொள்ள வேண்டியதாகும்.[31]

**வசனம் 39.** இந்தக் குறிப்பிட்ட இடத்தில் பவுலின் ஒப்புடைமையானது காரணவிளக்கங்களைக் கருத்தில் கொள்ள முடியவில்லையென்றாலும், மாறிவிட்டன. தாவரவியலான உலகிலிருந்து நகர்ந்து விலங்கின உலகுக்குச் செல்லும் நிலையில், இப்போது அவர் குறிப்பிட்டு வழங்கிய கருத்துகளோடு மேலும் சில தர்க்கங்களை எடுத்துக் கூறினார். தாவர உலகிற்குக் கடவுள் பலவடிவங்களை வழங்கியிருந்தபடியால், ஒவ்வொரு விதையும் ஒவ்வொரு விதமான செடியை உற்பத்தி செய்யும் நிலையில், **மானுடர்களுக்கு ஒரு மாமிசசரீரமும், மிருகங்களுக்கு ஒரு மாமிச சரீரமும், பறவைகளுக்கு ஒரு மாமிச சரீரமும், மீன்வகைகளுக்கு ஒரு மாமிச சரீரமும்** காணப்படுகின்றன. விதைகளையும், அவைகள் உற்பத்தி செய்யும் தாவரங்களையும் பற்றிக் கூறும்போது, ஒரு சரீரமானது பொருள் வடிவத்தில் நிலைகொண்டிருந்து, ஆனால் வேறுவிதமான வடிவத்தையும் பணியையும் பெற்றிருக்கும்படியாக மாற்றுருவாக்கக் கடவுள் வல்லவர் என்பதை பவுல் செயல் முறையாக விளக்கம் அளித்தார். பல்வேறு மாமிச வடிவங்களைப் பற்றிக் கூறும்போது, அப்போஸ்தலன் ஒவ்வொரு உயிர் வடிவத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணமாக கடவுள் வித்தியாசமான ஆனால் ஒரே மாதிரியான பொருள் வடிவங்களை உருவாக்கினார் என்பதை விளக்கும்படியாக, இயற்கையையே பிரயோகத்தில் கொண்டார். விண்ணின் கோள் ஒன்றையும் கூட கடவுள் அதே மாதிரியான பொருள்களினால், அது விண்ணில் வாழ்விற்கேற்றதாய் அமையும்படியாக வடிவமைப்பார்.

15:39ன் முக்கிய வார்த்தை “மாமிசம்” என்பதாகும். 15:40, 41 யின்

கருத்து வார்த்தை "மகிமை" என்பதாக உள்ளது. விலங்குகளின் உலகில் மாமிசம் என்பது வேறுவிதமாக உள்ளபடியால், பூமியில் சரீரங்களும், விண்ணில் பிரகாசிக்கும் கோள்களும் மகிமையில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. பவுல் உரை வழங்கியவர்களில் அநேகர், பொருள் வடிவமானவைகளுக்கும் சரீர மரணத்திற்குத் தப்பினவைகளுக்கும் இடையில் காணப்படும் தொடர் நிலையைக் குறித்துக் கேள்விகள் எழுப்பினார்கள். மாமிசத்தில் அடக்கி வைக்கப்பட்டு, அதன் எல்கைகளுக்கு அடிமைப்பட்டுள்ளதான ஆவிகளாக அவர்கள் தங்களைப்பற்றி எண்ணிக் கொண்டார்கள்; ஆகவே அவர்கள் மரணத்தை மாமிசத்திலிருந்து கிடைக்கப் பெறும் விடுதலையாகக் கண்டார்கள். அவ்வாறான எண்ணத்தை பவுல் மறுத்தார். கடவுள் ஆதியில் பொருளளவானவை களைப்படைந்து அவைகள் நல்லது என்று கூறினார் (ஆதி. 1:31) என்பதை அவர் அறிந்திருந்தார்.

**வசனம் 40.** கடவுளின் மகிமை, **வானத்துக்குரிய மேனிகளுக்கும், பூமிக்குரிய மேனிகளுக்கும்** தன்னை இணைத்துக் கொண்டது. ஒரு மரம் அல்லது மலை போன்றவைகளின் மகிமையானது, சந்திரன், நட்சத்திரங்கள் என்பவைகளின் மகிமையைப் போன் றதல்ல. ஆயினும், ஒவ்வொன்றும் தனது சொந்த முறையின்படி சிருஷ்டிகரின் நித்தியமான ஞானத்தையும் வல்லமையையும் பிரதிபலிக்கின்றன. கடவுள் பௌதீக சரீரங்களுக்கு மகிமையை வழங்கமுடிந்தபடியால், அவர் தமது சொந்த வடிவமைப்பின் மகிமையை பரலோக ஆளுகையில் என்றென்றும் வாழும் சரீரங்களுக்கு வழங்க வல்லமை யுள்ளவராயிருக்கிறார்.

**வசனம் 41.** பூமிக்குரிய காட்சிகளின் மகிமையில் தரித்திருப் பதை பவுல்தெரிந்து கொள்ளவில்லை; அவ்வாறு அவர் செய்திருக்க முடிந்திருக்கலாம். மாறாக, அவர் தனது கவனத்தை பரலோகங் களின் மகிமைகளுக்கு நேராகத்திருப்பினார். வேற்றுமைகள் வெளிப்படையாகக் காணப்பட்டன. **சூரியனின் மகிமை வேறு, சந்திரனின் மகிமை வேறு.** கடவுள் ஒரு விதமான மாமிசத்திற்கோ, அல்லது ஒருவிதமான அழகுக்கோ கட்டுப்பட்டவரல்ல. அறிவியல் அறிவு பெருமளவு முன்னேற்றமடைந்து விட்டபடியால், மாமிசமும் இரத்தமுமான சரீரங்களின் மகிமை என்பது மேலும் வெளிப் படையாகக் காணப்பட்டுள்ளது. சரீரங்கள் வயது முதிர்ந்து விடும், அழுகியும் போகும், பூமிக்குரிய சரீரங்கள் நோய்க்கும் மரணத்திற்கும் ஏதுவானவை. சரீரங்களை மாமிசத்தில் காணப்படும் வரையறைகளில்லாதபடி உண்டாக்க கடவுள் வல்லவர் என்று பவுல் விவாதம் செய்கிறார். பலவோகக்கோளங்களில் வெளிப்பட்டுள்ள மாறாக மகிமையை சுட்டிக்காட்டி அவர் தனது வழக்கை (காரியத்தை) விளக்குகிறார். மாமிசத்தின் பலவீன சரீரங்களை, மாற்றமடையாத நட்சத்திரங்களோடு ஒப்பிட்டுப் பேசுகிறார். பூமிக்குரிய சரீரங்களை பரலோகத்தின் சரீரங்களாக மாற்றுரு வாக்குவதற்கு கடவுள்

வல்லமையும் ஞானமும் படைத்தார். பரலோகத்தின் ஆளுகையில் சரீர அளவில் காணப்படுவது சாத்தியமில்லாதது என்று மாமிசத்தின் வரையறைகள் தர்க்கிப்ப தில்லை.

முதலாம் ஆதாமுக்கும், இரண்டாம் ஆதாமான இயேசு கிறிஸ்துவுக்கு இடையிலான இணை கோடுகளை பவுல் ஏற்கெனவே எடுத்துக் கூறிவிட்டார் (15:22). சில வருடங்களுக்குப் பின்பு அவர் ரோமருக்கு எழுதிய கடித்தில், இந்த இருவருக்கும் இடையிலான ஒப்புடைமை மேலும் விளக்கப்படுகிறது. ரோமர் 5:14-19யில், ஆதாமின் பாவத்தினால் ஏற்பட்ட விளைவுகளை, கிறிஸ்துவின் மரணம் உயிர்த்தெழுதல் இவைகளின் மூலமாக ஏற்பட்ட மீட்பின் பார்வையில் பவுல், திரும்பிப் பார்க்கிறார். 1 கொரிந்தியரில், அவர் உயிர்த்தெழுந்த கிறிஸ்து, மீட்கப்பட்ட வர்களின் உயிர்த்தெழுதலுக்கு மாதிரியாக உள்ளதாகக் காண்பிக் கிறார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் சரீரமானது ஒவ்வொரு கிறிஸ்தவனின் உயிர்த்தெழுதலின் சரீரத்தின் உத்தரவாதமாக உள்ளது.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சரீரம், கல்லறைக்குள் சென்ற அதே சரீரம் என்பதான நிலையில், அது மகிமை சிறந்ததாய் மறுரூபமாக்கப்பட்டது. உயிர்த்தெழுதலின் சரீரமானது, மாமிசமும் இரத்தமுமான சரீரத்தோடு தொடர்நிலைகளையும், தொடர்பற்ற நிலைகளையும் கொண்டிருக்கும். விசுவாசத்தின் கண்கள் காண்கிற படி, அந்த சத்தியம் நீடித்திருக்கும்.

## பிந்தின ஆதாம் (15:42-49)

**42மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்;**
**43கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்தி ருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். 44ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்மசரீரமுண்டு, ஆவிக்குரியச் சரீரமுமுண்டு.**
**45அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்து மாவானான் என்றெழுதியிருக்கிறது, பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார்.**
**46ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்மசரீரமே முந்தினது; ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. 47முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர். 48மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே; வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே.**
**49மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்து**

கொள்வோம்.

**வசனம் 42. மரித்தோரின் உயிர்த்தெழுதலைப்** பற்றிய காரியத்தில், பவுல் விசுவாசத்தை தத்துவ ரீதியான யோசனை களோடு கலந்துரைக்கவில்லை. மாமிசத்தன்மையை ஆவிக்குரிய தன்மையாக மறுரூபப்படுத்த கடவுளுக்கு வல்லமையும், அறிவும், சித்தமும் உண்டு என்பதான சத்தியம், இயற்கையான சரீரங்களில் காணப்படும் மகிமை மற்றும் மாமிசங்களின் வித்தியாசங்கள் இவைகளிலிருந்து தெளிவாக அறியப்படுகிறது. மானுடரின் ஞானம் தவறான முறையில் பொருளுளவான காரியங்களை தீமையோடும் விழுந்து போனவைகளோடும் சமமாக ஏற்படுத்துகிறது. அதன் விளைவாக மனித ஞானத்தின் போதாமை உணரப்படுகிறது (2:5).

பூமியின் வாழ்வுக்காக கடவுளினால் வடிவமைக்கப்பட்ட சரீரமானது விதைக்கப்படுகிறது என்று அப்போஸ்தலன் கூறுகிறார். அதன்படி, அது **அழிவிற்கேதுவானதாகும்** (φθορᾶ, *phthora*). நித்தியத்தில் வாழ்விற்காக எழுப்பப்படுவது எதுவோ அது **அழிவைக் காணமுடியாதபடி** உருவாக்கப்பட்டிருக்கும் (ἀφθαρσία, *aphtharsia*). KJVயிலும், NASBல் சில அச்சுகளிலும், வித்தியாசமான தொரு பொருள் இந்த வார்த்தைகளின் மூலம் வழங்கப்படுகிறது. “அழிவுள்ளது,” “அழியாமையுள்ளது,” “அழிவு” என்பதில் கடவுளுக் கெதிரான ஒரு கலகத்தின் மனப்பாங்கு அடங்கியுள்ளதாகக் கொள்ளலாம். அல்லது பூமிக்குரிய சரீரமானது பௌதீக அழிவிற்கு ஏதுவானது என்று சொல்லப்பட்டுள்ளதாகவும், ஏற்றுக் கொள்ளலாம். பாவத்தின் அழிவிற்கேதுவான வலிமை என்பது இங்கே பவுலினால் முக்கியப்படுத்தப்படவில்லையாதலால், NASB மற்றும் NIVயின் மொழிபெயர்ப்பு மேலும் சரியானதாகக் காணப் படுகிறது. “விதைக்கப்படுகிறது” என்பது, கடவுள் தமது படைப்பு இவ்வுலகில் காணப்படவேண்டும் என்பதற்காகக் கடவுளால் உண்டாக்கப்பட்ட சரீரங்களைக் குறிக்கிறது.

**வசனம் 43**. பூமிக்குரிய சரீரத்தையும், உயிரோடெழுப்பப்படும் சரீரத்தையும் ஒன்றுக்கொன்று எதிராக எடுத்துக் கூறுவதை பவுல் தொடர்ந்தார். தற்காலத்தின் பூமிக்குரிய சரீரங்கள் கனவீனத்திலும், பலவீனத்திலும் விதைக்கப்படுகின்றன. உயிர்த்தெழுதலின் போது, சரீரங்கள், அவையவங்கள் மகிமையையும் வல்லமையையும் வெளிப்படுத்தும்படியாக முறுரூபமாக்கப்படும் மாமிசசரீரங்கள்; பெருமை கொண்டவர்களைத் தாழ்த்தும் வழி கொண்டுள்ளன. பெருமை கொண்ட ஒரு சரீரம் ஒரு பலவீனமான சரீரமாக (வயதாவதால்) குறைக்கப்பட்டுவிடும்; தெளிவுகொண்ட மனம், பயம் நிறைந்து, குழப்பநிலைக்குச் செல்லவும் வாய்ப்புள்ளது.

*கல்லறைக்குள் சென்றுவிட்ட, மாமிசமும் இரத்தமும் கொண்ட ஒரே சரீரத்தின் ஒரு கரடு முரடான உயிர்த்தெழுதலைக்குறித்து*

*அப்போஸ்தலன் விவாதித்துக் கொண்டிருக்கவில்லை.* சந்தேக எண்ணம் கொள்பவர்கள், கடலில் மரித்து, மீன்களால் உண்ணப் பட்டு, பின்னர் இன்னொரு மனிதனால் உட்கொள்ளப்படும். ஒரு மனிதரின் நிலை என்னவாகும்; என்ற கேள்வியை எழுப்புகிறார்கள். தங்களின் ஆவிகள் மாமிசத்தில் அமையபட்டுள்ளது என்று எண்ணிக்கொள்ளும் கிரேக்க தத்துவ ஞானிகளைப்போன்று அவர்களும் தவறான எண்ணங்களைக் கொண்டுள்ளார்கள். புராதன காலத்து ஞானிகளாயினும் சரி, நவீன காலத்தவர் ஆயினும் சரி மரித்தோரை கடவுள் உயிரோடெழுப்புவதைக் குறித்த மேற்கொள்ள முடியாத பிரச்சனைகளை வழங்கவில்லை. கடவுள் பூமியின் ஆதாரங்களுக்கு தம்மை மட்டுப்படுத்துவதில்லை. மரித்தோரின் உயிர்த்தெழுதல் என்ற காரியத்தில், அறிவியலாளர்கள் ஆய்வு கொண்ட மாதிரியின்படியான அதேவிதமான அணுக்களும், மூலங்களும் வேண்டியிருக்கவில்லை.

**வசனம் 44.** பெரும்பாலான வழக்குகளில், குறைந்த விதமான குழப்பம் மட்டுமே ஏற்படும்படியாக, ஒரு மொழியிலிருந்து இன்னொன்றுக்கு மொழி பெயர்ப்பு செய்யப்படலாம். ஆயினும் **இயற்கையான சரீரம்** (σῶμα ψυχικόν, *sōma psuchikon*) என்ற சொற்கோவை கடினமாக உள்ளது. ψυχικός (*psuchikos*) என்ற உரிச்சொல்லை மனித எல்கைகளுக்கு வரையறுக்கப்பட்ட வாழ்வின் தன்மைகளுக்கு நேராக கருத்தைச் செலுத்தும்படியாக, பவுல் பிரயோகித்தார். அந்தத்தன்மைகள் சரீரப்பிரகாரமான, மாமிச பிரகாரமான என்பதானவைகளைத் தாண்டி நின்றன. ஆயினும் அவைகள் அவை இரண்டையும் விட அதிகமாகப் புரிந்து கொள்ளும் தன்மை பெற்றுள்ளன. Richard E. Oster, Jr., இவ்வாறு விவரிக்கிறார்,

> “இயற்கையான” என்ற பதம் முன் சொல்லப்பட்டுள்ள வார்த்தைகளோடு இணைந்துள்ள எல்லாத்தத்துவங்களின் சாராம் சத்தையும் கொண்டுள்ளது (15:42-43) - அழிவிற்கு ஏதுவானது, மதிப்பற்றது, பலவீனம் கொண்டது என்பதுதான். அதே சமயம் ஆவிக்குரிய என்ற பொருள் அழிவிற்குட்படாதது, மகிமையானது, வல்லமை கொண்டது என்பதான தத்துவங்களோடு பொருந்தியுள்ளது.[32]

சரீர உயிர்த்தெழுதலானது, பூமிக்குரிய சரீரத்தில் காணப்படும் பலவீனத்தினால் எல்கைக்குள் ஏற்படுத்தப்படாதது; வரப்போகிற காலத்தின் சரீரம் **ஆவிக்குரியதாகக்** காணப்படும் என்று பவுல் கூறும்போது, அது பொருள் வடிவத்தில் அமையாது என்று அவர் கற்பிக்கவில்லை. பூமிக்குரிய சரீரம் இந்த பூமிக்குரிய வாழ்வின் தேவைகளுக்குப் பொருத்தமாக அமைந்திருக்கும் என்ற நிலையில், ஆவிக்குரிய சரீரமும் ஆவிக்குரிய வாழ்வின் தேவைகளுக்கு ஏற்றபடி அமைந்திருக்கும் ஆவிக்குரிய சரீரத்தின் இயற்கையான தன்மையை வெளிப்படுத்தும்படியாகக் கடவுள் தெரிந்து கொள்ள வில்லை,

ஆயினும், ஒரு பூமிக்குரிய சரீரம் எவ்வளவு நிச்சயமாகக் காணப்படுகிறதோ, அவ்வாறே ஆவிக்குரிய சரீரமும் நிச்சயமானது என்பதை பவுல் அழுத்தமாகக் கூறினார்.

சரீர உருவில் உள்ள ஒன்று காணப்படாமல் வாழ்வது (இருப்பது) என்பது கற்பனை செய்து பார்ப்பதற்குக் கடினமானது, "இடம்" என்ற அலகுகள் இல்லாதபடி வாழ்வதை மனதில் எண்ணிப்பார்க்க முடிகிறதா? ஆவிகள் பொருளளவான தங்களது சரீரங்களை விட்டோயும் போது சுதந்தரமாக, ஆசீர்வாத நிலையில் காணப்படும் என்ற உறுதி நிலை பற்றிய முரண்பாடுகளைக் கொண்டிருந்த பிளேட்டோவின் தத்துவ மேதைகளை அகஸ்டின் எதிர் கொண்டார். அகஸ்டின் இவ்வாறு எழுதுகிறார், "ஆசீர்வாத நிலையைப்பெற்றுக் கொள்வதற்கு, நாம் எல்லாவித சரீரத்தையும் விட்டு வெளியேறத் தேவையில்லை; அழிவிற்குரியதும், இடறலாய்க் காணப்படுவதும், வேதனை நிறைந்ததும், செத்துக் கொண்டிருப்பதுமான சரீரங்களை மாத்திரம் விட்டோய வேண்டும். இது முதல் மனிதனுக்கு கடவுளின் நன்மை ஏற்படுத்தியதாக இல்லாமல், மனிதனின் பாவத்தால் உண்டாக்கப்பட்டதான சரீரமாகும்."[33]

**வசனம் 45.** ஆரம்பகாலத்தில், கடவுள் மனிதனை தமது சாயலாக உருவாக்கத் தீர்மானித்தபோது, அவர் மனிதகுலத்தை பூமியில் வாழ்வதற்கு ஏற்றபடியான ஒரு சரீரத்தோடு படைத்தார். கடவுள் மனிதனை நிலத்தின் தூளிலிருந்து உருவாக்கினார் என்றும், அவனது நாசியில் ஜீவ சுவாசத்தை ஊதினார் என்றும் கூறிய பிற்பாடு, வேதம் சொல்வது என்னவென்றால், "மனிதன் ஜீவாத்து மாவானான்" (ஆதி. 2:7) என்றுள்ளது. புவுல் ஆதியாகமத்தின் உரைநடையை சுருக்கமாக எழுதிக்கூறுவது, **முதலாம் மனிதனான ஆதாம் ஜீவ ஆத்துமாவாக மாறிவிட்டான்** என்பதே. ஆதாம் சரீரமும் ஆத்துமாவும் நுண்ணியதாக ஒரு முழு உருவில் இணைக்கப்பட்ட ஒரு தொகுதியாகக் காணப்பட்டான் ஆத்துமா என்பது காணப்படாது சரீரமானது கட்டைகள், பூக்கள், இலைகள் முதலியன இல்லாத மரத்தைப்போல காணப்படும். ஆதாமும் அவனது சந்ததியாரும், சரீரமும்; ஆத்துமாவுமான தலைகள் என்று வரையறுக்கப்பட வேண்டியவர்கள்.

"இயற்கையான சரீரம்" (σῶμα ψυχικόν, *sōma psuchikon*) "ஆவிக்குரிய சரீரம்" (σῶμα πνευματικόν, *sōma pneumatikon*) என்று பவுல் வேறு படுத்திக் காணும்போது (15:44), அவர் பிறர்பால் ஒருமை உரிச்சொற்களை பயன்படுத்துகிறார், ஆனால் 15:45ல் முதலாம் மற்றும் **பிந்தின ஆதாமின்** ஆளுமைகளுக்கு கவனத்தைச் செலுத்துகிறார். முதலாம் மற்றும் இரண்டாம் ஆதாம்களின் தெரிந்து கொள்ளுதல்களின் பலன்கள் மனித குடும்பத்துக்கு முற்றிலும் வேறுபட்டுக் காணப்பட்டன. "முதலாம் ஆதாம்" வாழும் (ஜீவனுள்ள) ஆத்துமாவானான் (ψυχὴν ζῶσαν, *psuchēn zōsan*) ஏனெனில் தேவன் அவ்வாறு சித்தம் கொண்டார்.

பாவம் பிரவேசிப்பதற்கு முன்பாக, ஆதாம் ஆத்துமாவாகக் காணப்பட்ட நிலையில், பலவீனம், கனவீனம் போன்றவைகள் அதில் அடங்கியிருக்கவில்லை (15:43). பாவத்தின் மரணம் என்பது பூமிக்குரியதாக இணைக்கப்பட்ட ஆதாமின் மரணம் (15:21, 22). "கடைசி ஆதாம்" **ஒரு வாழ்வு வழங்கும் ஆவியாக** (πνεῦμα ζῳοποιοῦν, *pneuma zōopoioun*) மனித குடும்பத்தை மீட்டுக் கொண்டார். NASBயின் மொழி பெயர்ப்பாளர்கள், பெரிய எழுத்துக்களைப் பிரயோகித்து "வாழ்வு வழங்கும் ஆவியானவர்" என்ற சொற்றொடரை ஏற்படுத்துகிறார்கள். முதலாம் ஆதாம் கடவுள் அவனைப் படைத்த மாதிரியான ஜீவாத்துமாவிற்கு மரணத்தைத் தருவித்தான். "வாழ்வு வழங்கும் ஆவியானவராகிய" பிந்தின ஆதாமோ, நித்தியத்தில் வாழ்வு ஏற்படுத்தும் படியாக ஒரு ஆவிக்குரிய சரீரத்தை கிரயமாகப் பெற்றுக் கொண்டார்.

**வசனம் 46.** ஆவிக்குரிய சரீரம் என்பது அதற்கு முந்தின இயற்கையான சரீரத்தையே குறிக்கிறது என்ற தனது காரண விளக்கத்தை மென்மையாக எடுத்துக் கூறுவதற்காகவே அப்போஸ் தலன் முனைப்பு கொண்டிருந்தார். அதை Garland இவ்விதமாகக் காண்கிறார்:

> இந்த உரைநடைப்பகுதியில் உள்ள பவுலின் தர்க்கம் கொரிந்தியரின் தன்னில் மையம் கொண்ட ஆவிக்குரிய தன்மை யோடு எந்தத் தொடர்பும் கொண்டதல்ல, ஆனால் பூமியளவிலான சரீரம் எவ்வாறு ஆகாய அளவிலான சரீரமாக எழுப்பப்படும் என்பதைப்பற்றிய திகைப்பே அங்கு நிலவியது.[34]

தனிப்பட்டவர் ஒருவர், அவரின் மரணத்திற்கும், கர்த்தரின் இறுதிகால வருகைக்கும் இடையிலான காலத்தில் சுய உணர்வோடு காணப்படுவாரா என்ற காரியத்தைப் பற்றி பவுல் எதுவும் கூற முனையவில்லை. 1 கொரிந்தியர் 15ல் அது சொல்லப்படவில்லை, வேறெங்கிலும் கூட அதைப்பற்றி அவர் எதுவும் கூறவில்லை. உயிர்த்தெழுதலுக்குப் பின்னான வாழ்வு என்பதில் பவுலின் நம்பிக்கையிலிருந்து, மரணத்துக்குப் பின்பான சரீரமில்லாத வாழ்வு என்பதான கொரிந்தியரின் நம்பிக்கையை Oster வேறுபடுத்திக் காண்பிக்கிறார்.

> ஆவிக்குரிய சரீரம் என்பது விசுவாசியின் தனிப்பட்ட சாவைத் தொடர்ந்து காணப்படும் நிலையையும், தன்மையையும் குறிப் பதல்ல; அது கிறிஸ்து திரும்பிவருதலையும், இறுதிகாலத்தின் சரீரத் தையும் மட்டுமே குறிப்பதாகும்.[35]

**வசனம் 47.** முதலாம் ஆதாம் மற்றும் பிந்தின ஆதாம் இவர்களின் இடையில் காணப்பட்ட தொடர் நிலையை பவுல் காண்பித்தார். பாவத்தினால் கறைப்பட்டு, பலவீனத்திற்கும் கனவீனத்திற்கும்

அடிமையாக்கப்பட்ட சரீரம், மிக மேன்மையான வல்லமை நிறைந்ததுமான ஒரு சரீரமாக கிறிஸ்துவினால் மறுரூப மாக்கப்படவேண்டும். பரலோகத்தின் வாழ்வு, இவ்வுலக வாழ்விற்கு ஒப்பாகக் காணப்படவேண்டும், அதன்படி அவ்விரண்டும் சரீரப் பிரகாரமாகக் காணப்படுவதையே கருத்தில் கொள்ள வேண்டும்.

உயிர்த்தெழுதலை மறுத்தவர்களின் தவறு என்னவென்றால், சரீர முறையான எல்லா வாழ்வையும் அவர்கள் ஒரே மாதிரியாகக் கொண்டார்கள். பூமியில் காணப்படும் ஆதாமில் ஆளுமை கொண்ட பௌதீக சரீரமானது பொருளின்படியும் இயற்கையின்படியும் ஆவிக்குரிய சரீரத்திலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டு, உயிர்த் தெழுந்த இயேசுவில் ஆளுமை ஏற்படுத்திக் கொண்டது. "ஆதாம்" என்ற பெயர் "நிலத்திலிருந்து உண்டானவன்" என்று பொருள் படுகிறது. நிலத்திலிருந்து உருவாக்கப்பட்ட முதலாம் மனிதனாகிய ஆதாமின் சரீரத்தை (ἐκ γῆς χοϊκός, *ek gēs choikos*, மண்ணி லிருந்துண்டானவன்), இரண்டாவது மனிதனாகிய இயேசுவின் உயிர்த்தெழுந்த பரலோகத்தின் சரீரத்தை (ἐξ οὐρανοῦ, *ex ouranou*) வேறுபடுத்தியதின் மூலம் பவுல் தனது கருத்தைத் தெரிவிக்கிறார். இயேசு இவ்வுலகில் அவதரித்து வாழ்ந்திருந்த காலக்கட்டத்தில் அவரின் சரீரம், பவுலின் கருத்தோடு எந்தத் தொடர்பும் கொண்டி ருக்கவில்லை. Ridderbos மிகச் சரியாக இதைக் கூறுகிறார்:

> உலகம் உண்டாவதற்கு முன்பே அவர் காணப்பட்டிருந்ததின் அடிப்படையில் அவரின் மானிட ரூபத்தின் பரலோக தோற்றத்தைப் பற்றி அவர்கள் பேசவில்லை [ἐξ οὐρανοῦ, *ex ouranou*]. அவரின் உயிர்த்தெழுதலின் உண்மையின்படியே, அவரின் மானுடத் தன்மையின் ஆவிக்குரிய பரலோக இயல்பையே அவர்கள் தெரிவித்தார்கள்.[36]

இதன் பொருள் என்னவெனில் இரண்டாவது மனிதனானவர், உயிர்த்தெழுந்த இயேசுவானவர், **பரலோகத்திலிருந்து** இறங்கின வர். அதாவது அவர் பரலோகத்திலுள்ளவர் (NIV). அவர் மரித் தோரிலிருந்து எழும்பி வந்ததால் "அவர் பரலோகத்திலுள்ளவர்." அவரில் உண்மையுள்ளவர்கள், தங்களது சொந்த உயிர்த் தெழுதலில், அவர் பரலோகத்திலுள்ளவர் என்ற படியாக அவரின் தன்மையில் பங்கு கொள்வார்கள். அதன்படி, ஏற்கெனவே கிறிஸ்துவில் ஆரம்பமாகியுள்ள உயிர்த்தெழுதலில் அவர்களுக்குப் பங்கு உண்டாகியிருக்கும். தற்காலத்தில், இயேசு அவருடைய மானுடத்தன்மையின் அடையாளச்சின்னத்தை கடவுளின் பிரசன்னத்தில் தரித்துக் கொண்டுள்ளார் (காண்க பிலி. 3:20, 21). இயேசுவின் பூமிக்குரிய, உயிர்த்தெழுதலுக்கு முன்னான சரீரத்தைக் குறித்து பவுல் எதுவும் கூற முனையவில்லை. சில பகுத்தறி வாதவாளர்கள் உறுதியாகக் கூறுகிறபடி, இயேசு அவனியில் அவதரித்திருந்த காலத்தில் பரலோக

மனிதனாகத் திகழ்ந்தார் என்றும் அவர் கூறவில்லை. அவரின் பௌதீக சரீரம் இப்பூமியில் இருந்த காலத்தில், ஆதாமின் சந்ததியார் யாவரும் பங்கு பெற்றிருந்த மானிடத்தன்மையில் தனது பங்கைக் கொண்டிருந்தது.

**வசனம் 48.** மனித வாழ்வின் இரண்டு விதமான வகைமுறையையே பவுல் தனது காட்சியல் கொண்டிருந்தார். முதலாவதானது, இவ்வுலக வாழ்வு என்பது பூமியின் மண்ணினால் உருவாக்கப்பட்ட சரீரமாகும், அது **பூமிக்குரியது** (ὁ χοϊκός, *ho choikos*). இரண்டாவதானது, பரலோகத்தின் வாழ்வு என்பது பரலோகத்தன்மை கொண்டவைகளினால் உருவாக்கப்பட்ட சரீரமாகும், அது **பரலோகத்துக்குரியது** (ὁ ἐπουράνιος, *ho epouranios*). அப்போஸ்தலன் விட்டு விட்டது என்னவெனில், பௌதீக மாணத்திற்கும், இறுதி காலத்தில் கர்த்தர் நம்மைக் காண வருவதற்கும் இடையிலான காலத்தின் வாழ்வைப் பற்றியதாகும் - இடைப்பட்ட காலத்தின் நிலைமை என்பதாக. புதிய ஏற்பாட்டில் காணப்படும் பவுல் மற்றும் பிற அப்போஸ்தலர்களின் கூற்றுகளை நாம் கருத்தில் கொள்ளலாம் (காண்க 2 கொரி. 5:1-10; பிலி. 1:23; 3:20, 21; 1 தெச. 4:13-17); ஆனால் எல்லாவற்றையும் சோதித்துக் பார்க்கும் போது, அந்த இடைக்காலத்தின் வாழ்வைப் பற்றிய பல்வேறு கேள்விகள் தோன்றுகின்றன. கர்த்தர் திரும்பி வருமளவும் கிறிஸ்துவில் மரித்தவர்களின் பங்கு “நிர்வாணமாய்” காணப்படுமா? (2 கொரி. 5:2, 3). இந்த வேதப்பகுதியின்; ஒரு விளக்கம் அவ்வாறாக உள்ளது. கேள்விகள் தொடர்ந்து காணப்படும், விடைகளையும் நாம் யோசித்துத் தெரிந்து கொள்ளலாம். John McRay அதன் விடைகளை எழுதியது சரியாகவே உள்ளது, “... சரீரத்தின் இறுதியான உயிர்த்தெழுதலையும், இயேசு கிறிஸ்துவோடு மறு படியும் இணைந்து கொள்வதையும் எதிர்பார்த்து வாழும் மகிழ்ச்சிக்கும் விசுவாச வாழ்விற்கும் கட்டாயமானது அல்ல.”[37]

**வசனம் 49. மண்ணானவனுடைய சாயலை** நாம் அணிந்திருக்கிறதுபோல தற்காலத்தின் மாமிச சரீரத்தில் காணப் படுகிறது. **பரலோகத்தன்மை** கொண்டசாயல் கர்த்தரின் உயிரோ டெழுந்த சரீரத்தின் முறையின்படியே வடிவமைக்கப்பட்ட ஒரு சரீரமாகக் காணப்படும் (பிலி. 3:20, 21). பவுலின் கடிதங்களின் பின்னணியில், தற்காலத்தில் பயபக்தியான வாழ்வு வாழ்வதைப் பற்றிய கண்டிப்பான வார்த்தைகள் காணப்படாமல் இல்லை. எதிர்காலத்தைப் பற்றிய φορέσομεν (*phoresomen*, “நாங்கள் சுமந்து கொள்வோம்”) என்பதான குறிப்புக்குப் பதிலாக, புராதன உணரநடைப் பகுதிகளில் போதுமான அளவு அறிவுறுத்தல்கள் காணப்படுகின்றன. φορέσωμεν (*phoresōmen*, “நாம் சுமந்து கொள்வோம்”) என்றும் அதைக் கூறலாம். முந்தினது இந்த சந்தர்ப் பத்தில் மிகப்பொருத்தமாக உள்ளது,

ஆயினும் உரைநடையின் நிரூபணத்தின்படி, பிந்தினது அதிகமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பின்னான பகுதியை நாம் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் பவுல் தமது வாசகர்களை, பரலோகத்தன்மை கொண்ட கிறிஸ்து தமது மக்களை நித்தியத்திற்காக ஆயத்தப்படுத்திக் கொள்ளும்படியாக விடுத்த அழைப்பிற்கேற்றபடியான வாழ்வு முறையைத் தெரிந்து கொள்ளும்படியாக, வேண்டிக்கொள்கிறார்.

## உயிர்த்தெழுதலின் இரகசியம் (15:50-57)

**50சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும்
இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது;
அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை. 51இதோ, ஒரு
இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும்
நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்
போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும்
மறுரூபமாக்கப்படுவோம். 52எக்காளம் தொனிக்கும், அப்பொழுது
மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும்
மறுரூபமாக்கப்படுவோம். 53அழிவுள்ளதாகிய இது அழியா மையையும்,
சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ள வேண்டும்.
54அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது
சாவாமையையும் தரித்துக் கொள்ளும் போது, மரணம் ஜெயமாக
விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.
55மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?
56மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்.
57நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வினாலே நமக்கு
ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.**

மரித்தவர்களின் "இடைக்கால நிலையைக்" குறித்து மிகக் குறைவாக கூறியதற்கு இரண்டு முக்கியக்காரணங்களை பவுல் கொண்டிருக்கலாம் முதலாவதானது, அப்போஸ்தலன் கர்த்தரிடத் திலிருந்து கிடைக்கப்பெறும் வெளிப்படுத்தலையே சார்ந்திருந்தார். இந்தக் காரியத்தில் அவர் எதுவும் பெற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. இரண்டாவதானது, கர்த்தரின் வருகை மிக விரைவில் நடைபெறப் போவதாக பவுல் எதிர் பார்த்திருந்தார். தமது சமகால கிறிஸ்தவர்களின் பௌதீகமரணத்திற்கும், இறுதி காலத்திற்கும் இடையில் எந்த நீண்டகால இடை வெளியையும் அவர் எதிர்பார்க்கவில்லை.

தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதலாம் நிருபம், 1 கொரிந்தியர் எழுதியதற்கு சற்றேறக்குறைய நான்கு ஆண்டுகள் முன்னதாக

எழுதப்பட்டதாகத் தெரிகிறது. பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதியபோது, அவர் தாம் உயிரோடு தங்கியிருப்பவர்களோடு காணப்படுவார் என நம்பியிருந்தார். அவர் எழுதுகிறபடி, "... கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை" (1 தெச. 4:15). 1 கொரிந்தியரில், மேலும் அதிகமான வெளிப்பாடுகள் கிடைக்கப்பெற்ற பிற்பாடு, அவர் தாம் அந்தப்பெரிய நிகழ்வில் உயிரோடு காணப்படுவதில்லை என் அவர் கண்டு கொண்டி ருக்கலாம். "நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்" என அவர் எழுதியுள்ளார் (15:51).

புதிய ஏற்பாட்டுக்காலக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்து திரும்பி வருவதற்காக ஆவலோடு காத்திருந்தார்கள். யாக்கோபு இவ்வாறு எழுதினார், "நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே" (யாக். 5:8; NKJV). பேதுரு தமது முதலாம் கடிதத்தில் கூறியது "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிருக்கிறது" (1 பேதுரு 4:7). கர்த்தர் திரும்பி வருவார் என்பதாக மாத்திர மல்லாமல், விசுவாசிகளுக்கு ஒவ்வொரு நாளும் அந்தப்பெரிய நிகழ்வின் எதிர்பார்ப்பில் கடந்து சென்றது. அவர் வருவார் என்பதற்காக மாத்திரமல்லாமல், ஒரு பழக்கமான துதிபாடலின் வார்த்தைகளில் "இயேசு சீக்கிரம் வருகிறார்" என்றுள்ளது.[38] திருச்சபையின் போதகம் அவர் வெகு சீக்கிரம் வருவார் எனவும், அதன் பின்னர் நாம் எல்லோரும் மாறுதல் (மறுரூபம்) அடைந்து விடுவோம் எனவும் அறிவிக்கிறது.

**வசனம் 50.** பவுல் தனது விவாதங்களை ஒன்று திரட்ட ஆயத்தமாயிருந்தார். உயிர்த்தெழுதலின் சரீரம் உண்டு என்பதை அவர் தெளிவாகக் கூறியதோடு, அந்த உயிர்த்தெழுதலின் சரீரம் மாமிசமும் இரத்தமுமாகிய சரீரத்தோடு இணைப்படுத்திக் கூறப் படக்கூடாதது என்றும் எழுதினார்; அது மனித வாழ்வை மட்டுப்படுத்துகிறது. இந்த மாமிசம் அழிவுக்கு அடிமைப்பட்டுள்ளது; ஆனால் உயிர்த்தெழுதலின் சரீரம் நித்தியத்தையோ அல்லது **அழிவின்மையாகி கடவுளுடைய ராஜ்ஜியத்தையோ சுதந்தரித்துக்** கொள்ள இயலாது. கிரேக்க சிந்தனையாளர்கள் எண்ணிக் கொண்டிருந்தபடி பொருளளவான சரீரம், பவுலுக்கு எதிர் மறையான கூறுகளைக் கொண்டிருக்கவில்லை.

"சரீரம்" என்ற பதம் **மாமிசம்** என்பதோடு எதிர்மறையாகக் கூறப்படும்போது மனிதன் இரண்டு வெவ்வேறு வகைமுறைகளில் காணப்படுவதை பிரதிபலிக்கிறது. இந்த உலகை மட்டும் கருத்தில் கொள்ளும் சந்தர்ப்பங்களின் சில பொழுதுகளில் அப்போஸ்தலன் வேறுபடுத்திக் கூற முடியாதபடி அந்த வார்த்தைகளைப் பிரயோகித் தார் (எ.கா. ரோமர் 2:28 இதன்படி "மாமிசம்" என்பது "சரீரம்"

என்பதற்கு சமமாக உள்ளது). வேறு சில இடங்களில் அவைகள் மனிதனை இரண்டு வித்தியாசமான எண்ணப்பார்வைகளில் நியமிக் கின்றன. பவுல் மனிதரை அவர்களது பலவீனம், சோதனை என்ற முறையில் முன்வைக்கவிழையும் போது "மாமிசம்" என்ற பதத்தைப் பிரயோகித்தார். சரீரம் என்பது காணப்படாத உயிர்த்தெழுதலை எண்ணிப்பார்க்கவும் முடியாத நிலையிலிருந்த அப்போஸ்தலன், மாமிசத்தின் உயிர்த்தெழுதலை எப்போதும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

James D. G. Dunn அதைப்பற்றி இவ்வாறு கூறுகிறார்:

> நமது மாமிசத்தன்மை நமது பலவீனத்திற்கும் இயலாமைக்கும் சாட்சியிடுகிறது (சாதாரண மனிதர்களாக). நமது மரணத்தின் தப்பித்துக்கொள்ள இயலாத தன்மை, பசி, ஆசைகள் இவைகளை திருப்திப்படுத்துவதில் நாம் சார்ந்துள்ள நிலைமை, இவ்வாறான பசி, ஆசைகள் போன்றவற்றை கட்டுப்படுத்த இயலாத நிலை இவைகளை மனிதனில் காண்கிறோம்.[39]

"மாமிசம்" என்பதை விட "சரீரம்" என்பது மனித வாழ்வைக் கருத்தில் கொண்டு பயன்படுத்தக் கூடிய அதிக நேர்மறையான பதம் ஆகும். பவுலும் பழைய ஏற்பாட்டு வெளிப்பாடுகளும் ஒரு சரீரத்தைக் கொண்டிருப்பது, உயிரோடுள்ள ஆத்துமா எவ்வாறு காணப்பட வேண்டும் என்பதை உள்ளான விதத்தில் புரிந்து கொள்வதற்கு ஒரே மாதிரியாகக் காணப்படுகின்றன.

Joachim Jeremias பவுலின் சாரம்சத்தை அதிகாரம் 15ன் இறுதி வசனங்களில், உயிரோடுள்ளவர்களுக்கு கர்த்தரின் திரும்பி வருகை எவ்வாறு காணப்படும் என்பதற்கும், மரித்துப்போனவர்களுக்கு அந்த நிகழ்வு எவ்வாறாக அர்த்தம் பெற்றுக் கொள்ளும் என்பதற்கும் உள்ள வேறுபாட்டை எண்ணிக் கொண்டு பார்வையிடுகிறார்.[40] ஜெரேமியா கூறகிறபடி, அப்போஸ்தலன் "மாமிசமும் இரத்தமும்" என்பதை உயிரோடிருக்கிறவர்களைக் குறிக்கும்படியாக எண்ணிக் கொள்ளுகிறார்; "அழிவிற்குரியது" என்பதை மரித்தவர்களுக்கு சமானமாக அவர் பயன்படுத்தினார் (φθορά, *phthora* - "அழிவிற்குரியது"; KJV). 15:53யில் காண்கிறபடி, "அழிந்து போகக் கூடியவர்கள்" என்பவர்கள், கர்த்தர் திரும்பி வருகிறதற்கு முன் மரித்துப்போகிறவர்கள்; "சாவுக்கேதுவானது" என்பது உயிரோடி ருப்பவர்களைக் குறிப்பதாகும். உயிரோடிருக்கிறவர்களும் மரித் தோர்களும் உயிர்த்தெழுதலில் எவ்வாறு பங்கு பெறுவார்கள் என்பதை கர்த்தரின் வருகை தீர்மானிப்பதைப் பற்றிய விளக்கத்தை பவுல் வழங்குகிறார். ஜெரேமியாவின் கூற்று அப்போஸ்தலனின் காரண விளக்கங்களுக்கு ஏற்றுக்கொளளக் கூடிய பதிலைத் தருகிறது. எனினும் இந்த அதிகாரத்தில் எங்கும் கர்த்தருடைய வருகைக்கு முன்னதாக மரித்துப்போனவர்களைக் குறித்த கரிசனையில் கொரிந்தியர் ஆழ்ந்து

காணப்பட்டார்கள் என்பதாகக் காணப்படவில்லை. தெசலோனியக் கிறிஸ்தவர்களின் கேள்விகளை கொரிந்துவில் கொண்டு வர நாம் முனைப்பு கொள்ள வேண்டாம் (காண்க 1 தெச. 4:13).[41]

**வசனம் 51.** உயிர்த்தெழுதலின் சரீரத்தின் இயற்கைத் தன்மையும், கடவுளின் மக்கள் அழிவுக் கேதுவானதை அழியாமை யோடு பரிமாற்றிக் கொள்ளும் முறையும் மனிதப்புரிந்து கொள்ளு தலுக்கு அப்பாலுள்ளது; அது ஒரு இரகசியம். ஓரளவில் அப்போஸ்தலன் கர்த்தரிடமிருந்து வெளிப்பாட்டைப் பெற்றி ருந்தார். அதன் மூலம் அந்தப்புதிரின் திரைப்பகுதி நீக்கப் பட்டிருந்தது. கர்த்தரின் வருகையின் போது சில விசுவாசிகள் உயிரோடு காணப்படுவார்கள்; எல்லாரும் மரித்துப் போயிருக்க மாட்டார்கள். கர்த்தரின் திரும்பிவருதலின் காலத்தில் உயிரோடிருந் தாலும்சரி, மரித்தோருடன் காணப்பட்டாலும் சரி, எல்லோருமே மறுரூபமடைவார்கள் என்பது சத்தியமானது. மாமிசமும் இரத்தமும் கொண்ட அழிவிற்கேதுவான சரீரம் உயிர்த்தெழுதலின் சரீரமாக மறு உருபெற்றுவிடும். பொருள் என்பது உள்ளானபடி அழிவிற் கேதுவானது என்ற தேற்றத்தின்படி சரீர உயிர்த்தெழுதலை தள்ளுபடி செய்துவிட்ட கிரேக்க சிந்தனையாளர்கள் தவறான கருத்தைக் கொண்டுள்ளார்கள். ஆதிமுதலே பொருளளவான உலகை கடவுள் நல்லது என்றே கூறினர். **நாம் எல்லாரும் மாற்றுரு பெற்றுக்கொள்வோம்** என்பது, வரப்போகிற காலத்தில் கிறிஸ்தவர் களுக்கு பொருளில்லாத (உடலற்ற, சரீரமில்லாத) தன்மையை சுட்டிக் காட்டுவதாகக் காணப்படவில்லை.

**வசனம் 52.** இறுதி காலம் வரும்போது, காலம் கடந்து போய்விடும். முன்நிழல், முன்குறிப்பின் நீண்டகால முறைகளின் இறுதியில் கர்த்தரின் முதல் தோற்றம் காணப்பட்டது. இரண்டாவது வருகை (எபி. 9:28) வித்தியாசமான விதத்தில் அமைந்திருக்கும். (திருடன் இரவில் வருகிறவண்ணமாக) அவர் எதிர்பாராத முறையில் வருவார் (மத். 24:43; லூக். 12:39; 1 தெச. 5:2; 2 பேதுரு 3:10). நம்பிக்கை, மனந்திரும்புதல், எதிர்பார்ப்பு இவைகளின் காலம் முடிந்து போயிருக்கும். எக்காளம் தொனிக்கும் (ἐν ἀτόμῳ, *en atomō*) ஒரு இமைப்பொழுதில், கடவுளின் வல்லமையினால் மாறுதல் அடைவதான நிகழ்வுகள் நடந்து விடும்.

அந்த நிகழ்வுகள் உடனுக்குடன் நடைபெறுவதை, தமது வாசகர்களுக்குச் சொல்லி விளக்குவதோடு அப்போஸ்தலன் முடித்துவிடவில்லை. இறுதி காலத்தை அடையாளப்படுத்தும் எக்காள தொனியைப் பற்றிக் கூறி அவர் ஒரு ஒப்புடைமை ஏற்படுத்துகிறார் (காண்க மத். 24:31; 1 தெச. 4:16). எக்காளத்தொனி கேட்கப்படும்போது, **மரித்தோர் அழிவில்லாததாய் எழுந்திருப் பார்கள்**; உயிரோடிருப்பவர்கள் **மறுரூபமடைவார்கள்**; அப்போது எல்லோரும் மாற்றம் பெறுவார்கள். உயிர்த்தெழுதலின் சரீரம் மாமிசத்தின்

முழுமையற்ற நிலையை விட்டுச் சென்று விடும் இவைகளின் இறுதியான விளைவு பரலோகத்தன்மை கொண்ட அழிவிற்குரியதல்லாத சரீரமாயிருக்கும்.

தவறான போதகங்களை மதிப்பிழந்து போகச் செய்வதற்காக பவுல் நிறுத்திக் கொள்ளவில்லை. உதாரணமாக, எடுத்துக் கொள்ளப்படுதல், பூமியில் கிறிஸ்துவின் ஆயிரம் ஆண்டு ஆட்சி போன்றவைகள். பொன்தளம் போட்டவீதிகள், சதுரமான அநகரம் என்ற விளக்கங்களை, யோவானின் தரிசனங்களைப்பற்றிய கவிதைகளில் காணும்படியாக விட்டுவிட்டார் (வெளி. 21:16-21). விசுவாசத்தின் இந்நாட்களில் கடவுளின் மக்கள் எளிமையான விசுவாசத்தோடு அவரைப்பற்றிக் கொள்ள வேண்டும் “நாம் வேண்டிக் கொள்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு” (எபே. 3:20). கடவுள் கிறிஸ்துவில் விசுவாசிகளுக்கு வாக்குத்தத்தம் அருளிய நித்திய வாழ்வு சரீரப்பிரகாரமான வாழ்வோடு அமைந்திருக்கும் என்பதை நிலை நிறுத்திக் கூறுவதே அப்போஸ்தலனின் நோக்கமாயிருந்தது. இந்தச் சூழலில் கிறிஸ்துவிற்கு வெளியே காணப்படுகிறவர்களைக் குறித்து எதுவும் கூற பவுல் விரும்பவில்லை. இரட்சிக்கப்பட்டவர்களைப் பற்றியே அவர் அதிக அக்கறை கொண்டிருந்தார்.

**வசனம் 53.** 15:50ல் எதிர்மறையாகக் கூறினதையே, அப்போஸ்தலன் அடுத்ததாக நேர்மறையாகக் கூறுகிறார். சரீரத்தின் உருவமைப்பு மாறிவிடும் என்பதான நிலையில் கர்த்தர் திரும்பி வருதலை எதிர் பார்த்திருக்கும் கிறிஸ்தவர்கள் எவ்வாறிருப்பார்கள் என்பதற்கும், எக்காளத்தொனி கேட்கும் போது எவ்வாறு காணப்படுவார்கள் என்பதற்கும் இடையில் காணப்படும் தொடர்நிலையை பவுல் முக்கியப்படுத்திக் கூறுகிறார். **அழிவுள்ளது அழியாமையைத் தரித்துக் கொள்ளவேண்டும்.** இக்காலத்தும், இனிவரப்போகிற காலத்தும், சரீரமும் ஆத்துமாவும் இணைந்து காணப்பட வேண்டியது இன்றியமையாதது, என்பதில் பவுல் நம்பிக்கை கொண்டிருந்தார்.

**வசனம் 54.** சரீரம் இல்லாத, ஆவிகள் அலைந்து திரிகிறதான அல்லது “உலக ஆவியில்” ஒன்றிப்போகும் ஒரு வாழ்வைக் குறித்து புறஇனத்தவரின் அப்போஸ்தலன் சித்தரிக்கவில்லை. **அழிவுள்ளது அழியாமையைத் தரித்துக்** கொள்ளவேண்டும் என்று சொல்லப் படுவதில் சரீர வாழ்வைக் குறித்த எந்தக் கேள்வியும் எழும்ப வில்லை. சில இடங்களில் “கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுதல்” என்பதான உருவகத்தை பயன்படுத்தி கிறிஸ்தவனாவதை அப்போஸ்தலன் எழுதியுள்ளார். இது ஒரு உடையை அணிந்து கொள்வது போன்றதாகும். “உயிர்த்தெழுதல்” என்பது, நித்தியவாழ்வுக்கான

ஆயத்தத்தில் ஒரு மாறுதல் ஏற்படுத்திக் கொள்வதை அறிவிக்கிறது. உயிரோடிருப்பவர்கள், கர்த்தரின் வருகையின் போது, ஒரு சரீரத்தை இன்னொன்றிற்காக மாற்றிக் கொள்வது என்பதும், மரித்தவர்கள் உயிர்த்தெழுதலின் சரீரத்தை தரித்துக் கொள்வார்கள் என்பதும், பவுலின் அவசியமான முக்கியமான காரியங்களின் உலகத்தில் காணப்பட்டிருக்கவில்லை.

எக்காளம் தொனிக்கும்போது, "அழிவுள்ளது" "அழியாமையைத்" தரித்துக் கொள்ளும்போது, ஆதி நாட்களில் ஏற்பட்ட கடவுளின் வெளிப்பாடுகளின் நிறைவேறுதலாகவே அது காணப்படும். ஏசாயா 25:8யை அப்போஸ்தலன் எடுத்துக் கூறுவது சுருக்கமாக ஆனால் குறிப்பாக உள்ளது: **மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது.** பவுல் தமது வாசகர்கள் ஏசாயாவின் வார்த்தைகள் கர்த்தரின் வருகையைப் (*parousia*) பற்றியதே என்று புரிந்துகொள்ள வேண்டும் என்றும், அது கடைசி எக்காளத்தொனி கேட்கப்படும் தருணத்தைப் பற்றியதே என்றும் வலியுறுத்திக் கூறுவதாக நாம் எண்ணிக் கொள்ள வேண்டியதில்லை. தீர்க்கதரிசியின் எண்ணத்தில் கொள்ள வேண்டியதில்லை. தீர்க்கதரிசியின் எண்ணத்தில் அந்த வார்த்தைகள் அதன் தனிப்பட்ட பொருளைக் கொண்டுள்ளன. ஆனால் பவுல் தாம் விளக்கிக் கொண்டிருந்த நிகழ்வுகளுக்குப் பொருத்தமாக அவைகள் அமைந்துள்ளதைக் கண்டு கொண்டார்.

**வசனம் 55.** பவுலும் பிற புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும், பழைய ஏற்பாட்டுக் காரியங்களை எடுத்துக் கூறி, அவைகள் கடவுளின் சித்தம் கிறிஸ்துவின் மூலமாக கிரியை செய்கிறதை சுட்டிக்காட்டினார்கள் இந்த சாதுரியத்தை வேதாகம ஆய்வாளர் களும், விளக்குனர்களும் கண்டு வியந்து போனார்கள். ஓசியாவின் குறிப்பை அப்போஸ்தலன் எடுத்துக் கூறியதும் அவ்வாறாக மெச்சப்படத்தக்கதே. 1 கொரிந்தியர் 15:55 யைப் பற்றி வார்த்தை யளவானது மட்டுமல்ல என்று சொல்லப்பட்டது. ஓசியா 13:14ல், "மரணமே, உன் வாதைகள் எங்கே? பாதாளமே உன் சங்காரம் எங்கே? மனமாறுதல் என் கண்களுக்கு மறைவானதாயிருக்கும்" என்றுள்ளது. NASB இதன் தொடர்பான வரிகளை எடுத்துக் காண்பிக்கிறது. எப்பிராயீமோடுள்ள கடவுளின் உறவே ஓசியாவின் கருத்துப் பொருளாகும், ஆனால் பவுல், கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் மூலமாக மரணத்தை வென்றவர்களின் வெற்றித் தொனியை எடுத்துக் கூறுவதற்காக தீர்க்கதரிசியின் வார்த்தைகளை பிரயோகிப்பதற்குப் பவுல் துணிவு கொண்டார்.

மரணத்தையும் கல்லறையையும் வெறுத்து இகழ்வதாக அப்போஸ்தலன் அவைகளை உருவகப்படுத்தியுள்ளார். "நீ எங்கே விடப்பட்டாய்?" என்று அவர் மரணத்திடம் கூறுகிறார். "இப்போது தேவகுமாரன் கடவுளின் கிருபையை மனிதகுலத்திற்கு கொண்டுவந்

துள்ளபடியால்" காலங்களினூடே மரணம் என்பது தவிர்க்க முடியாதபடி வாழ்வின் முடிவுரையாகக் காணப்படுகிறது. ஓசியாவின் வார்த்தைகளைத் தழுவி, பவுல் கூறுவதென்ன வென்றால், "மரணமே, எந்த வெற்றியும் இல்லை, எந்தக்கருத்தும் இல்லை" கிறிஸ்துவிலேயே நமக்கு வாழ்வு உண்டு.

மொத்தமாகக் கூறும்போது, 1 கொரிந்தியரில் பவுல் பிரச்சினைகளைக்கையாடினார். உள்ளான சச்சரவுகள், அறநெறி தவறியநிலை, போதகத்தில் குழப்பம், இம்மாதிரியான காரியங்களால் நோய்ப்பட்டிருந்த ஒரு சபையை சரியான வழியில் திருப்பி அமைக்கும் படியாக உதவவே அவர் முனைந்தார். பெரும்பாலான காரியங்களில். போதகத்தைக் குறிக்க பல்வேறு விளக்கங்களில், அமைப்புகளில் தலையிடுவதைத் தவிர்க்கவே அவர் விருப்பம் கொண்டார். ஆயினும் போதகங்கள் ஆழமான பொருட்களைக் கொண்டிராமல் மேலோட்டமாகவே காணப் பட்டன. செயல்முறை, அறநெறி, அமைவுமுறை, வேத இறையியல் இவைகளுக்கிடையேயான துல்லியமான வேறுபாடுகளை, பின் காலக் கிறிஸ்தவர்கள் கண்டுபிடித்துக் கொள்ளும் படியாக விட்டுவிட்டார். அறநெறி முறைகளும், போதகங்களும், பிரிந்து சென்று பின்னர் சந்தர்ப்பத்துக்கேற்றபடியாக இணைந்து விடும் இரண்டு வழிகள் அல்ல; அவைகள் பிரிக்க முடியாதவை.

**வசனம் 56.** ரோமர் 4-7 அதிகாரங்களில், பவுல் சட்டத்தின் செயல்பாடுகளையும், விசுவாசத்தின் கீழ்ப்படிதலையும் குறித்து கடவுளின் கிருபை நிறைந்த வரம் இயேசு கிறிஸ்துவில் நிறைவேறினதை விளக்கமாகக் கூறியுள்ளார் (காண்க ரோமர் 1:5; 16:26). அவர் கொரிந்துவில் குளிர் காலத்தில் காணப்பட்டபோது, நான்கு ஐந்து ஆண்டுகளுக்கப்பால், ரோமரின் சபைக்கு எழுதினது மிகச் சரியானபடி அமைந்துள்ளது (காண்க அப். 20:2, 3). ஓசியா 13:14 யை 1 கொரிந்தியர் 15:55ல் எடுத்துக் கூறினது. பவுலின் வழக்கமான முறையைக் காண்பிக்கிறது. **மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் வலிமை நியாயம்.** பவுல் அவர்களோடு தரித்திருந்த வேளைகளில், அவர் பாவத்தைக் குறித்தும் நியாயப் பிரமாணத்தைக் குறித்தும் திரும்பத்திரும்பக் கூறியவைகளை கொரிந்தியக் கிறிஸ்தவர்கள் கேட்டறிந்திருந்தார்கள் (அப். 18:11). இயேசு தாம் சிலுவையில் செய்த தியாகத்தின் மூலமாக, பாவத்தின் நச்சை இழுத்துப்போட்டு, அதன் கூர்மையை மாற்றிப் போட்டார். கடவுளின் கிருபை நிறைந்த வரத்தினால் அவர் நியாயப் பிரமாணத்தை மேற்கொண்டுவிட்டார்.

**வசனம் 57.** கடவுளின் ஆர்வத்தின் மூலமாகவேதான், பாவம், மரணம், நியாயப்பிரமாணம் இவைகளை, கர்த்தரின் வருகையின் முன்பாக அறிந்திராத முறையில் இப்போது கண்டு கொள்ள முடிகிறது. கிறிஸ்தவர்களுக்கு கடவுள் வெற்றியைக் கொடுத் துள்ளார். இந்த

வெற்றி நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் விசுவாசத்தால் வரும் வெற்றியாகும் (காண்க 1 யோவான் 5:4). அகஸ்டின் தமது பிற்கால வாழ்வில் உண்மையுள்ள வர்களுக்கு ஏற்படும் சோதனையைப் பற்றி எழுதியுள்ளார். அதில் கடைசியாக, அவர் 1 கொரிந்தியரின் இந்தப் பகுதியை எடுத்து விளம்பியது என்னவென்றால், சிலபொழுதுகளில் நமது பாவங் களில் காணப்படும் ஒரு காரியம், "நமது சொந்த பலத்தில் நம்பிக்கையைப் பற்றிக் கொள்வது அல்லது வெற்றி கிடைக்கும் போது அவரது கிருபையை சார்ந்திராமல் அதற்கு நமது பெலத்தையே காரணமாகக் கொள்வது ஆகும்."[42] விசுவாசத்தின் கீழ்ப்படிதலில் மனித பொறுப்பை விசுவாசி மறக்காத வரைக்கும் இறையியலாளரின் இந்த கருத்து நன்மதிப்பைக் கொண்டுள்ளது.

கிறிஸ்து மரித்தோரிலிருந்து சரீர உயிர்த்தெழுதலைப்பெற்றுக் கொண்டபடியினால் கிறிஸ்தவனின் நம்பிக்கை பாதுகாக்கப் படுகிறது. அதைத் தொடர்ந்து, அதன் விளைவாக ஒரு பொதுவான உயிர்த்தெழுதலும் உண்டு. இயேசுவின் வெற்றுக் கல்லறையில்லாத போது, சிலுவையின் வெற்றி என்பது வெற்றிடமாகவே (பொய்யானதாகவே) காணப்படும். சரீர உயிர்த்தெழுதலின் முதற் பலனானவர்களான விசுவாசிகள் என்றென்றும் அவரோடு வாழ்வார்கள் என்பதான கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படையான நம்பிக்கைக்கு புறமுதுகு காட்டுவது கொரிந்தியரால் ஏற்றுக் கொள்ளக் கூடாததாகக் காணப்பட்டது. இந்த உலகத்தில் எவ்வளவு நிச்சயமற்ற நிலைமை, குற்றங்கள், வேதனைகள் நிறைந்து காணப் பட்டாலும் நித்திய ஜீவன் என்ற நம்பிக்கையின்படியே தான் நாம் யாவையும் சகித்துக் கொள்ளமுடிகிறது.

## ஒரு முடிவான உரை (15:58)

**58 ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள்படுகிற பிரயாசம் விருதாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகிறவர்களாயும் இருப்பீர்களாக.**

**வசனம் 58.** சரீர உயிர்த்தெழுதலைப்பற்றிய தமது போதனை களை, வாழ்விற்கான அதன் குறிப்புகளுக்கு நேராகச் சென்று பவுல் முடிக்கிறார். உயிர்த்தெழுதல் என்பது நிச்சயமான அறியப்பட்ட தொன்றானபடியால், பவுல் தமது வாசகர்களை புதுப்பிக்கப்பட்ட உண்மைக்கு நேராய் வழிநடத்தினார். புதிய ஏற்பாட்டின் இறுதிகால எச்சரிப்பு என்பது, அதாவது கர்த்தருடைய திரும்பிவருதல் காணப்படும் என்ற கருத்து, உண்மையான கிறிஸ்தவ வாழ்வை, அதன்

அறநெறிகளிலும், அதன் அறிக்கையான பயன் பாட்டிலும் ஊக்குவிக்கும்படியான சேவை செய்கிறது. கீழ்ப்படிதலுள்ள விசுவாசிகள் விசுவாசத்தின் மூலமாக கிருபையினால் இரட்சிக்கப்படுகிறபடியால், நாம் இரட்சண்ய யாத்ரீகர்கள் என்ற நிலையில், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகிறவர்களாயும் இருப்பீர்களாக. நாம் ஏன் அவ்வாறு காணப்பட வேண்டுமென்றால், நமது கிரியைகள் கர்த்தருக்குள் வீணாகப் போவதில்லை என்பதை நாம் அறிவோம். நாம் ஒவ்வொருவரும் ஆவிக்குரிய ஒரு சரீரத்துக்கு உரிமை கொண்டவர்களாகவும், கர்த்தரோடு நித்திய நித்திய காலமாக ஆளுகை செய்கிறவர் களாகவும் எழும்புவோம் என்பதை அறிந்துள்ளபடியால், நாம் அவ்வாறான கிரியையில் பெருகியிருக்க வேண்டும்.

விசுவாசிகள் ஒரு உயரிய அறநெறி தளத்தில் காணப்பட்டு, கிறிஸ்துவுக்குள் கனிதரும்படியாக கிரியை செய்வதற்காக பவுல் அவர்களை ஊக்குவிக்கிறார். விசுவாசத்தின் மூலமாகக் கிடைக்கப் பெறும் கிருபையினாலுண்டாகும் விசுவாசம் நற்செயல்களுக்கோ, கிரியைகள் நிறைந்து காணப்படுவதற்கோ தடையாக இருப் பதில்லை. கடவுள் கிருபை நிறைந்தவராயிருப்பதால், ராஜ்ஜியத்தின் உண்மையான கிரியை மிக முக்கியமானதாக உள்ளது; அதன் மூலம் பிறர் யாவரும் அவரது கிருபையில் கொண்டு வரப்பட ஏதுவாகும்.

## நடைமுறை பயன்பாடு

### எவ்வாறான சரீரம்?

பல நூற்றாண்டுகளாக, நம்பிக்கையற்ற வர்க்கத்தினர் கிறிஸ்தவர்கள் சரீர உயிர்த்தெழுதலில் உறுதியாகக் காணப் படுவதை இகழ்ந்து கூறியுள்ளார்கள். அவ்வாறான இகழ்ச்சி எண்ணம் கொண்டவர்கள் கீழ் தரப்பட்டுள்ள மாதிரியின் காட்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள்:

> ஒரு மனிதன் ஒரு ஆப்பிள் பழத்தை உட்கொள்கிறான். அவனது சரீரம் அந்தப்பழத்தை ஜீரணிக்கிறது; அதன் மூலக்கூறுகளும், அதன் அணுக்களும் அவனது உடலமைப்பின் எல்லாபாகங் களிலும் சிதறப்பட்டுவிடும். அவன் மிகச் சீக்கிரமாகவே மரிக்கிறான், பின்னர் அடக்கம் பண்ணப்படுகிறான். சிலகாலம சென்றபிற்பாடு, அவன் அடக்கம் செய்யப்பட்ட இடம் மறக்கப் பட்டுவிடும். அவனது அழிந்து போன சரீரத்தின் நேர் மேலான இடத்தில் ஒருவர் ஒரு ஆப்பிள் மரத்தை நடுகிறார். அதன் வேர்கள் நிலத்தின் உள்ளாகப் போய்ச் சென்று, அந்த உயிரியல் பொருள் அந்த மரத்திற்கு உரமாகப் பயனளிக்கிறது. மரித்தவனின் சரீரத்திலுள்ள மூலங்களும் அணுக்களும் புதிய ஆப்பிள் பழங்களின் உருவாக ஏற்பட்டு, பிற மனிதர்களால் உட்கொள்ளப்படுகிறது. ஒரே மூலங்கள் சில கால

இடைவெளியில், இவ்வாறாக இரண்டு வேறு சரீரங்களின் பாகங்களாகக் காணப்படுகின்றன.

இந்த கதையின் பல்வேறு விதங்கள் (உருக்கள்) உண்டு. ஆனால் இறுதியான கேள்வி ஒன்றேயாகும். உயிர்த்தெழுதலில், ஒரு சரீரத்தை விட அதிகமானவைகளின் பாகங்களாகக் காணப்பட்ட அணுக்களும் மூலக் கூறுகளும் எவரின் சரீரத்தில் உரிமை கொண்டாடப் படும்?

கிரேக்கர் பவுலுக்கு முன் வைத்த அதே மாதிரியான எதிர்க் கேள்விகளையே நவீனகால சந்தேக சிந்தனையாளர்களும் எழுப்புகிறார்கள் - "மரித்தோர் எவ்வாறு எழுப்பப்படுவார்கள்? அவர்கள் எவ்வாறான சரீரத்தோடு வருவார்கள்?" (15:35). பவுலின் பதிலுரை புராதனகாலத்திற்கும், நவீன காலத்திற்கும் போது மானதாக உள்ளது அந்தக் கேள்விகள் சம்பந்தமில்லாதவை என அவர் கூறுகிறார். உயிர்த்தெழுதலில் காரியங்கள் எவ்வாறு காணப்படும் என்று சதுசேயர் இயேசுவிடம் கேட்டு விளக்கம் தேடியபோது, கர்த்தரின் பதிலும் இதைப் போன்றே இருந்தது. "நீங்கள் தவறான சிந்தனை கொண்டுள்ளார்கள்," "வேதத்தையும் கடவுளின் வல்லமையையும் தவறாகப்புரிந்துள்ளீர்கள்" என அவர் கூறினார் (மத். 22:29).

கடவுள் வெவ்வேறு விதமாக சரீரங்களை உருவாக்கினார் என பவுல் தெளிவுப்படுத்தினார். அவர் அவர்களை வெவ்வேறு மாதிரியான, மகிமையில் படைத்தார் (1 கொரி. 15:35-41). உயிர்த்தெழுதலின் சரீரத்தைப்பற்றிய தன்மையின் எந்த விபரங்களையும் அவர் வழங்கவில்லையாயினும், அவர் இதைத் தெளிவாகக் கூறியுள்ளார் "மாமிசமும் இரத்தமும் கடவுளின் ராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லை" (15:50). வருங்காலத்தில் விசுவாசிகளின் சரீரங்கள் பூரணமானபடியும், முழுமையானபடியும் ஐக்கியப்படும் படியாக வாழ்வின் நித்தியமான விசைகளோடு ஒன்றிணைக்கப்படும், பூமிக்குரிய வாழ்வின் கட்டிடத் தொகுதி களான அணுக்களுக்கும் மூலக்கூறுகளுக்கும் கடவுள் மட்டுப் பட்டவரல்ல. கடவுளின் மக்களின் சுதந்திரம் கடவுள் பரலோக வாழ்விற்காக வடிவமைப்பதின் மாதிரியின்படியான சரீர வாழ்வாயிருக்கும். பரலோக வாழ்வானது, இவ்வுலக வாழ்வில், உணர்விலும், தோற்றத்திலும்கூட தொடர்பு முறையில் காணப்படும் என்பதால், பரலோக சரீரமானது தற் காலத்தின் அதே மாதிரியான மாமிசத்தோடும் இரத்தத் தோடும் உருவாக்கப்பட்டிருக்காது என்பது வெகு நிச்சயமாக அறியப்படுகிறது.

## மரணத்திற்குப்பின்னான வாழ்வு

தொல்லியலில் ஆய்வு செய்பவர்கள், புராதன காலத்து மக்களின் அடக்கம் செய்யப்படும் முறைகளை சோதனை செய்து அவர்களைப் பற்றிய நிறைய காரியங்களை கற்றுக்கொள்கிறார்கள். *Archaeology*

(செப்டம்பர்\அக்டோபர் 1997) எனப்படும் ஏட்டில் ஸ்கைத்தியர்களைப்பற்றிய ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது. ஸ்கைதியர் என்பவர்கள் கருங்கடலின் வட பாகத்தில் கி.மு. மூன்றாவது நூற்றாண்டு[43] வரை வாழ்ந்து வந்த பழங்காலக் குடியினராகும். அவர்களில் ஒரு முக்கியமான தலைவனின் கல்லறையைத் தோண்டி ஆய்வு செய்தார்கள். அவர் அணிகலன்கள், ஆயுதங்கள், உணவு மேலும் இனியுள்ள வாழ்விற்குத் தேவை யானவை என்று கருதப்பட்ட பல பொருட்களோடு வைக்கப் பட்டிருந்தார். அந்தப் பெரிய மனிதரின் முதன்மை ஆலோசகரும் கழுத்து நெறிக்கப்பட்டு, அவரோடு அடக்கம் பண்ணப்பட்டிருந்தார். அவரது குதிரையும் கூட கொல்லப்பட்டு, அவரோடு அடக்கம் பண்ணப்பட்டிருந்தது, அதே இடத்தில் அவரது கல்லறையின் அருகாமையில், ஒரு முக்கியமான பெண்மணியின் சரீரமும் வைக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது; அது அவரது மனைவியாயிருக்கலாம். அவளோடு கூடவும், வாழ்விற்குத் தேவை யான சில காரியங்கள் வைக்கப்பட்டிருந்தன. இளவயதினளான அவளது அடிமைப்பெண், கழுத்து நெறிக்கப்பட்டு, அவளது கல்லறையிலேயே வைக்கப்பட்டிருந்தாள்.

மரணத்திற்குப் பின்னான வாழ்வில் நம்பிக்கை கொண்டி ருப்பவர் ஸ்கைத்தியர் மட்டுமல்லர். எகிப்தியரின் பிரமீடுகளும், அரசர்களின் பள்ளத்தாக்குகளும், மரணத்திற்குப் பின்னான வாழ்வைப்பற்றிய அவர்களின் எதிர்ப்பார்ப்பில் அவர்கள் கொண்டிருந்த முயற்சிகளின் சாட்சிகளாகும். ஸ்கைத்தியர், எகிப்தியர் போன்றவர்களைப் போன்றே, கிறிஸ்தவர்களும், இவ்வாழ்விற்குப் பின்னான ஒரு வாழ்வை எதிர்பார்த்துள்ளார்கள். கிறிஸ்தவர்களின் நம்பிக்கை எவ்வாறுள்ளது? பிற மக்களின் நம்பிக்கைகளைவிட அது அதிகமாக நிலைப்பட்டுள்ளதா? பவுல் 1 கொரிந்தியர் 15-ம் அதிகாரத்தில் எழுதியுள்ளதை விட அதிக விபரமாக வேதாகமத்தில் வேறெங்கும் எவரும் உயிர்த்தெழுதலைப் பற்றி அதிகமாக எழுதவில்லை.

பவுல் கூறுகிறபடி, மரணத்திற்குப் பின்னான வாழ்வைப் பற்றிய எந்தப் பேச்சும் இயேசுவின் சிலுவை மரணம் உயிர்த்தெழுதல் இவைகளின் காரண விளக்கமின்றி பூரண நிலையில் காணப்பட முடியாது. “ஆனால் இப்போதோ, கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார்” (15:20) என அவர் எழுதினார். அவர் அறிவித்த நற்செய்தியின்படி, வேதவசனங்களும், சரித்திரமும் கூட கர்த்தரின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதல் என்பவைகளையே சுற்றிக் காணப்படுகின்றன (15:3, 4). இந்த எல்லா உறுதிகளும், சுவிசேஷத்துக்கு அடிப்படையானவை எனப்படும் நிலையிலும், உயிர்த்தெழுதல் என்பது மாத்திரம் தர்க்கரீதியாக கொரிந்துவில் அறியப்பட்டிருந்தது. அந்தக் காரணத்துக்காகவே, இயேசு காணப் பட்டதை, தற்போதும் (பவுல் எழுதின காலத்தில்) உயிரோடுள்ள

சாட்சிகளின் ஆதாரத்தில் பவுல் விவரித்தார் (15:5-8). வெற்றுக் கல்லறையும், இயேசு காணப்பட்டதும் சாட்சிகளுக்கு எவ்வளவு மையமாகக் காணப்பட்டதென்றால், அந்தப் பொருள் ஒரு போதும் புதிய ஏற்பாட்டில் மறைந்து போகாத அளவின்படி உள்ளது என்பதில் விளங்குகிறது. இயேசு என்ற தெய்வீகத்திற்கான எல்லா உரிமை கோரல்களும் வளர்ந்து ஓங்கும்படியாக இது அடிப் படையான பொருளாகக் காணப்படுகிறது.

> "இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்க ளெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்" (அப். 2:32).

> "ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள்; அவரைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சி களாயிருக்கிறோம்" (அப். 3:15).

> "தேவனோ அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார். தம்முடனே கூடக் கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குப் போனவர்களுக்கு அவர் அநேக நாள் தரிசனமானார்; அவர்களே ஜனங்களுக்கு முன்பாக அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறார்கள்" (அப். 13:30, 31).

பவுலின் கடிதங்களிலும் இதே மாதிரியான அழுத்தமே காணப்படுகிறது: பவுல் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுந்ததாகக் கூறுவது 1 கொரிந்தியர் 15ன் வசனங்களில் மாத்திரமல்ல. ரோமர் 1:4, 5ல் அவர் எழுதியது, "இயேசு கிறிஸ்துவைக் குறித்து தேவன் … கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர், மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்த ஆவியின் படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயிருக்கிறார்." சுவிசேஷங்களில் லூக்காவும், யோவானும் உயிர்த்தெழுதலைப் பற்றி அதிகமாகக் கூறியுள்ளார்கள். பெண்கள் வாரத்தின் முதல் நாள் அதிகாலையில் கல்லறைக்குச் சென்ற போது, அது வெறுமையாகக் காணப் பட்டதை லூக்கா வரைந்துள்ளார். அங்கு இரண்டு தேவதூதர்கள் காணப்பட்டு, அவர்கள் பெண்களிடம் "நீங்கள் உயிரோடிருக் கிறவரை மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன" என்று கேட்டார்கள் (லூக். 24:1-5). இந்த சுவிசேஷக படைப்பாளர் அதே நாளில் எம்மாவு என்ற கிராமத்துக்குச் சென்று இரண்டு ஆண்களைப் பற்றியும் கூறியுள்ளார். இயேசு அவர்களோடு இணைந்து சென்று, அவர்களோடு உரையாற்றி, பின்னர் ஒரு பொழுதில் அவர்களின் சமூகத்தினின்று விலகிப்போய் விட்டார் (லூக். 24:13-31). இயேசு தமது சீஷர்களுக்குக் கலிலேயாக்கடலில் காட்சி அளித்த ஒரு சம்பவத்தை யோவான் விவரித்துள்ளார் (யோவான் 21:1-14; NIV).

கடந்த காலத்தின் எந்தவொரு நிகழ்வைப்பற்றி அறிந்து கொள்ளவேண்டுமென்றாலும், அந்நிகழ்வுகளின் போது வாழ்ந்த

சாட்சிகளுடன் நடந்து திரிந்து, எதிர்காலத்துக்காக, அதன் சந்ததியினருக்காக அவைகளை விளக்கமாய்ச் சொல்லியுள்ளவர் களிடமிருந்தே அதைப் பெற்றுக் கொள்ள முடியும். அந்த அறிக்கை களின் நம்பத்தகுந்த தன்மை, அந்த சாட்சிகள் எப்படிப்பட்டவர்கள், அவர்கள் உண்மைகளை எவ்வாறு அறிந்தார்கள், வெளியிலே சொல்லப்பட்டதற்கு மாறாக அவர்கள் கண்டது எவ்வாறு உண்மையாயிருந்தது, அவர்கள் தாங்கள் கண்டிருந்ததை வெளியில் கூறின நோக்கம் என்னவாயிருந்திருக்கும் என்பவைகளைப் பொறுத்திருக்கும். என்னவிதத்தில் சோதிக்கப்பட்டா லும், இயேசு மரித்தோரிலிருந்து எழும்பியது, சரித்திரத்தில் மிகவும் அதிகமாக நிரூபித்துக் காட்டப்பட்ட நிகழ்வுகளில் ஒன்றாக உள்ளது.

---

குறிப்புகள்

[1]Homer *The Odyssey* 11. நூல் 11ன் முழுப்பாகத்திலும் மரித்தோரின் உலகை எதிர்கொள்ளும் காரியங்கள் சொல்லப்பட்டுள்ளன. [2]Ben Witherington III, *Conflict and Community in Corinth: A Socio-Rhetorical Commentary on 1 and 2 Corinthians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1995), 299. [3]Gerhard von Rad உபாகமம் 26:5-9ல் சொல்லப் பட்டுள்ளவைகள் இஸ்ரவேலருக்கான அடிப்படைப் போதனைக் கூற்றுகள் என தர்க்கம் பண்ணினர். அவர் அதை இஸ்ரவேலரின் “Credo” என்று அழைத்தார். (Gerhard von Rad, *Old Testament Theology*, vol. 1, *The Theology of Israel’s Historical Traditions*, trans. D. M. G. Stalker [Louisville: Westminster John Knox Press, 2001], 121-22.) [4]அவ்வாறான அணுகுமுறையை Willi Marxen, “Study Two: The Geographical Outline,” in *Mark the Evangelist: Studies on the Redaction History of the Gospel*, trans. James Boyce, Donald Juel, William Poehlmann, and Roy A. Harrisville (Nashville: Abingdon Press, 1969), 66-95ல் காணலாம். [5]Johannes Schneider, “ἔκτρωμα,” in *Theological Dictionary of the New Testament*, ed. Gerhard Kittel, trans. and ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 2:465. [6]F. F. Bruce, *Paul: Apostle of the Heart Set Free* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 463. [7]“The Gospel of Philip (II, 3),” trans. Wesley W. Isenberg in *The Nag Hammadi Library*, James Robinson, dir. (New York: Harper & Row, 1977), 144. [8]Gnosticism ஒருவித ஆரம்பகால மதநம்பிக்கைக்கு விரோதமான கொள்கையாகும். அது கி.பி முதலாம் நூற்றூண்டில் சில சபைகளில் இடறலாகக் காணப்பட்டது. Gnosticism வாதிகளில் சிலர் இயேசுவின் மெய்யான மானிட ரூபத்தை மறுதலித்து வந்தார்கள், வேறு சிலர் அவரது தெய்வீகத்தை மறுதலித்தார்கள். இந்த நம்பிக்கைகளின் கலவைகள், asceticism (உடலை இழந்து), hedonism (மாமிசத்தைத் தூண்டுவது) எல்லாவற்றிற்கும் வழி வகுத்தது. Gnostic வாத நம்பிக்கையிலிருந்தவர்கள் ஒரு காரியத்தை பொதுவாக வைத்திருந்தார்கள்: அவர்கள் உரிமை பாராட்டின படியான மறைக்கப்பட்டிருந்த அறிவின் (*gnosis*) மூலம் வாக்களிக்கப்படும் எல்லாவித அடிப்படையான இரட்சிப்பானது அவர்களுக்கு மாத்திரமே வெளிப்பட்டிருந்தது, என்பதாக. [9]J. Gresham Machen, *The Origin of Paul’s Religion* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1947), 275-76. [10]William F. Orr and James Arthur Walther, *1 Corinthians*, The Anchor Bible (Garden City, N.Y.: Doubleday & Company, 1976), 325.

[11]George Eldon Ladd, *A Theology of the New Testament* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1974), 316. [12]Brevard S. Childs, *Biblical Theology of the Old and New Testaments: Theological Reflection on the Christian Bible* (Minneapolis: Fortress Press, 1992), 580. [13]Everett Ferguson, *Backgrounds of Early Christianity* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 195. [14]Ronald H. Nash, *Christianity and the Hellenistic World* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1984), 70. [15]Alexander

Balmain Bruce, *Apologetics*, International Theological Library (New York: Charles Scribner's Sons, 1892), 246. [16]Ibid. [17]Ladd, 326. [18]Ibid. [19]Augustine *City of God* 13.14. [20]Ibid.

[21]அகஸ்டின் (கி.பி. 354-430), கார்த்தேஜ் என்ற புராதனநகரின் அருகாமையிலுள்ள தகஸ்தே என்ற இடத்தில் பிறந்தார். (நவீன காலத்தில் இது துனிஸ் என்ற பெயரில் உள்ளது.) [22]David E. Garland, *1 Corinthians*, Baker Exegetical Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Baker Academic, 2003), 711. [23]Herman Ridderbos, *Paul: An Outline of His Theology*, trans. John Richard DeWitt (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1975), 25. [24]ரிச்சர்ட் டிமாரிஸ் கொரிந்துவின் கிறிஸ்தவர்கள் மரித்தோருக்காக ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளத்தூண்டும் மார்க்க எண்ணப் பார்வைகளை ஆய்வு செய்தார். (Richard DeMaris, "Corinthians, Religion and Baptism for the Dead [1 Cor. 15:29]: Insights from Archaeology and Anthropology," *Journal of Biblical Literature* 114 [Winter 1995]: 661-82.) [25]Garland, 719. [26]உருவகமாதிரியான இந்தப் புராதனப்பயன்பாட்டின் உதாரணங்கள் Abraham Malherbeல், "The Beasts at Ephesus," *Journal of Biblical Literature* 87 (March 1968): 71-80 தரப்பட்டுள்ளன. [27]ஹெடோனியர் என்பவர்கள் லௌகீகக் கொண்டாட்டங்களிலும், தன்னில் மகிழ்ந்து களிகூருவதிலும் நாட்டங்கொண்டு வாழ்ந்து வந்தார்கள். [28]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3rd ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 1090. [29]Ibid. [30]Garland, 678.

[31]Wayne Grudem, *Systematic Theology: An Introduction to Biblical Doctrine* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1994), 613. [32]Richard E. Oster, Jr., *1 Corinthians*, The College Press NIV Commentary (Joplin, Mo.: College Press Publishing Co., 1995), 398. [33]Augustine *City of God* 13.17. [34]Garland, 735. [35]Oster, 402. [36]Ridderbos, 76, n. 110. [37]John McRay, *Paul: His Life and Teaching* (Grand Rapids, Mich.: Baker Academic, 2003), 419. [38]R. E. Winsett, "Jesus Is Coming Soon," *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [39]James D. G. Dunn, *The Theology of Paul the Apostle* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1998), 78. [40]Joachim Jeremias, "Flesh and Blood Cannot Inherit the Kingdom of God," *New Testament Studies* 2 (1955-56): 151-59.

[41]ஜெரேமியா, "பவுலின் சிந்தனைக் கோர்வைகளுக்குத் தவறாக விளக்கமளித்தார்" என Garland உறுதியாகக் கூறினார். பவுல் வெறுமனே "மானுடரின் பௌதீக வாழ்வு என்ற நிலை"யின் தத்துவத்தை திரும்பத்திரும்பக் கூறிவந்தார் "ஒரே பொருள் கொண்ட இணைத்தன்மை" என்ற அடிப்படையில் (Garland, 741). [42]Augustine *City of God* 22.23. [43]Jan Chochorowski and Sergei Skoryi, "Prince of the Great Kurgan," *Archaeology* 50 (September/October 1997): 32-39.